ANGLO ASIAN MINI MART
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு
பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 6 | 27 ஏப்ரல் — 03 மே 2000 | முழக்கம்: 276

AYNGARAN VIDEO
உங்களுக்குத் தேவையான
ORIGINAL VIDEO, VCD, DVD, CD
மற்றும் தொலைக்காட்சி
நாடகங்கள், பிரபல் மேடை
நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள்
விற்பனைக்கும் வாடகைக்கும்
பெற்றுக் கொள்ளலாம்.
(அனைத்தும் ORIGINAL பிரதிகள்)
80, Burlington Road
New Malden
SURREY KT3 4NU
Pub. Tel: 07939238296

# ஆனையிறவு வெற்றி

## பல்லாயிரம்கோடி ஆயுத தளவாடங்கள் புலிகள் வசம்

***தமிழீழ தேசத்தில் இருந்த சிறீலங்காவின் ஆக்கிரமிப்புத் தளங்களில் ஒன்றான ஆனையிறவுத்தளம் எமது தேசிய இராணுவத்திடம் முற்றாக விழ்ச்சியடைந்தவிட்டது என்ற செய்தியை ஈழமுரசு, அதன் வாசகர்கள் அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றது.***

240 வருடங்களுக்கு மேலாக அந்நிய ஆக்கிரமிப்புப் படைகளின் தளமாக விளங்கிய ஆனையிறவு, கடந்த 22ம் திகதி தமிழ்த் தேசியத்திடம் வீழ்ச்சிடைந்துள்ளது. இந்த மாபெரும் வெற்றி எமது தேசியத்தலைவரின் வழிகாட்டலில் கிடைத்துள்ளது. சர்வதேசத்தை வியப்பில் ஆழ்த்திய ஆனையிறவின் வீழ்ச்சியை உலகெங்கும் இருக்கும் தமிழ் மக்கள் பெரும் எழுச்சியுடன் கொண்டாடிவருகின்றனர்.

ஓயாத அலைகள்-3 இராணுவ நடவடிக்கை, கடந்த நவம்பர் 2ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது முதலே ஆனையிறவுத் தளத்தின் பாதுகாப்பிற்காக சிறீலங்கா அரசு விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தது.

குறிப்பாக கடந்த சில வாரங்களில் ஆனையிறவுத் தளத்தினை காப்பாற்றிக்கொள்ளும் நோக்குடன் சிறீலங்காவின் முப்படைத் தளபதிகளும் பலாலி முகாமில் தங்கியிருந்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அமெரிக்காவின் சிறப்புப் பயிற்சிபெற்ற 53வது படைப்பிரிவின்

(☞ 2ம் பக்கம்)

## ஆனையிறவுத்தள மையத்தில் பட்டொளி வீசும் தேசியக்கொடி

(24.04.00)

ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சியை அடுத்து விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் பானு தமிழீழ தேசியக் கொடியை, தளத்தின் மையப் பகுதியில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஏற்றி வைத்துள்ளார்.

ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சிக்கு கடுமையாகப் பங்களித்த விடுதலைப் புலிகளின் ஆட்லெறிப் படைப்பிரிவின் தளபதியான கேணல் பானு அவர்களுடன், போராளிகளும் ஏராளமான பொதுமக்களும் இந்தக் கொடியேற்ற நிகழ்வில் பங்கெடுத்துக்கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



சங்கப் புறநானூற்றுக் காலத்தை மீட்டெடுத்து தமிழரின் போரியல் கலையின் சிறப்பினை உலகிற்கு மீண்டும் ஒருமுறை காட்டிய ஆனையிறவு வெற்றிக்கு வழிசமைத்த தமிழீழத் தேசியத் தலைவருக்கும், போராளிகளுக்கும், இந்த நீதிப்போரில் பங்கெடுத்த மக்களுக்கும் ஈழமுரசு வாழ்த்துக்களை தெரிவிக்கும் அதேவேளை, தமது உயிர்களை ஈகையாகக்கொடுத்த வீரப்புதல்வர்களுக்காக தலை வணங்கிக்கொள்கிறது.

## 54ம் படைப்பிரிவின் ஆயுதக்கிடங்கு புலிகள் வசம்

(24.04.00)

சிறீலங்கா இராணுவத்தின் பிரிவுகளில் 54ம் படைப்பிரிவு மிகப் பலம்வாய்ந்தது எனக் கருதப்பட்டது. அந்த 54ம் படைப்பிரிவுதான் ஆனையிறவுத்தளத்தில் நிலைகொண்டிருந்தது. இந்த 54ம் படைப்பிரிவு ஆனையிறவுத் தளத்தில் மிகப்பாரியளவான இராணுவ கனரக ஆயுதப்பிரிவைக் கொண்டிருந்தது. ஆனால், தற்பொழுது இந்த இராணுவக் கனரகப்பிரிவு புலிகள் வசமாகியுள்ளது. தமது உயிரைக்காப்பாற்றிக்கொள்வதற்காக பலியான சிப்பாய்கள் தவிர ஏனையவர்கள் இந்த இராணுவக்கனரக ஆயுதப் பிரிவைவிட்டு ஓட்டம்பிடித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிக்கையின்படி 54ம் படைப்பிரிவிடம் இருந்து மூன்று 152மி.மீ ஆட்லெறிகள் (சீனாவில் இருந்து ஜெயசிக்குறுய் நடவடிக்கைக்காக புதிதாக கொள்வனவு செய்யப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது) இரண்டு 122மி.மீ

(☞ 2ம் பக்கம்)

## ஆனையிறவு வீழ்ந்தது இராணுவத்திற்கு பெரும் பின்னடைவு — ரணில்

(24.04.00)

விடுதலைப் புலிகளிடம் ஆனையிறவு இழக்கப்பட்டது படையினருக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கடந்தவாரம் இந்தியாவிற்குச் சென்று வாஜ்பாய் மற்றும் கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோரைச் சந்தித்தி

(☞ 2ம் பக்கம்)

தமிழினி
பல்பொருள் அங்காடி
TAMILINI Cash and Carry
195-197 The Broadway, Southall
Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0181-813 8269
* எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:
பாரிஸ்:
Tel.: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி: Leama
Tel: 0208 2053650
Fax: 0208 2053651

டென்மார்க்: T. சுரேஸ்காந்த்
Møller vej - 23
5800 Nyborg, Denmark.
Tel: 65316155 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin,
Swiss.
Natel: 079 635 02 16

லண்டன்:
தபாற்தொடர்பு
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0181-56 16 877
ஜெயந்தன்: - Tel: 0956908145
ஹரி - Tel: 07887874177
பாஸ்கரன் - Tel: 0181-7698302

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
'EELAMURASU'
P.O Box S-109
Homebush South
N.S.W 2140, Australia.
E-Mail: tccsydney@one.net.au

குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

# 35 போராளிகள் வீரச்சாவு

(24.04.00)

ஆனையிறவு - இயக்கச்சி மண்ணை மீட்டெடுக்கும் இறுதிச்சமரில் 35 போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டுள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தேசியப்புதல்வர்களுக்கு தமிழீழத்தின் பல பகுதிகளிலும் உணர்வுமயமான வீரவணக்க நிகழ்வுகளை பொது மக்கள் நடாத்திவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இவ் ஆனையிறவு மண்ணை மீட்டெடுக்கும் போரில் போராட்ட ஆரம்ப காலத்தில் இருந்து இதுவரை 3000ற்கும் மேற்பட்ட போராளிகள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்ததாக புலிகளின்குரல் வானொலி தெரிவித்திருந்தது.

# படைத் தலைமையகம் முன் பெற்றோர்கள்

(24.04.00)

ஆனையிறவுப் படைத்தளம் தாக்கப்பட்ட செய்தியறிந்த சிறீல்ங்காப் படையினரின் பெற்றோர் உறவினர்கள் கொழும்பு இராணுவத் தலைமையகத்தின் முன்னும், வைத்தியசாலைகளின் முன்னாலும் அதிக அளிவில் கூடி நின்று தமது பிள்ளைகளின் நிலைகுறித்து அறிய முண்டியடித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது பிள்ளைகளைப்பற்றிய செய்திகளை அறிவதற்காக கூடியுள்ள மக்களினால் வைத்தியசாலைப் பகுதி நிரம்பியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஐநூறுக்கும் மேற்பட்ட படையினர் படுகாயங்களுடன் கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். இவர்களில் 350 படையினர் கொழும்புப் படையினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## இலக்கங்கள் மாற்றம்

இலண்டன் தொலைபேசி இலக்கங்கள் மாறுகின்றன. 0181, 0171 என முன்னர் இருந்து வந்த இலக்கங்களுக்கு பதிலாக 0208, 0207 என்ற இலக்கங்கள் மாற்றப்பட்டுள்ளன. இதேவேளை கைத்தொலைபேசியின் முதல் மூன்று இலக்கங்களும் மாற்றப்பட்டுள்ளன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## ஆனையிறவு வெற்றி...

சிப்பாய்கள், ஆனையிறவின் பாதுகாப்பினை உறுதி செய்வார்கள் என்ற திருப்தியுடன் இந்த முப்படைத் தளபதிகளும் இருந்தனர். ஆனால், இராணுவ பேரறிவாளரான எமது தேசியத்தலைவரின் இராணுவ மதிநுட்பத்திற்கு முன்னால், சிறீலங்கா முப்படைத் தளபதிகளும் ஆனையிறவுப் படைத்தளத்தில் பெரும் தோல்வியினைச் சந்தித்துள்ளனர்.

ஆனையிறவுத்தளத்தின் வீழ்ச்சியியை அடுத்து, இதுவரை எமக்கு கிடைத் செய்திகளின் படி ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிப்பாய்கள் பலியாகியுள்ளதுடன், பல்லாயிரம் கோடி டொலர் பெறுமதியான ஆயுத தளவாடங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இதுவே மிகப்பெரிய ஆயுத கைப்பற்றல் எனவும் வர்ணிக்கப்படுகிறது.

சிறீலங்காத் தரப்பில் பலியாகிய அதிகாரிகள் வரிசையில் இதுவரை நான்கு அதிகாரிகள் பலியானதாகக் கூறப்படுகின்றது. பலியானவர்களில் ஆனையிறவுப் படைத்தளக் கட்டளைத்தளபதியான பிரிகேடியர் வெஸ்லி பெர்னாண்டோவும் ஒருவராவார். உறுதிப்படுத்தப்படாத செய்திகளின்படி கேணல் நீல் அக்மிமன, கேணல் வாத்திய ஜெயதிலக, லெப்.கேணல் ஹேவாராட்சி ஆகியோரும் பலியானதாகக் குறிப்பிடப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட ஆயுத தளவாடங்களில் விடுதலைப் புலிகளால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட விபரங்களின் படி ஐந்து ஆட்லெறி சுடுகலன்களும், 12 மோட்டார் எறிகணைச் செலுத்திகள், பல யுத்த தாங்கிகள், துருப்புக்காவிகள், கவச வாகனங்கள், அதிநவீன தொலைத் தொடர்புச் சாதனங்கள், வெடிமருந்துப் பொதிகள் உட்பட மிகப்பாரிய அளவிலான இராணுவத் தளவாடங்கள் கைப்பற்றப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.



பரதநாட்டிய அரங்கேற்றம்
செல்வி சோபனா வரதலிங்கம்
சூரிச் ராதா நடனாலய ஆசிரியை திருமதி ஞானசுந்தரி வாசன் அவர்களின் மாணவியும், திரு. திருமதி. வரதலிங்கம் இராஜினி தம்பதிகளின் ஏக புதல்வியுமான செல்வி சோபனா வரதலிங்கம் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 06.05.2000 அன்று சுவிற்சர்லாந்து நாட்டில், சூரிச் Baumacker Str-19 ல் நடைபெறவுள்ளது.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திரு.திருமதி வரதலிங்கம்
HOHL. STR. 189
8004 Zurich
T.P.N°: 01 /2429047
079/236 0872

# இயக்கச்சியில் புத்த விகாரை

(24.04.00)

இயக்கச்சிப் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறீலங்கா படையினர் அங்கு மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் பெரும் விகாரையொன்றை அமைத்து அப்பகுதியை சிங்களப் பிரதேசமாக மாற்றியிருந்துள்ளனர். அங்கிருந்த அரசமரமொன்றை மையமாக வைத்து நிரந்தரமான கட்டடம் அமைக்கப்பட்டு, பௌத்த சக்கரங்களைக் கொண்டு தோரணவாயிலும், கூம்புக்கோபுரமும் அமைத்திருந்துள்ளனர். அத்துடன் அக்கோவிலில் ஏராளமான புத்த சிலைகளும் காணப்பட்டுள்ளன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## ஆனையிறவு...

ருந்தார். இந்தியாவில் தற்போது தங்கி நிற்கும் இவரிடம், பத்திரிகையாளர்கள் ஆனையிறவுத் தாக்குதல் பற்றி வினாவியபோது, அதற்கு பதிலளித்த ரணில், படையினருக்கு இது பெரும் இழப்பு எனத்தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி உடனடியாக பாராளுமன்றத்தை கூட்டி ஆனையிறவு இழப்புக்களைப் பற்றி தெரியப் படுத்துமாறு கூறியுள்ளது. இது இவ்வாறிருக்க, ஐ.தே.க.வைச் சேர்ந்த கரு.ஜெயசூரிய காயமடைந்த படையினருக்கு இரத்த தானம் வழங்குமாறு பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## 54 படைப்பிரிவின்...

ஆட்லெறிகள், பன்னிரெண்டு 120மி.மீ மோட்டார் எறிகணைச் செலுத்திகள், ஒரு 25மி.மீ பீரங்கி, யுத்த டாங்கிகள், பல கவச வாகனங்கள், கனரக புல்டோசர் இயந்திரங்கள், நீர்த்தாங்கி வாகனங்கள், பேருந்துகள், அதிநவீன தொலைத்தொடர்புச் சாதனங்கள், 50 கலிபர் துப்பாக்கிகள் நூற்றுக்கணக்கான ஆர்.பி.ஜி. செலுத்திகள் மற்றும் கைக்குண்டுச் செலுத்திகள், ஆயிரக்கணக்கான எறிகணைகள் இலட்சக் கணக்கான துப்பாக்கி ரவைகள், தன்னியக்கத் துப்பாக்கிகள், பெரும் தொகையான பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் உட்பட பெருந்தொகையான இராணுவத் தளவாடங்கள் இதுவரை கைப்பற்றப்பட்டுள்ளதாக (ஆயுத மீட்பு இன்னமும் தொடர்கின்றது) அறிவிக்கப்பட்டுள்ளது.

ERRANCES TRAVELS

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,980 Frs. |
| Madras | - | 4,300 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

(ADV)

# கொள்ளையில் ஈடுபட்ட ராஸிக் குழு உறுப்பினர்கள் கைது

(23.04.00)

மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ணர் இல்லத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக சிறீலங்கா இராணுவத்தின் துணைப் படையான ராஸிக் குழுவைச்சேர்ந்த ஐந்து உறுப்பினர்களை தாங்கள் கைது செய்துள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்பட்ட கல்லடியைச் சேர்ந்தவர் ஒருவரை கைது செய்து விசாரித்தபோது இதில் ஈடுபட்டவர்கள் ஐவரும் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

கொள்ளையிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட கைக்குண்டு மற்றும் ஆயுதங்களும், கொள்ளையிடப்பட்ட பணத்தில் அறுபதினாயிரம் ரூபாவுக்கு அதிகமான தொகையும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிசார் கூறியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் இந்தக் கொள்ளையில் ஈடுபட்டதை ஒப்புக் கொண்டு விட்டதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# படைக்கு ஆட்திரட்ட தீவிர முயற்சி

(23.04.00)

சிறீலங்கா படைக்கு ஆட்களைச் சேர்ப்பதற்காக சிங்களப் பகுதிகளில் உள்ள கிராமசேவை உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், அரச உத்தியோகத்தர்கள் வீடுவீடாகச் சென்று பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். சிறீலங்கா படைக்கு ஆட்களைச் சேர்க்கும் இரண்டாம் கட்ட நடவடிக்கை அடுத்த வைகாசி மாதம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. இரண்டாம் கட்ட ஆட்சேர்ப்புப் பணிகள் ஆரம்பிக்க முன்னர், வீடு வீடாகச் சென்று சிங்கள மக்களினதும், இளைஞர்களினதும் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பிரச்சாரம் செய்யவும், சுவரொட்டிகளை ஒட்டவும் திட்டமிட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வைகாசி மாதம் புதிதாக ஆட்களைத் திரட்டும்போது நாடு முழுவதிலும் 150 நிலையங்கள் அமைக்கப்பட்டு தொடர்ந்து 16 வாரங்கள் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட இருப்பதாகவும், தெரிவு செய்யப்படுபவர்கள் அன்றைய தினமே பயிற்சிக்கு அனுப்பப்பட உள்ளதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தென்னையில் மோதி சிப்பாய் பலி!

(23.04.00)

யாழ். காரைநகரில் கடந்த வாரம் இடம்பெற்ற விபத்தொன்றில் சிறீலங்காக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றும் ஒரு கடற்படை அதிகாரி படுகாயமடைந்துள்ளார். காரைநகர் கடற்படை முகாம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, தென்னைமரம் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதால் இந்த விபத்து நேர்ந்ததாகத் படைதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொறிவெடியில் சிக்கி பொலிசார் படுகாயம்

(23.04.00)

பருத்தித்துறையில் கடந்த செவ்வாயன்று பொறிவெடியொன்று வெடித்ததில் சிறீலங்கா பொலிஸ் ஒருவர் பலத்த காயமடைந்துள்ளார். பருத்தித்துறையில் அமைந்துள்ள சிறீலங்கா பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள பாதையில் சென்று கொண்டிருந்தபோதே, இவர் பொறி வெடியில் சிக்கி காயமடைந்து, தனது வலது காலை இழந்துள்ளார். பொலிஸ் நிலையத்திற்கு அருகில் பாதுகாப்பு மிக்க பகுதியில் இந்த பொறி வெடி எவ்வாறு புதைக்கப்பட்டது என்பது குறித்து பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அன்னை பூபதி நினைவு அனுஷ்டிப்பு

(23.04.00)



அன்னை பூபதியின் பன்னிரண்டாவது நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த புதனன்று மீட்கப்பட்டுள்ள வன்னியிலும், கிழக்கிலும் விசேட வழிபாடுகளுடன், நிகழ்வுகள் எழுச்சிகரமாக இடம்பெற்றன. மட்டக்களப்பில் கொக்கட்டிச் சோலைப் பகுதியிலும், படுவான்கரைப் பகுதியிலும் அஞ்சலிக் கூட்டங்களும், அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதில் விடுதலைப் புலிகளின் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியுள்ளனர். இதேவேளை, வன்னிப் பகுதியில் உள்ள முக்கிய சந்திகளில் அலங்கார வளைவுகள் கட்டப்பட்டிருந்தன. அத்துடன் அடையாள உண்ணாவிரதங்களும் மக்களால் நடாத்தப்பட்டன.


## வவுணதீவு வாவியில் கடற்படையினர் மீது தாக்குதல்

(23.04.00)

மட்டக்களப்பு வவுணதீவு வாவியில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த சிறீலங்கா கடற்படையினரை நோக்கி விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் காலை தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இப்படையினர் மீது விடுதலைப் புலிகள் ஆர்.பி.ஜி ரக ஆயுதங்கள் மூலம் தாக்குதலை நடாத்தியதாக தெரியவருகிறது. எனினும் படையினர் தமக்கு இழப்பேதும் ஏற்படவில்லை எனத்தெரிவித்துள்ளனர். இத்தாக்குதலையடுத்த வவுணதீவு முகாமில் இருந்து படையினர், விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ள பிரதேசங்களை நோக்கி எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டதுடன், துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

இதன்போது கன்னன்குடா கண்ணகை அம்மன் ஆலயத்தில் விழுந்து வெடித்த எறிகணையினால் ஆலயம் சேதத்திற்கு உள்ளானதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. கடந்த மாதமும் இந்த வாவியில் வைத்து கடற்படையினரின் வள்ளத்தின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# வீர வணக்கம்



## கப்டன் தமிழிசை

### தெய்வேந்திரம் தேவசுகிதா (வாசினி)

### (வேலணை மேற்கு, தமிழீழம்)

தமிழீழம் வேலணை மேற்கு 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்த தேவசுகிதா (வாசினி) கப்டன் தமிழிசையாக வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

அன்னார், தெய்வேந்திரம் (இந்தியா), தங்கமுத்து (கனடா) அவர்களின் ஆருயிர் மகளும், காலம் சென்றவர்களான சுதந்திரம் - மனோன்மணி, செல்லப்பா - இராசம்மா ஆகியோரின் அன்புப் பேத்தியும், தேவசுதா, தேவலோஜினி (இந்தியா); தேவசீலன், தேவசுரேசன் (சுவிற்சர்லாந்து); தேவதுஷ்யந்தன் (சிங்கப்பூர்); தேவசேனா (கனடா); தேவதயானி, தேவபவானி (இந்தியா); தேவஅருட்குமரன், தேவரஞ்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருச்செல்வம், சிவநேசராசா (இந்தியா); சந்திராவதி (கனடா); சந்திரிகா (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் உற்ற மைத்துனியும், தம்பதிகளான காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் உமாராணி (இலங்கை); நடராஜா, புஷ்பராணி (ஜேர்மனி); காலஞ்சென்ற நடராசா மற்றும் அம்பிகாதேவி (தமிழீழம்), காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் அங்கயற்கண்ணி (தமிழீழம்) ஆகியோரின் பெறாமகளும், தம்பதிகளான சிவஞானம் (தமிழீழம்); சிந்தாமணி (ஐக்கிய இராட்சியம்); சதாசிவம், திலகவதி (இலங்கை); ரேவதி, இராசையா (கனடா) ஆகியோரின் மருமகளும், மீரா, பிரசாந், சிவதினேஷ், சிவமதுஷன், சிவபிரதீப், சுஜீவன் ஆகியோரின் ஆசைச் சிறியதாயும் மற்றும் வினோதனின் அன்பு அத்தையுமாவார்.

***வெகுண்டெழுந்தவேங்கையாய் வெருண்டோடிய பகைவனுக்கு சிம்மசொப்பனமாகி,***
***உயிரை உகுந்து உன்னத விடுதலைக்கு உரம் ஏற்றியவளே!***
***அறுவடையாய் தமிழீழமே உனை அமைதியாக்கும்.***
***கைக்கெட்டும் தாயகத்தை தழுவும்வரை உன் ஆத்மா சாந்தியடைய***
***தமிழர்களாய் பிரார்த்திக்கின்றோம்.***

மண்ணிற்கு
உயிர் அர்ப்பணம்:
27.11.1999

*தகவல்:*

**தாயார்:** +1 416 588 98 29 (கனடா)

**சகோதரர்கள்:**

சீலன்: +41 41 758 06 37 / +41 78 611 51 98 (சுவிற்சர்லாந்து)
கண்ணன்: +41 41 711 50 19 / +41 79 243 63 32 (சுவிற்சர்லாந்து)

THEIVENDRAM THANGAMUTHTHU
1251 KING STREET WEST,
APT# 1204 M6K 1G7,
TORONTO ONTARIO, CANADA

Pub. Sw

# ஆனையிறவு - இயக்கச்சி பெரும் படைத்தளம் தமிழர் படைகளிடம் வீழ்ச்சி

23.04.2000 திகதி வெளியிட்ட விசேட பதிப்பு

## படைத்தளத்தின் மத்தியில் பறக்கும் புலிக்கொடி

(23.04.2000)

சிறீலங்கா இராணுவத்தின் மிகப் பெரும் படைத் தளங்களில் ஒன்றானதும் யாழ். குடாவின் வாசலில் தடைக்கல்லாக எழுந்துநின்றதுமான இயக்கச்சி- ஆனையிறவு பெரும் படைத்தளங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் விசேட படையணிகளால் முற்றாக தாக்கியழிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது.

ஆனையிறவு படைத்தளத்தின் மீதான இறுதிக்கட்டத் தாக்குதல்கள் சனிக்கிழமையன்று காலை ஆரம்பமாகி உச்ச சமர்கள் இடம்பெற்று அதேதினம் மாலை தமிழர் படையிடம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனையிறவு முகாமின் இறுதி பாதுகாப்பு நிலைகளை உள்ளடக்கியிருந்த இயக்கச்சிப் படைத்தளம் மீதான தாக்குதல்கள் விடுதலைப் புலிகளின் விசேட அணிகளாலும், கொமாண்டோ படைப்பிரிவுகளாலும் தாக்கப்பட, கனரக எறிகணைப்படைப்பிரிவு, விசேட எறிகணைப்படைப்பிரிவு போன்றவைகளின் தாக்குதல்கள் ஆனையிறவு பெரும் தளத்தின் மீது தொடர்ச்சியாக இடம்பெற்றது. வெள்ளியன்று மாலை இயக்கச்சியின் ஆனையிறவுக்கான தொடர்புகள் முற்றாக துண்டிக்கப்பட்ட நிலையில், விடுதலைப் புலிகளின் பல அணிகள் புதிய பல முனைகளின் ஊடாக பிரதான முகாமை நோக்கி தாக்குதல்களை தொடுத்தன. விடுதலைப் புலிகளின் மிகக்கடுமையான தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாத நிலையில், சிங்கள இராணுவம் சிதறியோடத் தொடங்கியது. இத்தாக்குதலில் உப்பளக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக இருந்த முப்பது பெரும்கட்டடங்கள் மற்றும் பாடசாலை போன்றவற்றில் அமைந்திருந்த சிறீலங்கா இராணுவத்தின் படைமுகாம்களும், ஆயுதக்களஞ்சியங்களும் ஓயாத அலைகள் படையணிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்டுள்ளன.

படைத்தளத்தை வெற்றிகொண்டதன் பின் தளபதி கேணல் பானுவினால் முகாமின் மத்தியில் புலிக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

## சர்வதேசம் வியக்கும் தேசியத் தலைவரின் வழிநடாத்தல்

ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கையை வழிநடாத்தி சிறீலங்கா இராணுவத்திற்கு மிகப் பெரும் இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளதுடன் தமிழர் பிரதேசங்களை மீட்டெடுத்துவரும் இராணுவ நகர்வுகளை திட்டமிடும் தேசியத் தலைவரின் இராணுவ அணுகுமுறைகள், அவரது போர் அனுபவங்கள் போன்றவற்றை உலகின் இராணுவ ஆய்வாளர்களும், படைத்துறை வல்லுனர்களும், மூத்த செய்தியாளர்களும் சர்வதேச செய்தி நிறுவனங்களும் மீண்டும் வெளியிடத் தொடங்கியுள்ளன. ஓயாத அலைகள்-3ன் முதலாவது இராணுவ நகர்வின் மூலம் வன்னி பெரு நிலப்பரப்பை மீட்டெடுத்த தேசியத்தலைவரின் இராணுவ வழிநடாத்தலை அன்று இச்செய்தி நிறுவனங்கள் மிகப்பெரிதாக வெளியிட்டிருந்தன. இப்போது மிகக்குறுகிய கால இடைவெளிக்குள் மிக உன்னிப்பாக திட்டமிடப்பட்டு மிகப்பெரும் படைத்தளம் ஒன்று அழிக்கப்பட்ட நிகழ்வானது, உலக அளவில் மீண்டும் அவரது இராணுவ ஆற்றல் வெளிப்பட சான்றாக அமைந்துள்ளது.



## 240 வருட அடிமைச் சின்னம் அழிக்கப்பட்டது

தமிழீழ தேசத்தின் மிகப்பெரும் அடிமைச் சின்னமாக நீண்டகாலமாக நிலைத்திருந்த அடிமைச்சின்னம் ஒன்று தேசியத் தலைவரின் வழிநடாத்தலில் அழிக்கப்பட்டுள்ளது. ஒல்லாந்தரின் ஆட்சியில் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தடுக்கும் வழியாக யாழ்குடாவின் வாசலில் ஒல்லாந்தரால் 1760ம் ஆண்டு இப்படைத்தளம் ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் சிறு முகாமாக இருந்த இது, அடுத்து வந்த அந்நிய ஆட்சியாளர்களாலும் பின்னர் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களாலும் தொடர்ந்தும் காப்பாற்றப்பட்டு வந்தது. காலத்திற்கு காலம் தமிழர் மீதான அடக்குமுறைகளை மேற்கொள்ள இம்முகாம் மிகப்பெரும் உதவியாக இவர்களுக்கு இருந்து வந்தது. முதலாம் ஈழப்போரின் பின்னர் பெரிதாக்கப்பட்ட இம்முகாம், இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின் மேலும் விஸ்தரிக்கப்பட்டது. இம் முகாம் விடுதலைப் புலிகளால் 1991ம் ஆண்டு ஆகாய கடல் வெளிச் சமர் எனும் இராணுவ நடவடிக்கையால் தாக்குதலுக்கு உள்ளாகியது. ஆனாலும் அன்றிருந்த சந்தர்ப்ப சூழ்நிலைகள் வெற்றியின் திசையை அவர்களுக்காக மாற்றியது. இக்காலகட்டத்தின் பின் வடமராட்சி கிழக்கின் கடற்பகுதியுடன் இணைக்கப்பட்டு ஆனையிறவு இயக்கச்சி பெரும் படைத்தளமாக மாற்றியமைக்கப்பட்டது. இவ்வாறு 240 வருடகாலமாக அடிமைச் சின்னமாக யாழ்குடாவின் வாசலில், தொண்டையில் முள்ளாக சிக்கியிருந்த இப்படைத்தளம் அழிக்கப்பட்டதானது தமிழர்களின் மிகப்பெரும் வெற்றியின் ஒரு மைல்க்கல் என புலிகளின் குரல் வானொலி தனது ஆய்வில் தெரிவித்துள்ளது.

## ஆயிரத்திற்கு மேல் இராணுவம் அழிப்பு

இயக்கச்சி ஆனையிறவு படைத்தளம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் அழிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதல்களில் சிறீலங்கா இராணுவம் தனது வரலாற்றிலேயே மிக மோசமான தோல்வியை சந்தித்தள்ளது. ஓயாத அலைகள்-1, ஓயாத அலைகள்-2 போன்றவற்றில் ஏற்பட்ட இழப்புக்களை விட ஓயாத அலைகள்-3ன் ஆனையிறவு படைத்தளத் தாக்குதலில் மிகப்பாரிய இழப்புக்களை அது அடைந்துள்ளது. விடுதலைப் புலிகளின் தளச்செய்திகளின் படி ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் இதில் இறந்துள்ளனர் என்றும், மேலும் பல்லாயிரம் இராணுவத்தினர் காயங்களுடன் சிதறி ஓடியுள்ளனர் என்றும் அறியக்கூடியதாக உள்ளது. விடுதலைப் புலிகளின் வன்னித்தள வானொலியான புலிகளின் குரல் தனது விசேட ஓயாத அலைகள் ஒலிபரப்பில், ஆனையிறவுப் படைத்தள தாக்குதல் பற்றி குறிப்பிடுகையில், விடுதலைப் புலிகளின் தாக்குதலால் இராணுவத் தளப்பகுதியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட உடல்கள் சிதறிக் கிடப்பதாக கூறியுள்ளது. தாக்குதல்களின் வேகம் அதிகரித்த நிலையில் காயமடைந்த இராணுவத்தினர். நாலா திசையிலும் சிதறியோடியதாயும் கிளாலி ஊடான கடற்பாதையால் இவர்கள் தப்பியோடுவதாயும் தெரிவித்துள்ளது.

## செய்தியாளர்களால் தடுமாறும் இராணுவத் தளபதிகள்

ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கை மூலம் இயக்கச்சிப் படைத்தளம் மீதான தாக்குதல்கள் இறுக்கமடைந்தபோது அதன்பின் அப்படைத்தளம் வீழ்ச்சியுற்று ஆனையிறவுப் படைத்தளமும் தாக்கியழிக்கப்பட்ட செய்திகள் சர்வதேசத்திற்கு தெரிவிக்கப்படுகையில், சிறீலங்காவின் செய்தித்துறையினர் சிறு தொகைப் பயங்கரவாதிகளை தமது படையினர் துரத்திவிட்டனர் என்ற செய்திகள் மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொண்டிருந்தனர். சிறீலங்காவின் பாதுகாப்பு படையினரால் வெளியிடப்பட்ட இச்செய்தியே சர்வதேச செய்தி நிறுவனங்களுக்கும் போய்ச்சேர்ந்தன. பின்னர் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீட செய்தியறிக்கைகள் சர்வதேச நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட அந்நிறுவனங்களின் உள்ளூர் செய்தியாளர்கள் இராணுவ தளபதிகளிடம் உண்மைநிலையை அறிய முற்பட்டனர். ஆனால், சிறீலங்காவின் முப்படைத் தளபதிகளும் இன்னும் உண்மையான நிலையை வெளியிட மறுத்துவருகின்றனர். அதேவேளை, சர்வதேச நிருபர்களின் கேள்விகள் தளபதிகளுக்கே பதில்களாயும் அமைக்கின்றன. இந்நிலையில் சிறீலங்காவின் தளபதிகள் எவ்வகையான செய்திகள் மூலம் தனது மக்களை காப்பற்றலாம் என்பதிலும், உலகை எப்படி ஏமாற்றலாம் என்பதிலும் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர்.

## ஓயாத அலைகள் வெற்றி உலகெங்கும் கொண்டாடப்படுகிறது

ஓயாத அலைகள் இராணுவ நடவடிக்கையினை நேரடியாக வழிநடாத்தி தமிழர்களின் நிலப்பிரதேசங்களை மீட்டெடுத்துள்ள தேசியத் தலைவரின் வழிநடாத்தலை உலகெங்கும் வாழும் தமிழர்கள் மிக மகிழ்வுடன் பாராட்டுவதுடன், தமிழர்களின் விடிவு தலைவரின் தலைமையில் நிஜமாகி வருவதுடன் விரைவில் உறுதிபெற்றும் வருகிறது என மகிழ்சியுடன் தெரிவிக்கின்றனர். தாம் புலம் பெயர்ந்துள்ள நாடுகளில் வெற்றி நிகழ்வுகளை உணர்வுபூர்வமாக மகிழ்ச்சியுடன் வெளியிட்டுவருகிறார்கள்.


ஐரோப்பிய நாடுகள் எங்கும் தமிழர் வாழும் பகுதிகளில் தேசியத் தலைவரின் புகைப்படங்கள் ஒட்டப்பட்டு, வெற்றி நிகழ்வுகள் தயார்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் காரியாலயங்களை நோக்கி படையெடுக்கும் மக்கள் பெருமளவான நிதிப்பங்களிப்பினையும் வழங்கி வருகின்றனர்.

# ஈழத் தமிழனுக்கு வசந்தம் பிறந்தது!

## - வைகோ -

ஆனையிறவு படைத்தளம் தாக்கியழிக்கப்பட்ட செய்தியானது உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழ் மக்களையும் மகிழ்ச்சி கொள்ள வைத்துள்ளது. உலகத் தமிழ் வானொலிகளில் தமிழ் மக்கள் தமது மகிழ்ச்சி உணர்வலைகளை வெளிப்படுத்திய வண்ணமே உள்ளனர்.

இதேவேளை I.B.C. வானொலிக்குத் தமது உணர்வலையை வெளிப்படுத்திய ம.தி.மு.க. பொதுச் செயலாளரும் ஈழவிடுதலை ஆதரவாளருமாகிய வை.கோபாலசாமி அவர்கள் 'ஈழத் தமிழனுக்கு வசந்தம் பிறந்துவிட்டது' எனத் தெரிவித்துள்ளார். ஆனையிறவு விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்ட



செய்தியறிந்து தனது மன உணர்வலையை மேலும் தெரிவித்த வை.கோ அவர்கள்' எதை எதிர் பார்த்தோமோ அது நடந்துவிட்டது. ஆக்கிரமிப்புப் படைகள் வெற்றி பெற்றதாகச் சரித்திரம் இல்லை.

இங்கும் மானம் மிக்க, வீரம்மிக்க விடுதலைப் புலிகளால் ஆக்கிரமிப்புப்படைகள் துரத்தியடிக்கப்பட்டுள்ளனர். நீண்ட நெடுங்காலமாக ஈழத் தமிழனின் அடிமைச்சின்னமாக இருந்த ஆனையிறவுப் படைத்தளம் வீழ்ச்சியடைந்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்' என வை.கோ தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

2ம் உலக யுத்தத்தில் ரஷ்யாவில் ஸ்ரெலிங்கிராட் ரஷ்ய, விடுதலைப் படைகளால் முற்றுகைக்கு உட்பட்டு வெற்றிகொள்ளப்பட்டதையும் நினைவுகூர்ந்த அவர், இந்த வெற்றித்தாக்குதலை நடாத்திய விடுதலைப் புலிகளையும், தாக்குதலைத் திட்டமிட்டு வழிநடாத்திய எனது பெருமதிப்புக்குரிய தேசியத் தலைவர் பிரபாகரனையும் மனதார வாழ்த்துகிறேன் எனவும் தனது செய்தியில் தெரிவித்தார்.

# 54ம், 53ம் படைப்பிரிவுகள் அழிப்பு - தப்பியோட்டம்

சிறீலங்காவின் மிகவும் நம்பிக்கைக்குரிய படையணியாக இருந்த 53வது படைப்பிரிவு, இத் தாக்குதலில் மிகப்பெரும் அழிவினைச் சந்தித்துள்ளது. அமெரிக்க கிரீன் பரேட்ஸ் எனப்படும் விசேட படையினரின் பயிற்சிகளை கொண்டிருந்த இப்படைப்பிரிவு, ஆனையிறவில் நிலைகொண்டிருந்த 54வது படைப்பிரிவிற்கு உதவியாக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. சிறீலங்காவின் மூத்த அனுபவம் மிக்க தளபதிகளின் வழிநடாத்தலில் இப் படைப்பிரிவுகள் இயங்கிவந்தன. அண்மையில் 53வது, 54வது படைப் பிரிவுகளின் கட்டளையிடும் அதிகாரியாக யுத்தக் கதாநாயகன் என சிறீலங்காவால் வர்ணிக்கப்பட்ட ஜானக பெரேரா, சந்திரிகாவால் விசேடமாக நியமிக்கப்பட்டார். இவரது தலைமைத்துவத்தில் சிறீலங்கா பெரும் நம்பிக்கையை வைத்திருந்தது.

ஆனாலும், ஓயாத அலைகள் படையணிகளின் உறுதியான நகர்வின் முன் இப்படையணிகள் நிலைகுலைந்து போயின. சிறீலங்காவின் இவ்விரு பெரும் படையணிகளும் அழிவினை சந்தித்துதானது. அந்நாட்டின் இராணுவ கட்டமைப்பின் சீர்குலைவையும், சிதைவையும் வெளிப்படுத்தியுள்ளது. தமிழருக்கு எதிரான தாக்குதல்களில் இனி எந்தப் படையணியும் உறுதியுடன் போராட முடியாது என்பதையே இப்படையணிகளின் அழிப்பும் தப்பியோட்டமும் வெளிப்படுத்தியுள்ளது.

# ஆனையிறவு படைத்தளம் வீழ்ச்சி! வன்னியில் மக்கள் பேரெழுச்சி!!

ஆனையிறவு படைத்தளம் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்ட செய்தியறிந்து வன்னியில் மக்கள் பேரெழுச்சியுடன் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னிப் பகுதியெங்கும் தமிழ் மக்கள் தமக்கிடையே இனிப்புகளை பரிமாறியும், வீதிகளில் இறங்கி மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபடுவதாகவும் தெரியவருகின்றது.

விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட பகுதிகளை நோக்கி ஏராளமான மக்கள் படையெடுத்த வண்ணம் உள்ளதாகவும் போராளிகளுக்கு உணவுகள் வழங்குவதிலும், காயப்பட்ட போராளிகளை அப்புறப்படுத்துவதிலும், இரத்த தானம் வழங்குவதிலும் மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபடுவதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மட்டுமன்றி படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் தமிழ் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் காணப்படுவதாகவும் ஆங்காங்கே வீதிகளில் கூடித் தமது மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொள்வதாகவும் தெரியவருகின்றது.

அதேவேளை ஆனையிறவு படைத்தள வீழ்ச்சிச் செய்தியறிந்து தென் தமிழீழ மக்களும் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபடுவதாகவும் 'ஆனையிறவை வீழ்த்திய புலிகளுக்கு எதிரிகளின் எந்த முகாமும் இனித்தூசுதான், எங்கள் நாடு விரைவில் மலரும்' என மக்கள் உறுதியுடன் கூறிக்கொள்வதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.


உங்கள் தலைமுடி உதிர்கின்றதா? கவலை வேண்டாம்
இதோ ஜேர்மனியின் புதிய கண்டுபிடிப்பு

எமது புதிய அறிமுகம்
NATURINA 2000 வெளிவந்துவிட்டது!

தலைமுடி உதிர்வு, கணைவெடிப்பு, இளநரை, மற்றும் முடிவளர்ச்சி நிறுத்தம் போன்றவற்றால் விரக்தியடைந்து போயுள்ளவர்களுக்கு ஓர் நற்செய்தி!
இந்தப் பிரச்சினைகள் வயதானவர்களுக்கும் ஏற்படலாம். இள வயதினருக்கும் ஏற்படலாம். ஆனால் இக் குறைபாடுகளை Naturina® வை தொடர்ந்து உபயோகிப்பதன் மூலம் தடுத்து நிறுத்தலாம்.
இத் தயாரிப்பு நீண்டகாலமாக ஆய்வுகளில் ஈடுபட்டுவந்த ஜேர்மனி முன்னணி நிறுவனத்தின் கண்டுபிடிப்பு.
Naturina® இயற்கையான மருத்துவத்தின் கலவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உயிர்ப்புக் கலவையாகும்.
இத் தயாரிப்பு எந்தவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது.
எமது புதிய தயாரிப்பைப் பயன்படுத்துவதன் மூலம் சர்மம் பளபளப்புத் தன்மையையும், ஆரோக்கியமான தோலினையும், பலமான நகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
எமது Naturina® தயாரிப்புக்களான கூட்டுக்குளிகைகள், ஷம்பு, கூந்தல் தைலம் (Capsules, Shampoo, Hair tonic) ஆகியவற்றை ஏக காலத்தில் 3 மாதங்களுக்குத் தொடர்ச்சியாக பயன்படுத்தினால் பயன் நிச்சயம்.
இன்றே பாவியுங்கள் Naturina® உங்களை நிச்சயம் திருப்திப்படுத்தும்!

நீங்கள் சுவிசிலிருந்து வாங்க விரும்பின் Postfinance, A/ C No. 40_176111_3 என்ற வங்கிக் கணக்கு இலக்கத்திற்கும், பிரித்தானியாவிலிருந்து வாங்க விரும்பின் Barclays Bank, Sort Code 20-40-71, A/C No. 80327069 என்ற வங்கிக்கணக்கு இலக்கத்திற்கும் உரிய பணத்தைச் செலுத்தி, பணம் செலுத்தியதற்கான அத்தாட்சியைத் தபால்மூலமோ அல்லது தொலைநகல் மூலமோ எமக்கு அனுப்பி உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.



01.03.2000 இல் இருந்து விசேட சலுகை வழங்கப்படுகின்றது.



உலகில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் தமது தலைமுடிப் பிரச்சினைகளின் தீர்வாக Naturina® தயாரிப்புக்களைப் பாவிக்கின்றனர்.
எமது நிறுவனம், Naturina 2000 புதிய தயாரிப்பின் மூலம் மேலும் பல பயன்களை அளித்து ஐரோப்பாவில் முதன்மை நிறுவனமாகத் திகழ்கின்றது.

எம்முடன் தமிழிலும் தொடர்புகொள்ளலாம்
(வாரநாட்களில் பிற்பகல் 3-6 மணி) (ஜேர்மனி நேரம்)

Naturina வின் விளம்பரதாரராக விரும்புகின்றீர்களா?
ஐரோப்பிய நாடுகளில், வீட்டிலிருந்தவாறே மேலதிக வருமானம்பெற விரும்புகின்றீர்களா? விபரங்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு:
Intercare Handels GmbH
Munster str 5, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 688347 / Fax: 0049 2381 688349 - Internet: http://www.intercare-naturina.com

பிரான்சிற்கான எமது முகவர்:
Ayngran Centre, 71, Rue Louis Blanc, 75010 Paris.
Tel: சிவா - 06 10 18 25 06

# ஐரோப்பிய நாடுகளில்
# மாபெரும் மேதினப் பேரணி

# மே 1



## அனைத்துலக தொழிலாளர் தினம்

அன்பார்ந்த
தமிழ் மக்களே!

ஒடுக்குமுறைக்கும்,
அடக்குமுறைக்கும் எதிரான
உறுதிப்பாட்டை பறைசாற்றும் புரட்சிகரமான எழுச்சிமிகு
நாளை எதிர்கொண்டு நிற்கின்றோம்.
இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விடுதலை பெற்ற
இனமாக உயர்வோம் என உலகிற்கு உரைத்திடுவோம்.
உரிமைகளை அவாவி எழும் உருக்குறுதி வாய்ந்த
தோழர்களின் கரங்களைப்பற்றி அணிவகுக்க
திரண்டுவாருங்கள்.

## 01.05.2000 திங்கட்கிழமை

**பிரான்ஸ்**
ஒன்றுகூடும் இடம்: **Place de la République**
ஊர்வலப்பாதை: **République - Nation**
நேரம்: பிற்பகல் 2 மணி
மேலதிக தொடர்புகட்கு:
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரான்ஸ் 01 43 58 11 42

**சுவிஸ்**
சூரிச் – 10.00 மணி
சூரிச் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்
(Lagerstrasse)
ஜெனிவா – பிற்பகல் 2.00 மணி
ஜெனிவா புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்

**நோர்வே**
நேரம்: மதியம் 12.00 மணி இடம்: **Youngstorget**

# சிங்கள இராணுவம் பின்வாங்கி ஓடவேண்டிய காலம் கனிந்து வருகிறது

எனது அறிக்கையை மிகைப்படுத்தப்பட்ட மிரட்டல் பேச்சு என அரசாங்கம் வர்ணித்திருப்பது மிகவும் தவறானது, நான் தெளிவான மொழியில், தர்க்கீகமாக தமிழர் தாயகத்தில் நிலவும் யதார்த்த நிலைமைகளை விளக்கியிருந்தேன். சிங்கள அரசு எமது மக்கள் மீது திணித்திருக்கும் ஒடுக்குமுறை வடிவங்களின் தன்மையை அம்பலப்படுத்தியிருந்தேன். நான் போர்க் குணம் கொண்டு மிரட்டல் பேச்சுப்பேசவில்லை சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னதாக, போர்நெருக்கடியைத் தணித்து, போர் நிறுத்தம் செய்து, இயல்பு நிலையையும் நல்லெண்ண சூழ்நிலையையும் ஏற்படுத்த வேண்டும் என்றே நான் வலியுறுத்தினேன். எனது அறிக்கையில் கூறப்பட்ட யோசனைகளுக்கு சர்வதேச ராஜதந்திர வட்டாரங்களில் வரவேற்பு இருந்தது. இதனால் தான் என்னை கண்டித்து ஒரு அறிக்கையை வெளியிட்டு, தமிழர் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் சிறீலங்கா அரசிற்கு ஏற்பட்டது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தள்ளார். 'தமிழ் கார்டியனுக்கு' கடந்த மாதம் வழங்கிய செவ்வியொன்றில் பேச்சுவார்த்தை தொடர்பாக குறிப்பிட்டிருந்த கருத்திற்கு, சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சு விளக்க அறிக்கையொன்றினை கடந்தவாரம் வெளியிட்டிருந்தது. அவ் அறிக்கைக்கான பதிலை கடந்த 22ம் திகதி தமிழ்கார்டியனுக்கு வழங்கிய செவ்வியொன்றின் மூலம் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து அவ் இதழுக்கு வழங்கிய செவ்வியில்,

தமிழர் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறை வடிவங்களை பாதுகாப்பு நடவடிக்கைகளென அரசாங்கம் திரிக்க முனைகிறது. இதனால் எமது மக்கள் எதிர்கொள்ளும் பாரிய துன்பங்களையும் இடர்பாடுகளையும் அரசாங்கம் மூடிமறைக்கப் பார்க்கிறது. இந்த ஒடுக்கு முறையான தடைகள் எமது மக்களின் சமூகப்பொருளாதார வாழ்நிலையை ஆழமாக பாதித்திருக்கிறது. மீன்பிடித்துறை, ஒரு காலம் எமது மக்களுக்கு வளம் சேர்க்கும் தொழிலாக அமைந்தது. ஆனால் இன்று மீன்பிடித்தொழில் மீது இடப்பட்ட தடைகளால் மீன்பிடித்துறை முற்றாகச் செயலிழந்து கிடக்கிறது. இதனால் பல்லாயிரக்கணக்கான மீனவக்குடும்பங்கள் வாழுவழியின்றி வறுமையின் பிடிக்குள் சிக்குண்டு அவலப்படுகிறார்கள். உரவகைகள் மீது போடப்பட்ட தடைகளால் தமிழ் விவசாய சமூகம் பெரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது. எமது மக்களின் சுதந்திரமான நடமாட்டங்களுக்கு எதிராகவும், பயணங்களைக் கட்டுப்படுத்தியும், விதிக்கப்பட்ட தடைகள், பாஸ் முறைகள் தென்னாபிரிக்காவில் நிலவிய இனக்குரோதத்தை விடக்கொடுமையானது. அத்தோடு காவற்சாவடிகளில் மறித்து சோதனையிடுவது, கைதுசெய்வது, தடுத்துவைப்பது, கொடுமைப்படுத்துவது



போன்ற பல்வேறு ரகமான ஒடுக்குமுறைகள் எமது மக்கள் மீது பெரும் துன்பத்தை ஏற்படுத்திவருகின்றன. இந்த ஒடுக்குமுறை வடிவங்களின் கொடுமையான தன்மையை எமது மக்கள் தான் நன்கறிவார்கள். ஏனென்றால் அவர்கள் தான் தமது சொந்த கௌரவத்தையும் சுதந்திரத்தையும் இழந்து இத்தகைய அவலங்களை அனுபவித்து வருகிறார்கள். பாதுகாப்பு நடவடிக்கைகளால் தமிழர்கள் மட்டுமன்றி எல்லா இனமக்களுமே சிறிய 'இடையூறுகளுக்கு' ஆளாகிவருகிறார்கள் என அரசாங்கம் கூறுகிறது. இது முற்றிலும் தவறானது. இது எமதுமக்களின் பெரும் துயரை சிறுமைப்படுத்தும் ஒரு கேலிக்கூத்தான முயற்சி. இந்த ஒடுக்கு முறைகளால் வேறு இனத்தவர்கள் பாதிக்கப்படவில்லை. தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக எமது மக்கள் மீது வழங்கப்பட்ட கூட்டுத் தண்டனை இது. இதில் இனக்குரோதம் ஒளிந்து கிடக்கிறது.

பாதுகாப்புப் படைகளை தமிழ்மக்களின் காவற்தெய்வங்களாக அரசாங்கம் சித்தரிக்கமுயல்கிறது. யாழ்ப்பாணம் போன்ற தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் கடமையாற்றும் பாதுகாப்பு படையினர் தமிழ்மக்களை பாதுகாக்கும் தமது கடமைகளில் சிறந்த பொறுப்பாற்றல் மிக்கவர்களாக நடந்து கொள்கிறார்கள் என்றும் அரசாங்கம் ஒரு விசித்திரமான கருத்தையும் முன்வைக்கிறது. தமிழ்ப்பகுதிகளில் பாதுகாப்புப்படையினர் இழைத்த கொடுமைகளை எடுத்துக்காட்ட ஒரு நீண்ட பட்டியலே இருக்கிறது. அதாவது சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், பாலியல் வன்முறைகள், உடல்வதைகள் மற்றும் பலகொடூரச் செயல்களில் பாதுகாப்பு படையினர் எத்தகைய பொறுப்பாற்றல் மிக்கவர்கள் என்பதை எடுத்துக்காட்டுவதற்கு எமக்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. இடம்பெயர்ந்த யாழ்ப்பாண மக்கள் பாதுகாப்புப் படையினரை நம்பி மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியபோது அவர்கள் மீது எத்தகைய கொடுஞ்செயல் இழைக்கப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கு இன்னும் தோண்டப்படாத புதைகுழிகள் செம்மணியில் இருக்கின்றன. அங்கு காணாமற்போன ஆயிரம் அப்பாவிகளின் சோகவரலாறு புதையுண்டு கிடக்கிறது.

எமது ஆயுதம்தரித்த விடுதலைப் போராட்டத்தையே வன்முறைப் பாதையென்றும் பயங்கரவாதம் என்றும் சிங்கள அரசு வர்ணித்து வருகிறது. பழைய பாராளுமன்றத் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்பட்ட அகிம்சைப் போராட்டங்கள் தோல்வியுற்றதைத் தொடர்ந்து ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டமானது, தமிழீழ மக்களின் அரசியற் போரட்டமாக வடிவம் பெற்றது. கடந்த 25 வருடங்களுக்கு மேலாகத் தொடரும் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் ஒரு நீண்ட வரலாற்றுப் போக்கையும் வளர்ச்சியையும் கொண்டது. இன்றைய வரலாற்றுக் கட்டத்தில் புலிகளின் ஆயுதப் போராட்டமானது சிங்கள அரசுக்கு எதிரான முழு அளவிலான போராகப் பரிமாணம் பெற்றிருக்கிறது. இந்தப் போரில் இரு தரப்பினருமே பெரும் படைகளுடன் மரபு வழிப்போரை நடத்திவருகின்றன. சிங்கள ஆயுதப் படைகளினது ஆக்கிரமிப்பிலிருந்து அடக்குமுறையிலிருந்தும் எமது மக்களையும் எமது மண்ணையும் மீட்டெடுப்பதே எமது ஆயுதப் போராட்டத்தின் குறிக்கோளும் இலட்சியமும் ஆகும். இன்று வடகிழக்குப் பிரதேசமான எமது தாயகத்தின் 70 விகிதமான பெருநிலப் பரப்பு எமது விடுதலை வீரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தமிழர்கள் செறிந்து வாழும் பல பட்டினங்கள் இன்னும் சிங்கள ஆயுதப்படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இப்பொழுது சிங்கள இராணுவம் ஆக்கிரமிப்பு படையெடுப்புக்களை கைவிட்டு தன்னையும் தான் காலூன்றி நிற்கும் நிலைகளையும் பாதுகாக்கவே போர் புரிந்து வருகிறது. தமிழரின் பாரம்பரிய பட்டினங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து சிங்கள இராணுவம் பின்வாங்கி ஓடவேண்டிய காலம் கனிந்து வருகிறது. இக் காலத்தில் எமது தாயக மண் அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து முற்றாக விடுதலை பெறும்.


சிறீலங்கா அரசின் சர்வதேசப் பிரச்சார ஆலகான வெளிவிவகார அமைச்சு, விடுதலைப்புலிகள் இயக்கம் பற்றி உலகடங்கலும் விசமத்தனமான பொய்களை கூறிவருகிறது. புலிகள் இயக்கமானது குழந்தை இராணுவத்தைக் கொண்ட ஒரு சிறிய ஆயுதக்குழுவென்றும், குறிக்கோளற்ற பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதே எமது நோக்கமென்றும் புரட்டுக்களை கட்ட

**சிங்கள ஆயுதப் படைகளினது ஆக்கிரமிப்பிலிருந்து அடக்குமுறையிலிருந்தும் எமது மக்களையும் எமது மண்ணையும் மீட்டெடுப்பதே எமது ஆயுதப் போராட்டத்தின் குறிக்கோளும் இலட்சியமும் ஆகும்.**


விழ்த்து விடுகிறது. வெளிவிவகார அமைச்சு இந்தப் பொய்களை ஒரு சில உலக நாடுகளுக்கு 'சந்தைப்படுத்தியும்' இருக்கிறது. ஆனால் இன்றைய சர்வதேச சமூகம் இலங்கையில் நிகழ்ந்துவரும் ஆயுதப்போராட்டத்தின் தன்மை பற்றியும், உண்மைநிலை பற்றியும் அறிந்து வருகிறது. சிறீலங்கா அரசு உருவகித்துக் காட்டுவதுபோல தமிழரின் சுதந்திரப் போராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்தரிக்க முடியாது என்பதையும், இப் போராட்டம் வெகுசன இயக்கமான பரிமாணத்தைக் கொண்டது என்பதையும் உணர்ந்து வருகின்றன. ஆனால் சிறீலங்கா அரசு தொடர்ந்தும் 'பயங்கரவாதம்' என்ற பதத்தையே பாவித்து வருகிறது. இந்தச் சொல்லுக்கும் புலிகள் இயக்கம் முன்னெடுத்துவரும் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்திற்கும் எதுவித தொடர்புமில்லை. விடுதலைப் போரின் புறநிலை யதார்த்தத்தை இந்தச் சொல் எந்தவகையிலும் பிரதிபலித்துக்காட்டவில்லை.

அரசமைப்பை உருவாக்குவது சம்பந்தமாக தென்னிலங்கையில் கருத்தொற்றுமை காண நிகழும் பேச்சுக்களை நான் கிண்டல் செய்யவில்லை. பேச்சுக்களை நடத்தும் இரு பெரும் சிங்களக் கட்சிகளும் பேரினவாதக் கட்சிகள் என்பதாலும் இரண்டுமே இரத்தம் தோய்ந்த வரலாற்றைக் கொண்டிருப்பதாலும் இவர்கள் மத்தியில் ஏற்படும் கருத்தொற்றுமை தமிழரின் தேசிய அபிலாசைகளை பூர்த்திசெய்யக் கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை உருவாக்குமா என்றே சந்தேகப்பட்டேன். அத்தோடு தமிழ் மக்கள் இன்று பாரிய வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு திணறுகிறார்கள். அரசமைப்பு மாற்றம் பற்றி இழுபட்டுக்கொண்டிருக்கும் விவாதங்களுக்கும் எமது மக்களின் அன்றாட அவலங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதையே சுட்டிக்காட்டினேன். புதிய அரசமைப்பை உருவாக்கும் அரசாங்கத்தின் முயற்சி கடந்த 5 ஆண்டுகளாக இழுபட்டு வருகின்றது. ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வடிவத்தில் திட்ட வரைபுகள் வெளியாகி வருகின்றன. இறுதியாக வெளிவந்த வரைவில் கூட தமிழரின் அடிப்படைக் கோரிக்கைகள் ஆராயப்படவில்லை. சமீபத்தில் அரசாங்கமும் யு.என்.பி.யும் 'ஆறு தடவைகள்' கூடிக் கதைத்துள்ளன. இந்த நீண்ட கலந்துரையாடல்களில் தமிழரின் தேசியப் பிரச்சினை சம்பந்தமாக எதுவுமே விவாதிக்கப்படவில்லை. தனிப்பட்ட விவகாரங்களும் கட்சிப் பிரச்சினைகள் பற்றியுமே நீண்ட நேரம் பேசப்பட்டிருக்கின்றது. இது ஒருபுறமிருக்க, பௌத்தமகாசங்கத்தினர் அண்மையில் பொரளையில் ஒரு மாநாடு கூட்டி 'ஏழு கோட்பாடுகளைபி அல்லது 'ஏழு கட்டளைகளை' பிரகடனப் படுத்தியுள்ளனர். புதிய அரசமைப்பில் இணக்கம் காண முடியாத நிபந்தனைகளாக இவை பிரகடனமாகியுள்ளன. இந்தப் பொரளைக் கோட்பாடுகள் தமிழரின் திம்புக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரண்பட்

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

ரதி ஜுவலர்ஸ்



28, Ealing Road, Wembley,
Middx HA0 4TL

'எப்பொழுதுமே மலிவு விலை'

Tel: 0181-9033063-Fax: 0181-9039711

OPEN: 7 Days a Week

Mon -Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.

# தமிழகத்தில் தமிழ்வழிக் கல்வி இரத்து உயர் நீதிமன்றம் தீர்ப்பு

தமிழகத்தில் 1ம், தரத்தில் இருந்து 5 வரை தமிழ்வழிக் கல்வி மூலமே கற்பிக்கவேண்டும் என்ற தமிழக அரசின் சட்டமூலத்தை உயர் நீதிமன்றம் இரத்துச்செய்துள்ளது. தமிழக அரசின் தமிழ் வழிக்கல்விக்கான உத்தரவு அரசியல் சட்டத்திற்கு முரணானது எனத் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

தமிழ்வழிக் கல்விக்கான உத்தரவை தமிழக அரசு பிறப்பித்தமையை அடுத்து, ஆங்கில வழிக் கல்விப்பள்ளிகள் இவ் உத்தரவுக்கு எதிராக மனுத்தாக்கல் செய்தன. 'தமது குழந்தைகளுக்கு தமிழிலேயே கல்வி கற்பிக்க வேண்டும் என்பது அடிப்படை உரிமைக்கும், பெற்றோரின் உரிமைக்கும் எதிரானது என மனுவில் குறிப்பிட்டு இருந்தன. இதன் மீதான வழக்கு விசாரணைகள் கடந்த 20ம் திகதி முடிவடைந்து உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்ட போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் மேலும், கல்வி பெறுவது அடிப்படை உரிமை. இந்த அடிப்படை உரிமையில் எந்தக் கல்வி அடிப்படையில் படிப்பது என்பதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த உரிமைகளை குழந்தைகளின் சார்பில் பெற்றோர்கள்தான் செயல்படுத்த முடியும். ஆனால் அரசு பிறப்பித்த உத்தரவு அடிப்படை உரிமையை மீறுவதாக உள்ளதுடன் முரணானது எனவும் குறிப்பிட்டு, தமிழ் வழிக்கல்வியை இரத்துச்செய்துள்ளது.

இதேவேளை, உயர் நீதிமன்றத்தின் இத் தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யக்கூடும் எனத் தமிழக அரச வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# ஆச்சிரமத்தில் ஆசிரியர் கொலை சாமியார் கைது

திருச்சி கே.கே நகரில் உள்ள ஆச்சிரமம் ஒன்றில் ஆசிரியை ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டு, அவரது உடல் எரிக்கப்பட்டது தொடர்பாக, அவ் ஆச்சிரமத்தின் சாமியாரான ஜெயந்தி என்பவர் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனது இறந்துபோன மகளின் பெயரில் கோயில் ஒன்றைக் கட்டி, அப்பகுதியை ஆச்சிரமமாக்கி பக்தர்களுக்கு அருள்வாக்குச் சொல்லிவந்தார் ஜெயந்தி என்ற பெண் சாமியார். இவரது ஆச்சிரமத்தில் வந்து தங்கியிருந்த பெண் ஆசிரியர் ஒருவர் இங்குள்ள கணக்குகளைப் பார்க்கும் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார். இந்நிலையில், சாமியாருக்கும், இவ் ஆசிரியைக்கும் ஏற்பட்ட தகராறில் சாமியாரால் இவர் அடித்துக்கொல்லப்பட்டுள்ளார். அத்துடன் இக் கொலையை இயற்கை மரணம் என மாற்றி அவரது உடலையும் எரித்துள்ளனர்.

இவரது மரணத்தில் சந்தேகம் கொண்ட சிலர் கொடுத்த தகவலின் அடிப்படையில், பொலிசார் ஆச்சிரமத்தில் விசாரணைகளை மேற்கொண்டு, பெண் சாமியாரையும் இக்கொலைக்கு உடந்தையாக இருந்த சாமியாரின் காதலன் மற்றும் பத்துப் பேரையும் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். ஆச்சிரமத்தில் இருந்து பெருந்தொகை பணமும், நகைகளும், ஒளிநாடாக்களும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# எம்.ஜி.ஆர். நடிக்கும் புதிய படம்

மறைந்த மக்கள் கலைஞர் எம்.ஜி.ஆர். நடிக்கும் புதிய படம் ஒன்றை கணினி தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்போவதாக 'பென்டா மீடியா லிமிட்டட்', '3D மேக்ஸ்மீடியா' நிறுவனமும் இணைந்து தயாரிக்கப்போவதாக அறிவித்துள்ளன. 14 கோடி ரூபா செலவில் தயாராகவுள்ள இப் படத்தில் மறைந்த இந்தி நடிகர் ராஜ்கபூரும் நடிக்கவுள்ளார் எனத் தெரிவித்துள்ளன.

9 மாதங்களில் இப்படம் எடுத்து முடிக்கப்பட்டுவிடும் எனவும், தமிழ், இந்தி ஆகிய இரு மொழிகளில் தயாரிக்கப்படும் இப்படம், ஆங்கிலத்திலும் இன்டர்நெட் ஊடாக வெளியிடப்படும் எனவும் அந் நிறுவனங்கள் அறிவித்துள்ளன. இதுவரை இப் படத்திற்கான பெயர் இன்னும் இடப்படவில்லை.

இது இவ்வாறிருக்க, எம்.ஜி.ஆரின் இப்புதிய படம் தயாரிப்பது தொடர்பாக அவரது ரசிகர்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தனது நிஜவாழ்க்கையிலும் சரி, நடிப்பிலும் சரி சில கொள்கைகளைப் பின்பற்றி வந்துள்ளார். இன்று அவர், இல்லாத நிலையில், அவரை வைத்து எடுக்கப்படும் படத்தில் இவை மீறப்படுமா என்பதே அதற்கான காரணம் எனவும் கூறப்படுகிறது.

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக தமிழ் தமிழர் இயக்கங்கள்

தமிழக அரசின் தமிழ் வழிக் கல்வி ஆணையை இரத்துச் செய்து சென்னை உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை தீயிட்டுக்கொளுத்துவோம் என்று தமிழர் இயக்கங்கள் அறிவித்துள்ளன. சென்னையில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சிப் பொதுச் செயலர் கெ. மணியரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்நாடு அரசு தொடக்கத்திலேயே தமிழ் வழிக்கல்விக்காகப் புதிய சட்டத்தை இயற்றியிருக்கலாம். இப்போதாவது தமிழ் வழிக்கல்விக்காகப் புதிய சட்டத்தை இயற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

தமிழ் தமிழர் இயக்கத் தலைவர் சுப.வீரபாண்டியன் தெரிவித்தபோது,

தமிழ்ச் சான்றோர் பேரவை மற்றும் பல்வேறு இயக்கங்களின் தொடர் முயற்சிகள் மற்றும் போராட்டங்களின் விளைவாகப் பிறப்பிக்கப்பட்ட தமிழ் வழிக்கல்வி ஆணையைச் செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியிருப்பது தமிழர்களை இழிவுபடுத்துவதாகும்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் எதிர்காலத்தைப் பாழாக்கும் இத் தீர்ப்பின் நகலைத் தீயிட்டுக்கொளுத்துவோம். போராட்டம் குறித்த அறிவிப்பு பின்னர் வெளியிடப்படும் எனத் தெரிவித்தார்.

## 10 இலட்சம் பேர் கலந்துகொண்ட கள்ளகர் விழா

மதுரை சித்திரை திருவிழாவில் இவ்வருடம் 10 இலட்சம் பக்தர்கள் கலந்துகொண்டுள்ளனர். கடந்த 18ம், திகதி வைகை ஆற்றில் நடைபெற்ற தீர்த்த உற்சவத்தைக் காண அதிகாலை வேளையில் வைகை ஆற்றின் கரையோரப் பகுதிகள் எங்கும் பக்தர்கள் நிறைந்திருந்தனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதிகாலையில் இருந்து நள்ளிரவு வரை கள்ளகர் பவனிவரும் விழா இடம் பெற்றுள்ளது.




# தமிழை ஆட்சி மொழியாக்க கோரி மாநாடு

தமிழை ஆட்சி மொழி ஆக்கக் கோரி டெல்லியில் வருகிற 29 மற்றும் 30ம் திகதி தமிழ் அமைப்புகள் மாநாடு நடத்துகின்றன. இதில் வைகோ, இல.கணேசன், டாக்டர் ராம்தாஸ், பீட்டர் அல்போன்ஸ் உள்ளிட்ட பல தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

தமிழ் மைய ஆட்சி மொழி, செவ்வியல் மொழி செயலாக்கக் குழு தலைவர் சாலினி இளந்திரையன் நேற்று நிருபர்களுக்குப் பேட்டியளித்தபோது,

சுவிட்சர்லாந்து என்ற சிறிய நாட்டில் மூன்று ஆட்சி மொழிகள் உள்ளன. அதேபோல் சிங்கப்பூரில் தமிழ் உள்பட 4 மொழிகள் ஆட்சி மொழியாக உள்ளன. ஆனால் இந்தியாவில் இந்தி மட்டுமே ஆட்சி மொழியாக உள்ளது. அனைத்து மொழிகளையும் ஆட்சி மொழியாக்கவேண்டும்.

தமிழை செவ்வியல் மொழியாக்கவும், ஆட்சி மொழியாக்கக் கோரியும் டெல்லியில் வருகிற 29 மற்றும் 30ம் திகதி மாநாடு நடைபெறுகிறது.

இதில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பா.ஜ.க. பொதுச் செயலாளர் இல.கணேசன், பா.ம.க. தலைவர் ராமதாஸ், குமரி அனந்தன், த.மா.கா. பொதுச் செயலாளர் பீட்டர் அல்போன்ஸ், தமிழக அமைச்சர் தமிழ்க்குடிமகன் மற்றும் எம்.பி.க்கள் கலந்துகொண்டு பேசுகிறார்கள்.

பல்வேறு தமிழ்ச் சங்கங்களின் தலைவர்கள் பங்கேற்கிறார்கள். அதி.மு.க. சார்பில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்துள்ளோம். இம் மாநாட்டை தலைநகர் தமிழ்ச் சங்கம், டெல்லி தமிழ்ச்சங்கம் மற்றும் தமிழ் அமைப்புகள் நடத்துகின்றன எனத் தெரிவித்தார்.

# அசாம், திரிபுரா பகுதிகளில் 19 பேர் கொலை

அசாம், திரிபுரா பகுதிகளில் ஆயுதபாணிகளால் 19 பொது மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அசாம் மாநிலத்தில் உள்ள கர்பி, அங்லாங்கில் பகுதிக்குள் நுழைந்த ஆயுதம் தாங்கியவர்கள் அப் பகுதிகளில் இருந்த பொதுமக்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளனர். இதன்போது மூவர் கொல்லப்பட்டனர். அதன் பின்னர் அருகிலுள்ள இன்னொரு கிராமத்திற்குச் சென்ற, ஒரு வீட்டில் இருந்த எட்டுப் பேரையும் வெளியே இழுத்து வந்து வரிசையில் நிற்பாட்டி சுட்டுக்கொன்றனர். இதில் இரண்டு குழந்தைகளும் அடங்குகின்றனர். அத்துடன் அப் பகுதிகளில் இருந்த சுமார் 25 குடிசைகளைத் தீயிட்டு எரித்துள்ளனர்.

இதேவேளை திரிபுரா பகுதியில் உள்ள லட்சுமிபூர் என்ற கிராமத்திற்குள் நுழைந்த ஆயுதம் தாங்கிய குழுவொன்று துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது. இதன்போது பாதுகாப்புத் தேடி ஓடிய மக்களில் எட்டுப்பேர் கொல்லப்பட்டனர். இருவர் படுகாயமடைந்தனர். இவ்விரு படுகொலைகளுக்குமான காரணங்கள் இதுவரை தெரியவரவில்லை. இதேவேளை இப் பகுதிகளுக்கு பாதுகாப்பு வழங்க படையினரை அனுப்பி வைக்குமாறு முதலமைச்சர் மத்திய அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# 'அப்பு' படத்தை தடைசெய்யவேண்டும் - அரவானிகள் கோரிக்கை -

தமிழகத்தில் தயாரிக்கப்பட்டு வரும் 'அப்பு' என்ற திரைப்படத்தைத் தடை செய்யவேண்டும் என அரவானிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பிரசாந்த், தேவயானி நடிக்கும் இப் படத்தில் வில்லனாக வரும் பிரகாஷ் ராஜ் அலி வேடத்தில் கொடூர வில்லனாக நடிப்பது ஒட்டுமொத்த அரவானிகளையே கெட்டவர்களாக சமூகத்தில் காட்டிவிடும். எனவே இப் படத்தினைத் தடைசெய்யவேண்டும் என இவர்களின் சார்பில் சாலினி என்பவர் கூறியுள்ளார்.

திரைப்படத்துறையினர் தங்களைப் பற்றிய காட்சிகளில் ஒரு ஜிப்பாவை போட்டுவிட்டு கைகளையடித்து ஆ... ஊ... என்று சத்தமிடுவதுபோல் காட்டுவது தங்களைப் பற்றிய அபிப்பிராயங்களைப் பொதுமக்கள் மீது தவறாகத் திணிக்கின்றனர் எனவும் அரவானிகள் சார்பில் பேசிய சாலினி என்பவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க. வில் இருந்து தி.மு.க. விற்குச் செல்லும் தொண்டர்கள்

அ.தி.மு.க.வில் கடந்த சில நாட்களாக இடம்பெற்றுவரும் 'களையெடுப்பு' நடவடிக்கையை அடுத்து, அ.தி.மு.க.வின் தொண்டர்கள் பலர் தி.மு.க.வில் இணைந்து வருகின்றனர். கடந்தவாரம் திண்டுக்கல் மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் தலைமையில் சுமார் ஆயிரம்பேர் தி.மு.க.வில் இணைந்துள்ளனர்.

சுமார் ஆயிரம் தொண்டர்களுடன் சென்னை வந்த செயலாளர், அண்ணா அறிவாலயத்தில் கடந்த வியாழன் அன்று கலைஞர் கருணாநிதி முன்னிலையில் தாம் தி.மு.க.வில் இணைந்து கொள்வதாக அறிவித்தார். இதனையடுத்து இவர்களது வருகையை ஏற்றுக்கொண்ட கலைஞர் மகிழ்வுடன் வரவேற்புரையை நிகழ்த்தினார்.


## நித்தி வாகன சேவை



உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

நித்தி:
0148050214/0613342518
0607348051/0148385825

Pub Fr

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

## சிங்கள இராணுவம்...

டவையாக அமைந்திருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் தென்இலங்கையில் ஏற்பட்டு வருவதாகக் கூறப்படும் கருத்தொற்றுமை எந்த அளவிற்கு தமிழரின் இனப்பிரச்சினைக்கு 'ஒரு நீதியான தீர்வை வழங்கும்' என்பதில் புலிகள் இயக்கத்திற்கும் தமிழ் மக்களிற்கும் பெரும் சந்தேகம் எழுந்திருக்கின்றது.

உணவு வகைகளையோ, மருந்து வகைகளையோ மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையோ அரசாங்கம் ஒழுங்கான முறையில் தேவையான அளவிற்கு அனுப்புவதில்லை. யானைப் பசிக்கு சோளப்பொரி போட்டது போல எப்பொழுதாவது இடைக்கிடையே பற்றாக்குறையாகவே பொருட்கள் அனுப்பப்படுவது வழக்கம். சில காலங்களில் ஒன்றுமே வருவதில்லை. சில சமயங்களில் எல்லையில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் உணவு, மருந்துப் பொருட்களை உள்ளே அனுமதியாது தடுத்துவிடுகிறார்கள். இதனால் பல சந்தர்ப்பங்களில் வன்னியில் வாழும் மக்கள் பட்டினிக்கும் சாவின் விளிம்பிற்கும் தள்ளப்படுவதுண்டு. உணவையும், மருந்தையும் போராட்டமாக பாவிக்கும் இந்தக் கொடுஞ் செயலைக் கண்டித்து வன்னிமக்கள் எத்தனையோ தடவைகள் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்பாக ஆர்ப்பாட்டங்களை, உண்ணா விரதங்களை நடத்தியிருக்கிறார்கள். கடந்த பல மாதங்களாக வன்னிக்கு மருந்துப் பொருட்களை செல்ல விடாது இராணுவம் தடுத்து வருகிறது. இதனால் வன்னிப் பெருநிலத்தில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள். மருத்துவ மனைகளே மூடப்பட்டு வரும் மோசமான நிலை அங்கு தோன்றியிருக்கிறது. சிங்கள இராணுவத்தினரின் இந்த மனிதாபிமானமற்ற செயலை வன்மையாகக் கண்டித்து அண்மையில் எம். எஸ். எப் என்ற பிரஞ்சு வைத்திய நிறுவனம் ஓர் பகிரங்கமான அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது எமது மக்கள் எதிர் கொள்ளும் இந்த துன்பமான அவல நிலமை பற்றி சர்வதேச சமூகம் அறியும். ஆனாலும் சர்வதேச நாடுகள் சிறீலங்கா அரசாங்கத்தைக் கண்டிக்காமல் மௌனம் சாதித்து வருகின்றன. இந்த மௌனமானது சிறீலங்கா அரசாங்கத்தின் இனக்கொலைத் திட்டத்திற்கு ஊக்கமளிப்பதாக அமைகிறது.

தமிழ்க் குடிசனச் செறிவுள்ள பகுதிகளை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்பதால் அந்த அடக்குமுறை ஆட்சியை தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்கள் என அரசாங்கம் கூறுவது மிகவும் அபத்தமானது. சமீபத்தில் நிகழ்ந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வடக்கிலும் தெற்கிலும் வசிக்கும் தமிழ் மக்கள் சந்திரிக்காவுக்கு எதிராக வாக்களிக்கவில்லையா?

விடுதலைப்புலிகள் இயக்கம் தான் தமிழீழ மக்களின் உண்மையான ஏகபோக பிரதிநிதிகள் என நாம் உரிமை கொண்டாடுவதற்கு பல மதிப்பீடுகள், அடிப்படைகள் உள்ளன.

முதலாவதாக, எமது விடுதலை இயக்கம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக கடந்த 25 ஆண்டுகளாக திடமான, உறுதியான போராட்டத்தை நடத்தி வருகிறது. பரந்து பட்ட தமிழ் மக்களின் பேராதரவு எமக்கு இருப்பதால் தான் நாம் சிங்கள அரசிற்கு எதிராகவும் மற்றும் பலம் வாய்ந்த சக்திகளுக்கு எதிராகவும் எத்தனையோ இன்னல்கள் மத்தியிலும் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்ட ஆயுதப் போராட்டத்தை நடத்த முடிகிறது. வெகுசனத்தின் நல்லாதரவின்றி எந்தவொரு ஆயுதம் தரித்த விடுதலைப்போராட்டமும் நிலைத்து நிற்க முடியாது என்பது வரலாறு பகரும் உண்மை.

இரண்டாவதாக, தமிழ்மக்களின் உண்மையான அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் கொள்கைகளை இலட்சியமாக வரித்தே நாம் போராடி வருகிறோம். கடந்த கால்நூற்றாண்டு காலத்துக்கு மேலாக எத்தனையோ சவால்களையும், எத்தனையோ ஆபத்துக்களையும், எத்தனையோ அழுத்தங்களையும் எதிர்கொண்டபோதும் நாம் எமது கொள்கையையும் இலட்சியத்தையும் உறுதிதளராது கடைப்பிடித்து வருகிறோம்.

மூன்றாவதாக, எமது போராளிகள் மகத்தான தியாகங்கள் புரிந்து, மாபெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்து தமிழீழ விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள். இதனால் விடுதலைப்புலிகள் இயக்கமானது தமிழ் மக்களின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்ற விடுதலை அமைப்பாகத் திகழ்கிறது.

நான்காவதாக, எமது ஆயுதப் போராட்டமே தமிழ்மக்களின் தேசியப்பிரச்சினைக்கு சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது. எமது போராட்டமே தமிழரின் சுதந்திரப் போரை சமகால உலகவரலாற்றின் பக்கங்களில் பதித்திருக்கிறது.

ஐந்தாவதாக, விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே வடக்கிலும், தென்னிலங்கையில் வாழும் தமிழர்கள் மத்தியில் மட்டுமன்றி உலகடங்கிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் நல்லாதரவைப் பெற்ற இயக்கமாகும். கிட்டத்தட்ட பத்துலட்சம் மக்களைக் கொண்ட புலம்பெயர்ந்த தமிழ் சமூகமானது தமிழ்தேசிய இனக் கட்டமைப்பின் இணைபிரியாத அங்கமாகும்.

ஆறாவதாக, எம்மைவிட எந்தவொரு தமிழ் அரசியல் அமைப்பும் தமிழர்களின் பிரதிநிதிகளாக உரிமை கொண்டாட அருகதையற்றவை. அரசாங்கத்துடன் ஒட்டி நிற்கும் தமிழ்க் கட்சிகளும், ஆயுதக்குழுக்களும் அரசு வழிசெய்து கொடுத்த ஏமாற்று வித்தையான தேர்தல்களைப் பயன்படுத்தியே பாராளுமன்றத்தினுள் நுழைந்திருக்கின்றன. ஜனநாயக நீரோட்டத்தில் இறங்கியிருப்பதாக கூறிக்கொள்ளும் தமிழ் ஆயுதக்குழுக்கள் தத்தமது குட்டி இராணுவங்களுடன் அரசாங்கத்தின் கூலிப்படைகளாகவே செயற்படுகின்றன. ஆயுதப் படைகளுக்கு தொண்டுபுரிந்து சிங்கள அரசிற்கு தமிழினத்தை அடிமைப்படுத்துவதே இவர்கள் செய்துவரும் சேவை.

நான் குறிப்பிட்ட இந்த ஆறு அடிப்படைகளையும் மதிப்பீடாகக் கொண்டு பார்த்தால் விடுதலைப்புலிகள் தான் தமிழீழ மக்களின் உண்மையான ஏகபோகப் பிரதிநிதிகள் என்பது புலனாகும். இவ்வாறு விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தனது செவ்வியில் மேலும் தெரிவித்திருந்தார்.

# பி.பி.சி.யில் இருப்பவர்கள் புலிகளின் பேச்சாளர்கள்!

**கொழும்பு வீதியில் இந்த அமைப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்றபோது பி.பி.சி.யின் சிங்கள சேவையின் செய்தியாளர் அவ் ஊர்வலத்தை பதிவுசெய்ய முயன்றபோது தாக்கப்பட்டார். இச்சம்பவத்தின் பின்னர், பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய முன்னணி என்னும் பெயரில் கொழும்பில் பௌத்தபிக்குகளின் துணையுடன் சமாதானத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்திவரும் இவ் அமைப்பின் பிரமுகரான சம்பிக்கா ரணவக்கா எனும் சிங்களத் தேசியவாதியின் பேட்டியொன்றில் இருந்து...**

*(இப்பேட்டி லக்பிம வாரஇதழில் வெளியாகியது)*

**✪ பி.பி.சி.யின் 'சந்தேசிய' புலிகள் அமைப்பிற்காக பிரச்சார வேலை செய்வதாக எப்படிக் கூறுவீர்கள்?**

➲ மூன்று வருடங்கள் ஜெயசிக்குறுய் நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பகுதிகள் புலிகளால் மீளக் கைப்பற்றப்பட்டதற்கு இராணுவத்தின் மனோ தைரியத்தை குறைக்கும்வகையில் இவ் வானொலி செய்த பிரச்சாரம்தான் காரணம். ஒட்டுசுட்டான் முகாமை புலிகள் தாக்கியபோது 800 படையினர் இறந்ததாக பி.பி.சி. கூறியது. ஆனால் அங்கு உண்மையில் இறந்தது 79 படையினரே. வேறொரு நாட்டில் இப்படிச் செய்தி கூறப்பட்டிருந்தால் அவரைத் தூக்கில் இட்டிருப்பார்கள்.

**✪ ஆனாலும், பத்திரிகைச் சுதந்திரம் என்கின்ற ரீதியில் இவைபற்றிக் கூற பி.பி.சி. இற்கு உரிமை இருக்கிறதுதானே?**

## சிங்களம் கூறும் சில...

*- மாந்தன் -*

➲ உரிமை இருக்கிறது. ஆனால், அது புலிகளின் பிரச்சாரமாக இருக்கக்கூடாது. இன்று ஆனந்திக்கள், எல்மோக்கள், வசந்தராசாக்கள் செய்வது புலிகளுக்கான பிரச்சார வேலைகளே. 1999 நவம்பர் மாதம் முதலாம் திகதி வரை சிறீலங்காவின் இராணுவத்தினரில் 7200 பேர் இறந்துபோய் 25,000 பேர் காயமடைந்துள்ளனர். யுத்தத்திற்காக மாத்திரம் 1500 கோடி செலவாகின்றது. இப்படியான நிலைமை இருக்கையில் இவர்கள் புலிகளுக்காகப் பிரச்சாரம் செய்கிறார்கள். நாட்டை நாசப்படுத்த இவர்கள் செய்வதை பிரச்சார சுதந்திரம் என்பதா?

**✪ இராணுவத்தினராலும் கூட பெண்கள் மீது வல்லுறவு, ஆட்கடத்தல், கொள்ளைகள் போன்றவை நிகழ்த்தப்படுகின்றனவே? அதுபற்றி பிரச்சாரம் செய்வது தவறா? நீங்கள் ஏன் இதுபற்றி மௌனமாக இருக்கிறீர்கள்?**

➲ புளொட் அமைப்பினரும் கடைகளில் கொள்ளையடிக்கிறார்கள். மக்களுக்கு செல்லும் உணவுகளை புலிகள் பிடுங்கிக்கொள்கிறார்கள். ஆனால் இதுபற்றி பி.பி.சி. ஒரு வார்த்தை பேசிக்கொள்வதில்லை. நான் கேட்கிறேன் 1939 - 1945 வரை நடந்த யுத்தத்தின்போது ஆங்கிலப்படைகள் மேற்கொண்ட பெண் வல்லுறவுகள் பற்றி பி.பி.சி. பேசியிருக்கின்றதா? கன்டபெரியில் அதிமேற்றிராணியார் மேற்கொண்ட மோசடிகளைப் பற்றியும், ஐரிஸ் மக்களுக்கு எதிராக பிரித்தானியா மேற்கொள்ளும் அடக்குமுறை பற்றியும் பி.பி.சி ஒரு வசனமாவது பேசியிருக்கின்றதா?

**✪ புத்தரின் அபிமானிகளே, பௌத்த புதல்வர்களே வீதிக்கு இறங்கி கொலை செய்யுங்கள், யுத்தம் புரியுங்கள் எனக்கேட்பது புத்த சமயத்தையும் நாட்டையும் சர்வதேச ரீதியில் பாதிப்புக்கு உள்ளாக்கும் ஒரு விடயம் அல்லவா?**

➲ துட்டகைமுனு அரசர் கூட யுத்தமுனைக்கு செல்லும்போது 500 பிக்குகளுடன்தான் சென்றார். எப்போதுமே அந்நிய சதிகளுக்கு எதிராக ஒருங்கிணைந்தது எங்கள் பிக்குக்கள் தான். அது நாட்டிற்காக, இனத்திற்காக!

**✪ யுத்தம் காரணமாக ஆயிரக்கணக்கில் படையினர் இறக்கிறார்கள். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அனாதையாகின்றன. அப்படியான நிலையில் யுத்தத்தை மேலும் கொண்டுசெல்வது தேவைதான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

➲ நான் கேட்பது இவ்வளவுதான். ஹிட்லர் தாக்கியபோது ஆங்கிலப்படைகள் கால்களையும், கைகளையும் கட்டிக்கொண்டு பேசாமலா இருந்தார்கள்? யுத்தம் நடக்கவேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனாலும் புலிகளை தோற்கடிக்க வேண்டும். வானொலியில் ஆனந்தி நடாத்தும் தமிழ்ப்பிரிவில் யுத்தத்தில் தமிழ் இளைஞர்கள் இறந்துபோகிறார்கள், அதனால் யுத்தம் செய்ய வேண்டாம் என எப்போதாவது கூறுகிறாரா?

**✪ சமுதாய அரசியல் கட்டமைப்பிற்குள் நீங்கள் யுத்தத்தை அனுமதிக்கிறீர்களா?**

➲ நாம் சண்டைகளை அனுமதிக்கவில்லை. நாம் கூறுகிறோம், விடுதலைப் புலிகளின் யுத்த முன்னெடுப்பை தோற்கடிக்கவேண்டும் என்றே! ஆகையால் பயங்கரவாதத்திற்கு எதிராக நாம் கைகால்களை கட்டிக்கொண்டு இருக்கவேண்டும் என்றால் அதற்கு நான் எதிர்.

**✪ பௌத்தமகன் ஒருவர் ஒருநாட்டின் தேசியக்கொடி ஒன்றினை எரிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதா?**

➲ நோர்வே என்பது எமக்கு முற்றுமுழுதான எதிரி நாடாகும். அதன்கொடியை எரிப்பது கூட பெறுமதியானது அல்ல. வாரியப்பொல சுமங்கல தேரோ ஆங்கிலக்கொடியை கீழேபோட்டு காலால் மிதித்தது, அவர்கள் எமக்கு எதிராளியாகியதால் தான்.

**✪ நோர்வே எதிரி நாடு என எப்படிக் கூறுகிறீர்கள்?**

➲ நோர்வே நாட்டிற்கு மற்றொரு நாட்டின் ஜனநாயக நடவடிக்கைகளில் தலையிடுவதற்கு எந்த வித தார்மீக உரிமைகளும் கிடையாது. அந்நாட்டின் முதற்தர குடிமக்களாக இருக்கும் போதகர்களுக்குக் கூட அங்கு சரியான சுதந்திரம் வழங்கப்படவில்லை. அடுத்ததாக எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் தகவல் வலைத் தலைமையகம் இருப்பது, நோர்வேயின் ஒஸ்லோவிலே! அடுத்ததாக சோல்கைன் என்பவர் யார்? கடந்த 20 வருடங்களாக விடுதலைப் புலிகளுக்காக பேசிய ஒருவர். இவர்களுடைய மே தின ஊர்வலங்களில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் செல்வதுண்டு. இவர்கள்தான் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வருகிறார்கள். எமது இராணுவத்தின் மனோ தைரியத்தை உடைத்தெறியும் ஒப்பந்தம் ஒன்றை பொறுப்பேற்றுள்ள நாடுதான் நோர்வே எனப்படுவது.

ஜேர்மனி பொன் (Bonn) நகரில்

யாழ் ரவல்ஸ்
YARL TRAVELS
Köln - Str 79, 53111 Bonn.

உலகின் எப்பாகங்களுக்கும் மலிவு விலையில்
பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்
சிறீலங்கா, இந்தியா, சிங்கப்பூர், கனடா
ஆகிய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.

தொலைபேசி இலக்கம்: 0228/9652885 – தொலைநகல்: 0228/9652985

GE-Pub




# ரஷ்யப் படைகளுக்கெதிரான யுத்தத்தை நிறுத்த செச்சினிய ஜனாதிபதி உத்தரவு

(23.04.2000)

செச்சினிய ஜனாதிபதியான அஸ்லான் மஸ்கடோவ் தனது படையினரை ரஷ்யாவுக்கு எதிரான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் யுத்த நிறுத்தம் ஒன்றினை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளதாகக் கூறியுள்ளார். ஆனால் ரஷ்ய பேச்சாளர் ஒருவர் இதனை மறுத்துள்ளார்.

ஆனால் செச்சினியாவுடன் சமாதானமுயற்சியிலான தீர்வொன்றுக்கு வர ரஷ்யா அண்மையில் இணக்கம் தெரிவித்துள்ளது. இதன்படி சில இடைத்தரகர்களின் உதவியுடனான தொடர்புகளையும் அது ஏற்படுத்திக்கொண்டது. கடந்த வெள்ளியன்று வெளியாகிய மஸ்காடொவின் பேட்டியொன்றில் தான் படையினரை யுத்த நிறுத்தம் செய்ய உத்தரவிட்டுள்ளதாகவும் அமைதியான தீர்வொன்றுக்காக மொஸ்கோ கேட்டுக்கொண்டதற்காகவே தாம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளேன் என்று கூறியுள்ளார்.

செச்சினியாவின் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள மஸ்காடோவே செச்சினியாவின் தலைமைத் தளபதியாவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் செச்சினிய தீவிரவாதிகளால் கைது செய்யப்பட்டுள்ள ரஷ்ய இராணுவத்தினரை உடனடியாக விடுதலை செய்யுமாறும் இதற்காக எவ்வித முன்நிபந்தனையையும் தான் விதிக்கவில்லையென்றும் கூறியுள்ளார். அண்மையில் மஸ்காடொவ் ஜேர்மனியின் சஞ்சிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் தற்போதைய யுத்தத்துக்கு சமில்பசாயெவும், கத்தாபுமே காரணம் எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

இவை பற்றிக் கருத்து வெளியிட்ட ரஷ்யப் பாதுகாப்பு பேச்சாளர் மஸ்காடொவ் சுமார் 300 முதல் 400 வரையிலான உறுப்பினரைக்கொண்ட படையையே கட்டுப்படுத்துகின்றார். அவரது படையினர் தங்களது ஆயுதங்களுடன் சரணடைந்தால் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி ரஷ்யா யோசிக்கும் என்று கூறியுள்ளார்.

# சிம்பாப்வே தலைநகரில் குண்டுவெடிப்பு பத்திரிகை அலுவலகம் சேதம்

(23.02.2000)

சிம்பாப்வே தலைநகர் ஹராரேயில் உள்ள எதிர்க்கட்சிப் பத்திரிகையான 'டெய்லிநியூஸ்' அலுவலகத்தின் முன்னால் பாரிய குண்டுவெடிப்பு ஒன்று இன்று இடம்பெற்றுள்ளது. வெள்ளையின பண்ணைச் சொந்தக்காரர்களுக்கு ஆதரவாக எதிர்க்கட்சிகள் செயற்படுகின்றன என்று ஜனாதிபதி முகாபேயின் ஆதரவாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஹராரேயில் அமைந்துள்ள 'டெய்லி நியூஸ்' பத்திரிகை அலுவலகம் வார இறுதியில் பூட்டப்பட்டிருந்த வேளையிலேயே இக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது. அலுவலகத்துக்குக் குறிப்பிடத்தக்க அளவு சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

சிம்பாப்வேயில் கடந்த சில வாரங்களாக வெள்ளையின பண்ணை உரிமையாளர்களுக்கும், முன்னாள் விடுதலைப் போராளிகளுக்கும் இடையே நிலத்தகராறு இடம்பெற்று வருகின்றது. இதில் இரண்டு வெள்ளை இனத்தவர்கள் கொல்லப்பட்டனர். கறுப்பினத்தவர்களது வீடுகள் பல தீக்கிரையாக்கப்பட்டன. இதற்கிடையே நிலப் பங்கீடு அவசியமானதுதான் எனக் கூறியுள்ள பிரித்தானியா சரியான முறையில் அது இடம்பெறுமானால் தமது நாடு அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் என்று தெரிவித்துள்ளது. ஆனால் முகாபே தனது உறவினர்களுக்கும், நெருங்கிய ஆதரவாளர்களுக்குமே நிலத்தைப் பகிர்ந்தளிக்க முற்படுகின்றார் என்ற குற்றமும் பிரித்தானியாவால் சுமத்தப்பட்டுள்ளது.

# நேட்டோவின் யுரேனியக்குண்டு பாவிப்பினை யுகோஸ்லாவியா வன்மையாகக் கண்டித்தது

(21.04.2000)

மேற்கு நாட்டுத் தலைவர்களும், தளபதிகளும் கடந்த வருடம் நேட்டோ யுகோஸ்லாவியா மீது நடத்திய விமானத்தாக்குதலின்போது யுரேனியக் குண்டுகளைப் பாவித்ததாக ஒப்புக்கொண்டுள்ளனர். தமது விமானங்கள் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களில் யுரேனியக் குண்டுகள் பாவிக்கப்பட்டன என்றும் கூறியுள்ளனர். ஆனால் இவர்களது கணக்குக்குப் பல மடங்கு அதிகமான குண்டுகளை நேட்டோ வீசியுள்ளது என்று யுகோஸ்லாவிய பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளதுடன், நேட்டோவின் நடவடிக்கைகளால் நீர், நிலம், சுற்றாடல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக வன்மையான கண்டனங்களை மேற்கொண்டுள்ளார்.

கடந்தவருடம் நேட்டோ யுகோஸ்லாவியா மீது குறிப்பாக அல்பேனிய எல்லையிலும் கொசோவோ பகுதியிலும் சுமார் 50,000 வரையிலான யுரேனியக் குண்டுகளை வீசியுள்ளது. சேர்பியாவின் ஏழு பகுதிகளிலும் மொன்டிநேக்ரோவின் ஒரு பகுதியிலும் இக் குண்டுகளின் பாதிப்புக்கள் பாரிய அளவில் ஏற்பட்டுள்ளது என்று கூறும் யுகோஸ்லாவிய ஆய்வாளர்கள் அப்பகுதிகளை மக்களுக்காக தடைசெய்து கதிரியக்க ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# சீனாவுடன் கூட்டு நடவடிக்கைகளுக்கு தாய்வான் ஆர்வம் என தெரிவிப்பு

(22.04.2000)

தாய்வானின் புதிய அதிபராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள வொம் ஷென், சீனாவுடன் கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடத் தாம் தயாராய் இருப்பதாக அங்கு விஜயம் செய்த சீனக் கொள்கை ஆய்வாளரிடம் தெரிவித்துள்ளார். ஆனால் இதனை நிச்சயம் சீனா ஏற்றுக்கொள்ளாது என்பதனை அவர் உடனடியாகக் கூறியுள்ளார்.

அத்துடன் தாய்வானின் புதிய அமைச்சரவைக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் யாவரும் சீனாவுடன் நல்லுறவுகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் நாட்டின் இலஞ்சத்தை ஒழிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். சர்வதேச வர்த்தகத்தில் நீண்ட கால அனுபவத்தைக் கொண்டிருக்கும் சாய்யிங்வெங் பெரு நிலத்துடன் தொடர்புகளை மேற்கொள்ளும் அலுவலகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சீனா உலக பொருளாதார அமைப்புக்குள் இணைய முற்படுவதற்கு தாய்வான் தனது உதவிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஐம்பது வருடங்களாக பிரிவடைந்துபோயுள்ள உறவுகளை ஒட்டவைக்க இது உதவும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# நான்கு மத்திய ஆசிய நாடுகள் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன

(22.04.2000)

முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் குடியரசுகளான நான்கு மத்திய ஆசிய நாடுகள் தமக்கிடையே பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்திக்கொண்டன. பிராந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதாலும் இப் பிராந்திய நாடுகளின் ஸ்திரத் தன்மையை உறுதி செய்வதற்காகவுமே இவ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்று உஸ்பெகிஸ்தான் அதிபர் தெரிவித்துள்ளார்.

உஸ்பெகிஸ்தான் கசகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிக்கிஸ்தான் போன்ற நாடுகளின் தலைவர்கள் உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஷ்கன்ட்டில் கடந்த வெள்ளியன்று சந்தித்து இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி ஏற்பட்டதன் பின் இப்பிராந்தியம் தீவிரவாத இஸ்லாமியத்துக்குள் இழுத்துச் செல்லப்பட ஆரம்பித்துள்ளது. இது தடுத்து நிறுத்தப்படவேண்டும். அத்துடன் போதைவஸ்து கடத்தல், ஆயுதக் கடத்தல் போன்றவைகளும் அதிகரித்துள்ளன என்று கூறிய உஸ்பெகிஸ்தான் அதிபர் இஸ்லாம் கரிமோவ் இப்பாதுகாப்பு ஒப்பந்தத்தின் மூலம் மீண்டும் ஸ்திர நிலைமையைத் தோற்றுவிக்க முடியும் என்றார்.

கடந்த புதன்கிழமை இப்பிராந்தியத்துக்கு ஐந்து நாட்கள் உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண்டு சென்ற அமெரிக்க வெளியுறவு செயலர் மெடலின் ஓல்பிறைட் இஸ்லாமிய தீவிரவாதம் இப்பிராந்திய அபிவிருத்திக்குத் தடையாயிருப்பதுடன் மனித உரிமை மீறல்களுக்கு அடிப்படையாகவும் உள்ளதாக எச்சரிக்கை விடுத்தார். அத்துடன் இந்நாடுகளுக்கு 10 மில்லியன் டொலர் உதவித் தொகையை அமெரிக்க அரசு வழங்கியுள்ளது.

# பாலஸ்தின - இஸ்ரேல் பேச்சுக்கள் மீண்டும் ஏப்ரல் -30 இல் ஆரம்பம்

(21.04.2000)

இஸ்ரேலிய அரசுக்கும் பாலஸ்தீனிய அதிகாரசபையினருக்கும் இடையே தென் இஸ்ரேலிய கடற்கரை நகரமான எய்லாட்டில் இம்மாதம் 30ம் திகதி அமைதிப்பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாக உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் அமெரிக்கா தனது தூதுக்குழு ஒன்றையும் அனுப்பிவைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ம் திகதி ஆரம்பமாகும் பேச்சுவார்த்தைகளில் எல்லைகள், ஜெருசலேமின் எதிர்கால நிலை, பாலஸ்தின அகதிகளின் எதிர்காலம் போன்றவை, சம்பந்தமாக மேற்கொள்ளப் போகும் ஒப்பந்தங்கள் பற்றிய முதற்கட்ட ஒப்புதல்கள் மேற்கொள்ளப்படும். இம்முறை இரு தரப்பினரும் 2 வாரங்களுக்குத் தொடர்ந்து பேச்சுக்களை மேற்கொள்வார்கள். வெள்ளி, சனி போன்ற நாட்கள் மாத்திரம் பேச்சுக்களுக்கு விடுமுறை அளிக்கப்படும் என பாலஸ்தின பேச்சுவார்தைக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

கடந்த வியாழனன்று பாலஸ்தின அதிகார சபையின் தலைவர் யாசிர் அரபாத் அமெரிக்க அதிபர் பில் கிளின்டனைச் சந்தித்து மூன்று மணிநேரங்கள் நடத்திய பேச்சுக்களை மேற்கொண்டார். இதன் பின்னர் அமெரிக்காவின் ஒத்துழைப்பு இம்முறை அதிகமாக இருக்கும் என்ற அறிவிப்பினை அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பிலிப்பைன் விமானத்தின்ஸ் கறுப்புப்பெட்டி கண்டுபிடிக்கப்பட்டது

(22.04.2000)

பிலிப்பைன்ஸ் விமானசேவை நிறுவனத்தின் போயிங் விமானம் ஒன்று கடந்த புதனன்று விபத்துக்குள்ளாகியது. இவ் விபத்து பற்றி ஆராயும் குழுவினர் அதன் கறுப்புப்பெட்டி எனப்படும் விமானப் பதிவுக் கருவியைக் கண்டுபிடித்துள்ளனர். அப் பதிவுக் கருவி வாஷிங்டனில் உள்ள தேசிய போக்குவரத்து பாதுகாப்புச் சபையின் ஆய்வுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எயார் பிலிப்பைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் 737 ரக விமானம் தலைநகர் மனிலா விமான நிலையத்திலிருந்து தென்பகுதியின் உல்லாசத் தீவான சமல்நோக்கி புதனன்று இரவு புறப்பட்டது. சமல் தீவின் டாவோ விமான நிலையத்தில் இறங்க முற்பட்டபோது ஏற்கனவே விமான ஓடுபாதையில் இன்னுமொரு விமானம் நிற்பதாகவும் சற்றுநேரம் வான வெளியில் சுற்றுமாறும் அவ் விமானத்திற்குக் கூறப்பட்டது. மீண்டும் மேலெழுந்த விமானத்தின் ஒரு இறக்கையின் ஒரு பகுதி தென்னை மரமொன்றில் மோதி உடைந்துபோனது. இதனையடுத்து மீண்டும் மேலே முந்த விமானம் பின் மரங்களுக்கு நடுவே விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விமானத்தில் ஈஸ்டர் விடுமுறையினைக் கழிக்கும் நோக்கில் புறப்பட்ட பயணிகள் 124 பேரும் 7 சிப்பந்திகளும் இருந்துள்ளனர்.

கடந்த வாரத்தில் மட்டும் மூன்று விபத்துக்களில் 300 வரையிலானோர் இறந்துபோயுள்ளனர். கடந்தவாரம் இரண்டு பயணிகள் படகு விபத்துக்களில் 140 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர்.

# சீனத் தலைவர் துருக்கி, கிரேக்கம் விஜயம்

(21.04.2000)

சீன ஜனாதிபதி ஜியாங் செமீன் தனது உத்தியோகபூர்வ விஜயத்தில் அடுத்த கட்டமாக கடந்த புதனன்று துருக்கிக்கு வந்துசேர்ந்தார். துருக்கியில் மூன்று நாட்கள் தங்கியிருக்கும் அவர் இருநாட்டு வர்த்தகத்தை மேலும் விருத்தி செய்வது பற்றிய பேச்சுக்களை மேற்கொள்கின்றார். துருக்கியின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்த அவர் இஸ்தான்பூலில் துருக்கி தொழிற்சாலை உரிமையாளர்களைச் சந்தித்துப் பேசினார். துருக்கியும் சீனாவும் இப்போது வருடாந்தம் 900 மில்லியன் டொலர் பெறுமதியான வர்த்தகத்தை மேற்கொள்கின்றன. இதனை மேலும் அதிகரிக்கும் ஒப்பந்தங்கள் சிலவற்றை கைச்சாத்திடுவது பற்றியும் பேச்சுக்களை மேற்கொண்டார்.


சீனாவின் வடமேற்கு பிராந்தியமான ஸிங்ஜியாங் பகுதியில் சிறுபான்மை இஸ்லாமியர் சீன அரசினரால் நடத்தப்படும் முறை குறித்து துருக்கி தனது ஆட்சேபத்தையும் தெரிவித்தது. அத்துடன் தலைநகர் அங்காராவில் முஸ்லிம் ஆர்ப்பாட்டக்காரர்கள் சீன ஜனாதிபதிக்கு எதிராக கோசங்களை எழுப்பினார்கள். சீன ஜனாதிபதி துருக்கியில் இருந்து கிரேக்கத்துக்கு முதலாவது விஜயத்தை மேற்கொள்கின்றார். சீனத் தலைவரொருவர் கிரேக்கத்துக்கு வருவது இது தான் முதலாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# ருவாண்டாவின் ஜனாதிபதியாக கெகாமே பதவியேற்றார்

(21.04.2000)

ருவாண்டாவின் புதிய ஜனாதிபதியாக 42 வயதான சிறுபான்மை டுக்சி இனத்தைச் சேர்ந்தவரும், விடுதலைப் போராட்டத் தலைவருமான போல்கெகாமே பதவியேற்றார்.

ருவாண்டாத் தலைநகர் கிகாலியில் அமாஹறோ விளையாட்டரங்கில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மத்தியில் சாம்பிய ஜனாதிபதி பட்ரிக் சிலுபா, தான்சானியா ஜனாதிபதி பென்ஜமின் ம்காபா, புருண்டி ஜனாதிபதி பியர்புயோனா போன்றோர்களின் ஆசியுடன் சனியன்று இப் பதவியேற்றவிழா இடம்பெற்றது.



1994ம் ஆண்டு ருவாண்டாவின் ஹீடு அரசினை கெகாமே தலைமையிலான ருவாண்டா தேசப்பற்று முன்னணியினர் கைப்பற்றினார்கள். அதன்பின் பெரும்பான்மை ஹீடு இனத்தைச் சேர்ந்த பிசுமுங்குவை ஜனாதிபதியாக நியமித்த கெகாமே உதவி ஜனாதிபதியாகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் பதவியேற்றார். அண்மையில் பிசுமுங்கு பதவிவிலகினார். அதனைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக கெகாமே பதவியேற்றுள்ளார். அவர் தனது பதவியேற்ற விழாவையடுத்து பேசியபோது ருவாண்டாவில் இனவேறுபாடு இப்போது கிடையாது. 94ல் நாட்டைவிட்டு வெளியேறிய ஹீடு மக்களில் இன்னும் குறிப்பிடத்தக்க தொகையினர் மீண்டும் திரும்பவில்லை. அவர்கள் திரும்பிவந்து நாட்டை வளப்படுத்தவேண்டும் என்று கூறினார்.

# ஜோன்ஸ்டவுன் கூட்டு மரணங்கள்-2

ஜோன்ஸ் டவுனின் இரகசியங்களையும், சட்டவிரோத நடவடிக்கைகளையும், மனித உரிமை மீறல்களையும் ஆராய பத்திரிகையாளர்களையும், அரச அதிகாரிகளையும் அழைத்துச்சென்ற கலிபோர்னியாவின் காங்கிரஸ் உறுப்பினர் லியோன் ரயன் ஜோன்ஸ்டவுனில் ஒருநாள் தங்கியிருந்து அங்கு தங்கியிருந்தவர்களுடன் பேசி உண்மைநிலையை அறிந்து கொண்டார். அத்துடன் மக்கள் கோயில் நிர்வாகியான 4ம் ஜோன்ஸ் உடனும் அங்கிருந்த மக்கள் கோயில் சட்ட வல்லுநர்களுடனும் பேச்சுக்களை மேற்கொண்டார். மறுநாள் இக்குழு புறப்பட்டபோது அங்கிருந்த சிலரும் ரயனுடன் மீண்டும் அமெரிக்கா செல்ல விரும்பியதாகக், குறிப்பிட்டிருந்தோம் அல்லவா! அப்படி உறுப்பினர்கள் திரும்பிச் செய்வதை 4ம் ஜோன்ஸ் விரும்பவில்லை. அத்துடன் மக்கள் கோயில் இரகசியங்களை அறிந்துகொண்ட காங்கிரஸ் குழுவினர்களும் அமெரிக்கா செல்வதானது மிகவும் ஆபத்தானது என்பதை மக்கள் குழு உறுப்பினர்கள் அறிந்துகொண்டனர். நவம்பர் 17ம் திகதி அங்கு வந்த குழுவினர் 18ம் திகதி மதியம் மீண்டும் புறப்பட முனைந்தபோது அங்கிருந்த லியோன் ரயனை நோக்கிப் பாய்ந்த ஒரு உறுப்பினர், தன்னிடம் இருந்த கத்தியினால் ரயனின் தோள்முட்டுப்பகுதியை நோக்கிக் குத்தினார். காயப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்க்கு உடனடியாகச் சிகிச்சை வழங்கப்பட்டபோதிலும், மிகவும் திட்டமிட்ட ரீதியில் தூதுக்குழுவின் பயணத்தை தாமதப்படுத்தும் நடவடிக்கையாகவே இது மேற்கொள்ளப்பட்டது என்பதை அப்போது யாரும் அறிந்திருக்கவில்லை. அங்கிருந்த தீவிர ஆதரவாளர் ஒருவர் ரயன் மீது கொண்டிருந்த ஆத்திரத்தின் விளைவுதான் அது என்றே தூதுக்குழுவினர் நினைத்தார்கள்.

## மதக்குழு மரணங்கள்

எப்படியிருந்த போதிலும் மக்கள் கோயிலில் இருந்து விலகிப்போக விரும்பிய குழுவினரை வாகனம் ஒன்றில் ஏற்றி பிற்பகல் மூன்று மணியளவில் ரயன் அனுப்பிவைத்தார். அதன்பின் மேலும் ஒருமணிநேரம் ஜிம்ஜோன்ஸ் உடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு ரயனும் புகைப்படக் குழுவினரும் கயித்தோமா விமானத் தளம் நோக்கி புறப்பட்டனர்.

கயித்தோமா விமானத் தளத்துக்கு முதலாவது குழுவினர் வந்து சேர்ந்தபோது அங்கு விமானங்கள் எதுவும் காணப்படவில்லை. அமெரிக்க தூதரகத்திடம் முதல்நாளே மக்கள் கோயில் அதிருப்தியாளர்கள் சிலர் அமெரிக்கா திரும்ப எண்ணியுள்ளார்கள் என்ற விடயமும் மற்றுமொரு விமானம் தேவை என்கின்ற விடயமும் ரயன் குழுவினர்களால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் விமானத் தளத்துக்கு விமானங்கள் வந்து சேர்ந்திருக்கவில்லை. இதுவும் குழுவினர்களை ஆபத்துக்கு உள்ளாக்கவே என்பதை அப்போது குழுவினர் அறிந்திருக்கவேயில்லை. குயானாவின் அமெரிக்க தூதரகத்தில் கடமையாற்றிய மக்கள் கோயில் ஆதரவாளர்களால் தகவல்கள் சரியான முறையில் பரிவர்த்தனை செய்யப்படவில்லை. வேண்டுமென்றே தாமதப்படுத்தப்பட்டிருந்தன என்பது பின்னர்தான் தெரியவந்தது.

ஒரு வழியாக மாலை 4.30 மணியளவில் விமானங்கள் இரண்டு வந்து சேர்ந்தன. முதலாவது விமானத்தில் மக்கள் கோயில் அதிருப்தியாளர்கள் ஏற்றப்பட்டனர். இரண்டாவது விமானம் தூதுக்குழுவினருக்காக ஒதுக்கப்பட்டது. முதலாவது விமானத்தில் இருந்தவர்கள் மேல் உள்ளிருந்த ஒருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்று குறிப்பிட்டிருந்தோம். எல்லோரும் துப்பாக்கிச் சூட்டால் வெளியே விழ ஒரு பெண் மட்டும் எஞ்சியிருந்தார். அவருடன் ஜோர்ஜ் டவுன் நோக்கி விமானம் விரைவாகப் புறப்பட்டுச் சென்றது.



இரண்டாவது விமானத்துக்கு நடந்த கதி பற்றியும் கூறியிருந்தோம். விமானி மற்றும் காயங்களுடன் ஒருவர் தவிர அதில் இருந்த எல்லோரும் கொல்லப்பட்டிருந்தனர்.

இப்படியாகத் தூதுக்குழுவினர் அப்படியே முழுமையாக கயித்தோமா விமானத் தளத்தில் துடைத்தெறியப்பட்டிருந்தனர். அடுத்த விமானத்தில் இருந்து வெளியே விழுந்தவர்கள் உழவு இயந்திரத்தில் வந்தவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர். காங்கிரஸ் உறுப்பினர்களது உடல்களுடன் இரண்டாவது விமானம் ஜோர்த்டவுனை அடைந்தது. மாலை 5.00 மணிக்கே இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கயித்தோமாவில் இச் சம்பவம் இடம்பெற்ற அதே நேரத்தில்தான் ஜோன்ஸ்டவுனிலும் கூட்டு மரணங்கள் ஆரம்பித்துள்ளன.

குயானாவில் காங்கிரஸ் உறுப்பினர் கொல்லப்பட்டார் என்ற செய்தி அமெரிக்காவுக்குத் தெரியப்படுத்தப்பட்டு சில நிமிடங்களில் ஜோர்ஜ்டவுனில் அமைந்திருந்த மக்கள் கோயில் தலைமையகத்தில் தனது மனைவியும் நான்கு குழந்தைகளும் இறந்து கிடப்பதாக ஒருவர் பொலிசாரிடமும் முறைப்பாடு செய்தார். அவர்கள் அமெரிக்காதலால் தூதரகத்துக்கு மீண்டும் தகவல் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து பரபரப்பாகிய அமெரிக்கத் தூதரகத்துக்கு அதிகாலை 2.00 மணியளவில் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஜோன்ஸ்டவுன் கூட்டு மரணச் செய்தி தெரிவிக்கப்பட்டது. அங்கிருந்த உறுப்பினர்களில் 918 பேர் தங்களை மாய்த்துக் கொண்டனர் என்ற செய்தி உடனடியாக அமெரிக்காவுக்குத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட சில மணிநேரத்துக்குள் 900 இற்கு மேற்பட்ட மக்கள் கூட்டாகத் தற்கொலை செய்துகொண்டார்கள் என்ற செய்தியில் உண்மை இருக்கமுடியாது என்று அமெரிக்க உளவுத்துறை நிச்சயமாக நம்பியது

(மதக்குழு மரணங்கள் தொடரும்)

– உதயன்


ஆனையிறவு வீரப்புதல்வர்களுக்கு

எமது வணக்கமும் வாழ்த்துக்களும் பாராட்டுதல்களும்

நர்மதா எக்சோத்திக்

Tél: 01 48 51 09 02

17, Av. de la Résistance - 93100 Montreuil.
(M°: Croix de Chavaux)
Monoprix இற்குப் பின்பாக Tresor public இற்கு அருகே
Centre Commercial Croix de Chaveaux வில்

Pub

ETC

# ஈழம் தொலைபேசி அட்டையின் இதர சேவைகள்

தொலைபேசிச் சேவையில் ஒரு வருடத்தைப் பூர்த்திசெய்துள்ள ஈழம் தொலைபேசி அட்டைகள் நிறுவனத்தினர் மீண்டும் தமது கட்டணங்களைக் குறைத்துள்ளனர். அத்துடன் புதிய பல தொழில்நுட்பங்களையும் இணைத்துள்ளனர்.

**விரைவான இணைப்பு**

மிக அருகிருந்து பேசுவதுபோல் ஓர் உணர்வு, அப்படி ஒரு தெளிவு உங்கள் பணம்! அது வீணே விரையமாகலாமா? உங்கள் தொலைபேசித் தேவைப் பூர்த்தியினூடு தமிழீழ விடுதலைக்கும் ஓர் பங்களிப்பு ஈழம் தொலைபேசி அட்டைப்பாவனையூடு ஓர் நிறைவு

100 மார்க் ஜேர்மன் தொலைபேசி அட்டையில், விலை குறைக்கப்பட்ட நாடுகள் உதாரணத்திற்குச் சில

இலங்கை .................... 137 நிமிடங்கள்
இந்தியா ...................... 115 நிமிடங்கள்
சீனா ......................... 200 நிமிடங்கள்
கானா (Ghana) ............ 169 நிமிடங்கள்
டோகோ (Togo) ............ 88 நிமிடங்கள்

நட்ச்சத்திரம் (*) 7ஐ அழுத்தி தினமும் தமிழீழத் தொலைபேசிச் செய்தியைக் கேட்கலாம்..

நீங்கள் தொடர்புகொள்ளும் இலக்கம் வேறு தொடர்பில் இருந்தால் மீள அதே இலக்கத்துடன் தொடர்பு கொள்வதற்கு நட்சத்திரம் (*) 2ஐ அழுத்தி மீளத் தொடர்பு கொள்ளலாம்.

## இது தாயகம் நோக்கிய..... தொலைபேசி அட்டைகள்

தொடர்புகட்கு :
ஜேர்மனி .................... 0208 2053652 / 01732722846
சுவிஸ் .......................... 079 66 400 14
நெதர்லாந்து ............ 0650464370 / 0703351019



















ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# முடியாத தொடரல்ல

இரைவிழுங்கிய மலைப்பாம்பு என, தமிழீழத்தின் கேந்திரத்தில் படுத்துக்கிடந்த ஆக்கிரமிப்புச் சின்னம் ஒன்று துடைத்தெறியப்பட்டு, அங்கு சுதந்திரத்தென்றல் உலாவர ஆரம்பித்துள்ளது. ஆனையிறவு, சிங்கள இராணுவம் எகத்தாளத்துடன் பல வருடங்களாகத் தளம் அமைத்திருந்த ஒரு பிரதேசமாகும். இந்த ஆக்கிரமிப்புச் சின்னத்தின் மூலம் தமிழ்த் தேசியத்திற்கு, சிங்களத் தேசம் செய்த கொடுமைகள் எழுத்துருவில் வடிக்க இயலாதவை. தமிழ்த் தேசியத்தை ஆக்கிரமித்த இந்தச் சின்னம், இன்று நேற்று எழுந்ததல்ல. இற்றைக்கு 240 வருடத்திற்கு முன்னரே அந்நிய இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் படலம் ஆனையிறவில் ஆரம்பித்தது. வன்னி இராச்சியம் தொட்டு இன்றைய வலிகாமம் வரை இந்த ஆக்கிரமிப்புத் தளத்தினால் அடைந்த துயரங்கள் எமது வரலாற்றின் பல இடங்களில் பதிவாகியுள்ளது. 'எம்மை ஒன்றும் செய்ய முடியாது, சுற்றிலும் பரந்தவெளி, நாமே இப்பிரதேசத்தின் ராஜாக்கள்' என கொக்கரித்த சிங்கள இராணுவம் இன்று 'துண்டைக் காணோம், துணியைக்காணோம்' என ஆனையிறவில் இருந்து தலைதெறிக்க ஓட்டம் பிடித்துள்ளன.

தாம் கவசமாக நம்பிய ஆயுதத் தளவாடங்களையும், தமிழரின் போர்ப்படைக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு 'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி' என்ற கோதாவில் அந்நிய இராணுவம் அலறியடித்து ஓடியுள்ளது. ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சி ஒன்றும் மந்திரத்தால் மாங்காய் விழுந்த கதையல்ல. எமது தேசியத்தின் திண்ணிய சுதந்திர வேட்கையின் பலனே அது. ஆக்கிரமிப்பாளன் எந்தக் காலத்திலும், எந்தப் பிரதேசத்திலும் நிலை நிற்க முடியாதென்ற உலகப்பொது நியதியை, ஆனையிறவு வீழ்ச்சி மீண்டும் ஒரு முறை பறைசாற்றியுள்ளது.

கண்டி என்கோண மண்டபத்தில் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு எக்காளத்தொனியுரைத்து, ஆட்சிக்கதிரையைத் தக்க வைத்துக்கொள்ளும் சிங்கள தேசத்தின் அரசியல் தலைமைகளுக்கு, ஆனையிறவு புதிய பாடம் ஒன்றினைப் புகட்டியுள்ளது. அன்று பெரும் ஆரவாரத்துடன் ஜெயசிக்குறுய் படையை வன்னியில் சிங்கள தேசம் நகர்த்தியபோதே எமது தேசியத் தலைவர் ஒரு தீர்க்க தரிசனத்தை வைத்தார். வன்னியில் சிங்கள இளைஞர்களின் குருதி ஆறாக ஓடப்போகின்றது. இந்த அவலத்தை சந்திரிகா அரசு மேற்கொள்ள முனைகிறது என அவர் ஜெயசிக்குறுவை எச்சரித்தார். ஆனால் நடந்தது என்ன? 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' எனக் கொக்கரிக்கும் சிங்கள தேசத்தின் தலைமைகள் தேசியத் தலைவரின் தீர்க்க தரிசனத்தினை உணரத் தலைப்படவேயில்லை. ஆனால் அதன் விளைவினை யதார்த்த ரீதியாக ஆனையிறவு அவர்களுக்கு உணர்த்தி வைத்துள்ளது. ஆனால் இனிமேல் சிங்கள தேசம் என்ன செய்யப்போகின்றது? தொடர்ந்தும் வீம்புக்கான கொடிய போரை நடாத்தி தனது தேசத்தை அழித்துக் கொள்ளப் போகின்றதா? அவர்கள் தலைமைகளே அதனை முடிவு செய்து கொள்ளலாம்.




# பிரபாகரன் ஏற்படுத்திய அடிப்படை மாற்றம்!

தேசியப் பேரழிவு? யார் பொறுப்பு? - என சிங்களப் பேரினவாதத்தை ஆங்கிலத்தில் எழுதும் *தி ஐலண்ட்* ஏடு இன்று (24.04.00) கேள்வி எழுப்பியுள்ளது.

ஆனையிறவுத் தோல்வி இடம்பெற்று 48 மணி நேரத்தின் பின்னர் சிங்கள இராணுவ அதிகாரிகள் தோல்விக்காக விமர்சிக்கப்படுகின்றார்கள். 1995ல் 'யாப்பட்டுனுவ' வெற்றிக்கு உரிமை கோரிய ரத்வத்தை தலைமறைவாகிவிட்டார்(?). புலிகள் ஆனையிறவைத் தாக்கப் போகின்றார்கள் என உளவுத் துறையினர் சொன்னார்களே நீங்கள் என்ன செய்தீர்கள், என சிங்களச் செய்தியாளர்கள் நேற்றுவரை தமது நாயகர்களாகத் திகழ்ந்த இராணுவத்தை கேள்வி கேட்கின்றனர். வெற்றிக்குப் பல தந்தைமார்; தோல்விக்கு ஒருவருமில்லை என விமர்சிக்கப்படுகின்றது.

தமது இப் பகிரங்கமான விமர்சனத்திற்கு பிரதான காரணம் சிறீலங்காவின் பிராந்திய ஒருமைப்பாடு இன்று முழுமையான கேள்விக்கு உள்ளாகியுள்ளமையே என சிங்களம் கூறுகின்றது. தமிழீழம் உருவாகி வருகின்றது என்ற பொது உண்மையை சிறீலங்காவின் தேசிய அச்சுறுத்தலாகப் பார்த்து பீதி கொண்டுள்ள சிங்களம், தலைகீழாக நின்றாவது தமது அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள விழைகின்றது.

## பிரபாகரனின் வியூகம்

ஆனையிறவுச் சுற்றிவளைப்பு மெல்லமெல்ல இறுகத் தொடங்கியபோதே சந்திரிகா தலைமையிலான இராணுவ - அரசியல் தலைமை தம்மைச் சுற்றி பிரபாகரனின் வியூகம் இறுகத்தொடங்கி விட்டதை உணரத்தொடங்கியது. வன்னித் தோல்விகளுக்கு காரணம் சில தளபதிகள் எனக் காரணம் கூறி முதலில் தமது கதாநாயகர்கள் தோற்றத்தைக் காப்பாற்ற முயன்ற தலைமை, வடமாராட்சிக் கரையோரங்களில் புலிகள் கால்பதித்தபோது ஏற்பட்ட பேரழிவை தடுத்து நிறுத்த தலைகீழான முடிவுகளை எடுத்தது. முதலில் யாழ். மாவட்டத் தளபதிக்கு இணையாக மற்றுமொரு தளபதி, முப்படைத் தளபதிகளே யாழ்ப்பாணத்தில் முகாமிடல், 53ம் படைப்பிரிவுக்கு புதிய தளபதி என முடிவுகளை மாற்றிமாற்றி எடுத்தது. ஈற்றில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் எனக் கருதப்பட்டு சந்திரிகாவால் ஒதுக்கப்பட்ட மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டார். ஆனாலும் போரின் போக்கில் மாற்றத்தை எவராலும் ஏற்படுத்த முடியவில்லை.

இன்று போரின் போக்கை ஆராய்ந்துவரும் உலக செய்திநிறுவனங்களும், இராணுவ ஆய்வாளர்களும் இரு விடயங்களை ஒப்புக்கொள்கின்றனர்.

- இராணுவச் சமநிலை புலிகளிற்கு சாதகமாகியுள்ளது. அதாவது புலிகளின் கை ஓங்கியுள்ளது.
- இதன் விளைவாக தமிழர்கள் தமது அரசியல் நிலைப்பாட்டை முன்னிலும் வலுவாக உலக அரங்கில் முன்வைப்பார்கள்.

## நவீன இராணுவச் சிந்தனைகள்

சிங்கள இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையேயான ஆயுத மற்றும் மனிதவலு பலத்தை ஒப்பிட்ட ஆய்வாளர்கள் சிங்கள இராணுவத்தின் பிரமாண்டத்தைச் சுட்டிக்காட்டினர். ஆனாலும், பிரபாகரனின் படையணிகள் சிங்களப் படைகளை பெரும் சமர் ஒன்றில் வெற்றி கொண்டமையை அனைவரும் ஆச்சரியமான விடயமாகவே கூறுகின்றனர். சமர் இடம்பெற்று 72 மணித்தியாலங்கள் முடிவடைந்தும் கூட புலிகளின் படையணி, தாம் பற்றிய வியப்பு அனைத்துத் தரப்பிலும் நிலவுகின்றது.

ஆனால் இதற்கான தெளிவான பதிலை புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேர்ணல் கருணா, ஜெயசிக்குறுய் எதிர் சமர் காலகட்டங்களில் கூறியிருந்தார். யாழ். குடாவில் இருந்து எமது படையணிகளை 1995ல் விலக்கிக் கொண்டதன் பின்னர் எமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் ஒரு படை கட்டும் பணியில் ஈடுபட்டார் என அவர் சுட்டிக்காட்டினார். அன்று பிரபாகரன் திட்டமிட்டு உருவாக்கிய நவீன மரபுச் சமரணியே இன்று ஆனையிறவை வெற்றிகொண்டுள்ளது. சிங்களத்தின் பலம், பலவீனம் என்பனவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து புதிய யுக்திகளுடன் போரை நடாத்தும் படையே வன்னியில் உருவாக்கப்பட்ட தமிழர் படையாகும். இது சிங்களத்தின் ஆட்பலத்தையும், ஆயதபலத்தையும் நுட்பமான வியூகங்களாலும், படைநகர்வுகளாலும், போரிடும் ஆற்றலாலும் வெற்றிகொண்டுள்ளது.

புலிகளின் ஜெயசிக்குறுய் எதிர்சமர் அணுகுமுறையை ஆராய்ந்த ஆய்வாளர் ஒருவர், பிரபாகரன் இப்படியொரு நிலைமையை நோக்கியே போரின் போக்கை தள்ளுவதாக ஊகம் கூறியிருந்தார். ஆனால் சிங்களம் இதனை எதிர்மறையாக அணுகியது. தமது பெரும் படைப்பலம் புலிகளை பின் நோக்கி ஓட வைப்பதாகக் கருதி மேலும் மேலும் அழுத்தத்தை வன்னிக்கு அனுப்பியது. ஈற்றில் புலிகளின் வியூகத்தில் முழுமையாக இராணுவம் சிக்கிய பின்னர் ஓயாதஅலைகள் 3 ஆரம்பமாகியது. இதன் விளைவே இன்று புலிகளுக்கு சாதகமான இராணுவச் சமநிலையாகும்.

## அரசியல் பலம்

உலக சமூகம் சிங்களத்திற்கும் தமிழீழத்திற்கும் இடையே ஒரு இராணுவ அசைவற்ற நிலை உருவாகிவிட்டது என்ற ஊகத்தை ஜெயசிக்குறுய் நடவடிக்கைக்குப் பிற்பட்ட காலத்தில் கொண்டிருந்தது. இதனால் ஒரு தலையீட்டை மேற்கொள்ள முயன்றன.

முதலில் யாழ்.ஆக்கிரமிப்புக்குப் பின்னர் இராணுவச் சமநிலை தமக்குச் சாதகமாக உள்ளதாக அறிவித்தபடி தமது அரசியல் - இராஜதந்திர காய்நகர்த்தலை மேற்கொண்ட சந்திரிகா, பின்னர் தோன்றிய அசைவற்ற நிலையைக் கூட தமக்குச் சாதகமாக பாவிக்க முற்பட்டார். இனச்சிக்கலை வெறுமனே தமிழர்களின் பிரச்சினை எனச் சுருக்கிவிட்டு இராணுவ சமநிலை மாற்றங்கள் வரும் வரை உலக அபிப்பிராயத்தை இழுத்தடிக்க சந்திரிகா முற்பட்டார். கதிர்காமர் ஐ.நா. முன் சர்வதேச நல்லெண்ணத்தை புறக்கணித்ததும் இந் நோக்கிலேயே ஆகும். ஆனால் ஓயாதஅலைகள் 3 ன் முன்னைய கட்டங்கள் உலக அபிப்பிராயத்திற்குப் பலம் சேர்த்ததுடன், சிங்கள இராணுவம் தமது முன்னைய மேல்நிலையை இழக்கத் தொடங்கிவிட்டதை ஏற்றுக்கொண்டன. ஆனாலும் சிங்களத்துடனான போரில் ஒரு தீர்க்கமான வெற்றியைப் புலிகளால் பெறமுடியுமா என உலக சமூகம் சந்தேகம் கொண்டிருந்தது.

இன்று இச்சமரில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து, புலிகளால் தீர்க்கமான வெற்றியைப் பெற முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ள வேளையில், அரசியல் பேச்சுக்கள் கூட ஒரு அணுகுமுறை மாற்றத்திற்குள் செல்வது தவிர்க்க முடியாதது. 1985 முதல் புலிகள் வலியுறுத்தி வரும் அடிப்படை திம்புக் கோட்பாடுகளிருந்து விலகுமாறு கேட்பதற்கான காரணங்கள் ஒன்றுமே உலக சமூகத்திடம் இல்லை.

இவ்வாறான மாற்றத்தினுள் தமிழீழ சிங்கள உறவுகள் சமநிலை மாற்றம் கண்டு வருகின்றது. 'தமது சிங்கள இளைஞர்கள் உயிர்கொடுத்து பல பில்லியன் நிதி செலவிட்டு கட்டியெழுப்பிய இராணுவம் பயங்கரவாதிகளிலும் பலமடங்கு பலம் கொண்டிருந்தும் தோற்கின்றது' எனக் கூறும் *தி ஐலண்ட்* இது தொடரமுடியாது எனவும் இந்தப் பயங்கரவாதிகளை நசுக்குவதற்கான தருணம் இதுவெனவும் கூறுகின்றது. தோல்வியைத் தவிர்ப்பதற்கு வெளிநாட்டு உதவி வேண்டும் என சிங்கள பூமி புத்திரர்கள் கூறுகின்றனர்.

ஆனால் சிங்களம் தனது மேலாதிக்க காலத்தை இழந்துவிட்டது. ஒரு இராணுவத் தீர்வை காணும் பலம் அதனிடம் இல்லை என்பதை உலகம் உணர்கின்றது. தோல்விகாணும் பேரினவாதத்திற்காக போரிடும் ஆற்றல் கொண்ட ஒரு மக்கள் சமூகத்தை பகைக்க உலக நாடுகள் எதுவும் முற்படும் என எதிர்பார்ப்பது சற்று விசித்திரமானதும் கூட. இந் நிலையில் பிரபாகரன் வெற்றிக்கான முன்னெடுப்பில் ஒரு பெரும் அடிப்படை மாற்றத்தை நிகழ்த்தியுள்ளார். செய்தி தெளிவானது: சிங்களம் தனது படைகளை விலக்கிக் கொள்ள வேண்டும். அல்லது விலக்கிக் கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவர். இதில் சமரசம் ஒன்றுமேயில்லை!

**- சத்தியன்**

# படையினர் ஓடுவதை நிறுத்த முடியாது

**கொழும்பின் பிரபல இராணுவ ஆய்வாளர் தராகி அவர்கள், ஆனையிறவுப் படைத்தளத்தின் வீழ்ச்சி தொடர்பாகவும், அதனால் ஏற்படப்போகும் விளைவுகள், மற்றும் யாழ். குடா, கொழும்பு நிலைகளின் எதிரொலிப்புகள் தொடர்பாகவும் இலண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் ஐ.பீ.சி. வானொலிக்கு வழங்கிய செவ்வியில் இருந்து தொகுக்கப்பட்டது.**

ஆனையிறவு - இயக்கச்சி ஆகிய இரு தளங்களிலும் இலங்கைப் படையினர் தங்களுடைய பிரதான போரிடும் அணிகளான 53வது, 54வது படையணிகளை குவித்து வைத்திருந்தார்கள். இதற்கான காரணம் என்னவென்றால், ஆனையிறவுப் படைத்தளத்தின் வீழ்ச்சி என்பது குடாநாட்டினுடைய எதிர்காலத்தை தீர்மானித்துவிடும் என்பதனாலேயே, இந்த அதிசிறப்புப் படையணிகள் இரண்டும் இங்கே குவிக்கப்பட்டன. இந்த இரண்டு படையணிகளும் வீழ்ச்சியுற்றால் இராணுவத்தினருடைய எதிர்காலம் என்பது கேள்விக்குறியாகிவிடும். இதில் இரண்டாம் வார்த்தைக்கே இடமில்லை. இந்த இரண்டு அணிகளுமே, அதிலும் குறிப்பாக 53வது படையணி அமெரிக்க விசேட பயிற்சியாளர்களால் உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பு அணி. அந்த அணி ஆனையிறவு தளத்தை விட்டு ஓடிவிட்டது என்று கேள்விப்படும்போது இலங்கைப் படைகளினுடைய எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிவிட்டன. இது யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சி என்பதற்கு அப்பால், இலங்கைக்கு ஒரு போரிடும் திறனுள்ள படை இருக்குமா என்பதையே கேள்விக்குறியாகியுள்ளது. ஏனென்றால் படையினருடைய போரிடும் சக்தி என்பது இந்த 53வது படையணியிலேயே செறிந்திருந்தது. அதற்கு அடுத்ததாக 54வது படையணியைக் குறிப்பிடலாம். இலங்கைக்கு ஒரு இராணுவம் இருக்குமா இல்லையா என்பதையே கேள்விக்குறியாக்கும் நிலைக்கு இந்த இரண்டு படைத்தளங்களுனுடைய வீழ்ச்சி கொண்டுவந்துவிட்டுள்ளது.

கடந்தமாதம் இந்த 53வது படையணிக்கு பயிற்சி வழங்குகின்ற அமெரிக்கப் படையின் மூத்த அதிகாரி ஒருவர் கடந்த மாதம் கொழும்பிற்கு வந்திருந்தார், அப்போது என்னைப் போன்றவர்களையும் அங்கு அழைத்து சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடாகியிருந்தது. அந்த சந்திப்பின் போது இதைப்பற்றி பேசியபோது அவர் குறிப்பிட்டார் நாங்கள் பயிற்றுவித்தவர்கள் மிகச்சிறந்த படையினர். அந்த அமெரிக்க மூத்த அதிகாரியின் கருத்துப்படி, 53வது படையணியின் 8,000 வீரர்களும் அசைக்க முடியாதவர்கள். அவர்கள் அங்கிருந்து பின்வாங்க மாட்டார்கள் என மிகவும் அழுத்தம் திருத்தமாக கூறினார். நான் கூறினேன். இது விரைவில் காலம் பதில் சொல்லும். உங்களுக்கு களநிலைகள் சரியாக புரியாது. இதை நான் விளக்க முற்பட்டால் நான் வீடுசெல்ல முடியாது. ஆகவே, அதை இன்னும் ஓரிரு வாரங்களில் எப்படி போர்க்களம் மாறுகின்றது என்பதை வைத்துக்கொண்டு பாரப்போம் எனக்கூறினேன். இலங்கை அரசோ, இலங்கை அரசிற்கு ஆதரவு வழங்குகின்ற அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளோ, இந்த படையணி வீழ்ச்சியுற்று இவ்வாறு சிதறியோடும் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை.

**அந்த அமெரிக்க மூத்த அதிகாரியின் கருத்துப்படி, 53வது படையணியின் 8,000 வீரர்களும் அசைக்க முடியாதவர்கள். அவர்கள் அங்கிருந்து பின்வாங்க மாட்டார்கள் என மிகவும் அழுத்தம் திருத்தமாக கூறினார்.**

யாழ். மக்களில் பலர் இது சாத்தியமில்லை என்றே நம்பியிருந்தனர். யாழ்.குடாவை பொறுத்தவரை, தொலைபேசி இயங்கிக்கொண்டிருந்தபொழுது என்னிடம் பலரும் பேசவார்கள். அப்போது அவர்கள், குறிப்பாக யாழ் நகரில் இருப்பவர்கள், படையினர் விடமாட்டார்கள் என நம்பிக்கை தெரிவிட்டார்கள். ஏனென்றால் யாழ்ப்பாணம் வீழ்ச்சியுறாது என்ற அடிப்படையில் அவர்களில் பலர் தொலைத்தொடர்பு கருவிகள் மற்றும் இது நிரந்தரம் என்ற அடிப்படையில், பல முதலீடுகளையும் செய்திருந்தார்கள். அவர்களை பொறுத்தவரை என்னுடன் இது தொடர்பாக மிகவும் அதிருப்தி. சில பத்திரிகையாளர்கள் கூட மிகவும் அறுதியிட்டு கூறியிருந்தார்கள் இது சரிவராது, அவர்கள் விடமாட்டார்கள் என்று. அவர்கள் குறிப்பிட்டது, இலங்கைப் படையினரை. அங்கு எவ்வளவு படையினரைக்கொண்டு வந்து குவித்திருக்கிறார்கள். புலிகளால் இது முடியுமா? என்றெல்லாம் பலர் சொன்னார்கள். அவர்களிடம் நான் சொன்னேன், ஆனையிறவிற்கான பிரதான வழங்கல்தளமான வெற்றிலைக்கேணி போய்விட்டது. வெற்றிலைக்கேணிப் படையினர் வசம் இல்லாது இருக்கும் வரை, ஆனையிறவுத்தளத்தை வைத்திருப்பதென்பது மிகக்கடினமான ஒரு செயல். இரண்டாவது, ஆனையிறவுத் தளத்திற்கான நன்னீர் வளம் இயக்கச்சியிலும், இயக்கச்சியை அண்டிய பகுதிகளிலுமே இருக்கின்றன. இவற்றை புலிகள் தாக்கியழித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அங்கிருக்கின்ற படையினருக்கு மனோநிலை வீழ்ச்சிகளும் ஏற்பட்டிருக்கும். அத்துடன் புலிகளை நீங்கள் எப்பொழுதும் போல் குறைத்து மதிப்பிடுகின்றீர்கள். 96ல் யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகள் பின்வாங்கிய பொழுதும் இதைத்தான் எல்லாரும் சொன்னீர்கள். அப்போதும் நான் கூறினேன், இது ஒரு பின்வாங்கலேயொழிய தோல்வியல்ல என்று.

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)

# தமிழீழத் தேசியத் தலைமையை அழித்துவிடுங்கள்

## தீட்சித் எனக்கு உத்தரவிட்டார்

## மேஜர் ஜெனரல் கர்கிரத் சிங்

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

***கேள்வி: ஒவ்வொருவரும் தன் விச்சையாக முடிவெடுத்தார்களா?***

**பதில்:** ஒவ்வொரும் சுயமாகவே முடிவுகளை மேற்கொண்டனர். நாங்கள் அகதிகளைத் தரையிறக்குவது போல பலாலியில் இறக்கிவிடப்பட்டோம். இவ் நடவடிக்கையில் சம்மந்தப்பட்ட அனைவருக்கும் எதுவுமே தெரிந்திருக்கவில்லை. நான் ஒருவாறு பலாலியிலிருந்த சிறீலங்கா இராணுவ பிரிகேட் தளபதியைச் சந்தித்து நடப்பு நிலைமைகளை கேட்டறிந்தேன்.

அவரிடம் கேட்டேன், நீங்கள் எப்போதாவது புலிகளைப் பார்த்திருக்கிறீர்களா, சந்தித்திருக்கிறீர்களா என்று. அதற்கு அவர், 'ஒருபோதும் இல்லை' என்றே கூறினார். மேலும் தான் ஏன் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்றும் கேட்டார். அதற்கு நான் அவரிடம் எப்படியாவது நான் புலிகளைச் சந்தித்து, எனது பணியைத் தொடங்க வேண்டுமென்று கூறினேன்.

மறு நாள் நான் திரு. குமரனைச் சந்தித்தேன். அவர்தான் பின்னர் படகுச் சம்பவத்தில் எம்மால் ஏமாற்றப்பட்டு இறந்தவர். அவர்தான் புலிகளின் அப்போதைய யாழ்.மாவட்டத் தளபதியாக இருந்தார். அவர் ஒரு அருமையான மனிதராய் இருந்தார். அவர் தனது காரில் என்னையும் எனது பிரிகேட் தளபதிகளில் ஒருவரான பெர்னாண்டஸையும் எற்றிக்கொண்டு தமது முகாமொன்றிற்கு அழைத்துச் சென்றார். அங்கு என்னைப் புலிகளின் மற்றொரு தளபதி வரவேற்று உபசரித்தார். பின்னர் ஒரு தகவலையும் எனக்கு வழங்கினார். 'ஜெனரல், நாங்கள் இப்பொழுது உங்களுடன் பேசுவதற்கு தயாரில்லாமல் இருக்கிறோம் என்று! அதற்கு நான், 'இங்கு ஒரு நல்லெண்ண நோக்கிலேயே வந்துள்ளேன். ஏன் அவ்வாறு கூறுகிறீர்கள்' என்று கேட்டேன். அதற்கு அந்தத் தளபதி, 'நீங்கள் எங்கள் தேசியத்தலைவரை விடுவித்து மீளவும் இங்கு கொண்டு வந்து விடாவிடில் உங்களுடன் பேச மாட்டோம்' என்று பதிலிறுத்தார்.

அதற்கு நான் வியப்போடு கேட்டேன், 'எங்கே திரு.பிரபாகரன் அவர்கள்?' என்று.

உண்மையிலேயே எனக்கு எதுவுமே தெரியவில்லை. இந்திய அரசு இராணுவத்தை எப்போதும் இருட்டில் வைத்திருக்கவே விரும்பியது. பிரபாகரனை இந்திய அரசு டில்லியிலுள்ள அசோகா உல்லாச விடுதியில் தடுத்து வைத்திருந்தது என்பதையும் பின்னர் அறிந்து கொண்டேன். அவர் இந்திய அரசுத் தலைமை, 512, 522 இலக்க அறைகளில் பணயக்கைதி போல தடுத்து வைக்கப்பட்டிருந்தது என்பதையும் பின்னர்தான் என்னால் அறியக் கூடியதாக இருந்தது. இந்திய சிறீலங்கா ஒப்பந்தம் எழுதப்படுவதற்கு முன்னர், பிரபாகரன் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியை சந்திப்பதற்கென்றே சென்றார். அச் சந்திப்பின் போது இந்தியப் பிரதமர் ராஜீவ், திரு.பிரபாகரனுக்கு தமிழர் சுயநிர்ணய உரிமைகள் குறித்து சில வாக்குறுதிகளை வழங்கினார். அதன் பின்னரே இந்திய சிறீலங்கா ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு ராஜீவ் சென்றார்.

ஆனால் ஒப்பந்தம் கையெழுத்து இடப்பட்டதை பிரபாகரன் தொலைக்காட்சி வாயிலாகவே அறிந்து கொண்டார். அத்தோடு அதில் புலிகளுக்கு எதுவித பங்கும் இல்லை என்பதையும் உணர்ந்து கொண்டார். இதுவும் ஒரு காரணம் புலிகள் இவ் ஒப்பந்தத்தை நிராகரிப்பதற்கு.

நாங்கள் இவ் விடயத்தில் தலையிடாவிட்டால் புலிகள் ஜெயவர்த்தனாவை ஒரு வழி பண்ணியிருப்பார்கள்.

ஒப்பந்தம் கையெழுத்தான பின்னர் தீட்சித் திடீரென உயர்ந்து விட்டார். அவர் வெளிவிவகாரச் செயலாளராக நியமிக்கப்பட்டார். ஆனால் அவரால் மக்களை உணர முடியாமல் போய்விட்டது. அதிலும் விசேடமாக ஜே.வி.பி.யை. அதனாலேயே பாரதம் ஒருபிரதமரை இழக்க வேண்டிய ஆபத்து வந்தது.

ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னரே நாங்கள் எங்கள் பிரதமரை இழந்திருப்போம். சிங்கள இனவாதிகளே கொன்றிருப்பார்கள். ஏன் இது எங்களுக்கு முன்னர் தெரியாமல் போய்விட்டது. எங்கள் வெளிநாட்டு புலனாய்வுத் துறையினர் தூங்கிப் போனார்களா? நாங்கள் ஒப்பந்தம் கையெழுத்தான போது இடம் பெற்ற அனர்த்தத்தை தொலைக்காட்சி மூலமே அறியக் கூடியதாக இருந்தது.

***கேள்வி: யாழ்ப்பாணத்தில் உங்களுடைய பணியின்போது தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உறவு எவ்வாறானதாக இருந்தது?***

**பதில்:** நான் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியமான தளபதியைச் சந்தித்து உரையாடிவிட்டு பின் பலாலித் தளத்திற்குத் திரும்பினேன்.

அப்போது பலாலித் தளத்திற்கு வந்திருந்த எனது மேலதிகாரி லெப். ஜெனரல் தீபெந்தர் சிங்கைச் சந்தித்து புலிகளின் தளபதி சொன்ன தகவலைச் சொன்னேன். நீங்கள் என்னுடன் ஆயுத ஒப்படைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது சம்மந்தமாகக் கதைப்பதாயின் முதலில் திரு. பிரபாகரன் அவர்கள் யாழ்ப்பாணம் வரவேண்டும். அதன் பின்னர்தான் என்னால் இந் நடவடிக்கையில் ஈடுபட முடியும் என்று கூறிவிட்டேன். அதன் பின்னர் அவர் டெல்லித் தலைமையோடு தொடர்பு கொண்டார். மறு நாளே திரு. பிரபாகரன் அவர்களைத் தாங்கிய விமானம் பலாலி விமானத் தளத்தில் தரையிறங்கியது. அதில் திரு.பிரபாகரனும் அவரது மனைவி குழந்தைகள் மெய்ப்பாதுகாவலர்கள் ஆகியோரோடு தளபதி கிட்டுவும் வந்திருந்தார். அந்த விமானத்தின் விமானி என்னுடன் தொடர்புகொண்டு பிரபாகரன் அவர்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லும்படி வேண்டினார். நான் அவருக்கு திரு. பிரபாகரன் அவர்களைப் பாதுகாப்பாக யாழ்.நகரிற்கு அழைத்துச் சென்று அவரது சகாக்களிடம் ஒப்படைப்பது எனது கடமை என்பதை உறுதிப்படுத்தினேன். நான் அவர்களை எமது கவச வாகனங்களில் ஏற்றி சிறீலங்கா இராணுவ முகாமினூடாக அனுப்பி வைத்தேன். திரு. பிரபாகரன் ஒரு சாதாரண மனிதரல்ல. உலகிலேயே மிகவும் கட்டுக்கோப்புமிக்கதும் பலமான விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர். அவருடைய உயிர் பெறுமதிமிக்கது. அவருக்குப் பின்னால் எதுவித கறையும் கிடையாது. மிகவும் எளிமையான மனிதர். அவருடைய மனைவியிடம் மூன்று புடவைகள் மாத்திரமே இருந்தன. ஒன்று அணிந்து அழுக்கானதாக இருக்கும் இன்னொன்று தோய்த்து அணிவதற்குத் தயாராக இருக்கும். ஒன்றை அவர் அணிந்திருப்பார். விருந்தினர்களுக்கு மாத்திரம் கொக்கோ கோலா போன்ற மென்பானங்களை அருந்தக் கொடுப்பார்கள். தாங்கள் சாதாரண சோடா வகைகளையே அருந்துவார்கள்.

***கேள்வி: பிரபாகரன் அவர்களுடனான உங்களுடைய முதல் சந்திப்பு எவ்வாறு அமைந்தது?***

**பதில்:** நான் திரு.பிரபாகரனைத் தொடர்பு கொண்டு எப்பொழுது சந்திக்கலாம் என்று கேட்டபொழுது அதற்கு அவர், ஜெனரல் நாளை 11.00 மணிக்கு வாருங்கள் சந்திப்போம் என்று கூறினார். நான் திரு.பிரபாகரன் அவர்களைச் சந்திப்பதற்கு எனது உலங்கு வானூர்தியில் சென்று யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இறங்கினேன். அந்தப் பகுதி புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலிருந்தது. அவரது அலுவலகம் வரை நடந்து சென்று சந்தித்தேன். பேச்சுவார்த்தைக் கூடத்தின் வெளியே அவர் எனக்காகக் காத்திருந்தார். பிரபாகரன் என்னோடு 5 மணித்தியாலங்களுக்கு மேல் உரையாடினார். அவர் தமது ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு ஒப்புக்கொண்டார்.

***கேள்வி: அவர் இதற்கு ஒப்புக் கொண்டாரா?***

**பதில்:** பிரபாகான் இதனை எழுத்து மூலம் உறுதிப்படுத்தினார். என்னால் இதனை உங்களுக்குக் காட்டமுடியும். இந்த ஒரு கடிதம் மாத்திரமே அவரால் எங்களுக்கு எழுத்தில் தரப்பட்ட ஆவணமாகும். அதனைப் பெற்றுக் கொண்டு நான் இந்திய தூதர் தீட்சித்தைச் சந்திப்பதற்காக கொழும்பிற்குச் சென்றேன். அவரிடம் இது பற்றித் தெரிவித்த போது எனது பணியை பாரதப்பிரதமரின் சார்பில் பாராட்டுவதாகக் கூறினார்.

திரு.பிரபாகரனின் ஒப்புதல் கடிதம் எல்லா இடமும் அனுப்பப்பட்டது. ஆயுத ஒப்படைப்பு நிகழ்வு ஓகஸ்ட் 5ம் திகதி ஆரம்பமாகும் என்று தீர்மானிக்கப்பட்டது. திரு.பிரபாகரன் தம்மால் இந்நிகழ்விற்கு வரமுடியாது என்றும் தமது தளபதி யோகி அவர்கள் ஆயுத ஒப்படைப்பிற்கு வருவார் என்றும் ஏற்கனவே எனக்கு அறிவித்திருந்தார். அதன்படி முதல் ஆயுதமாக யோகி அவர்கள் தமது கைத்துப்பாக்கியை என்னிடம் ஒப்படைத்தார். அதன் பின்னர் வாகனங்களில் சாரைசாரையாக வந்த விடுதலைப்புலிகள் தம்மிடமுள்ள ஆயுதங்களை ஒப்படைத்தனர். திடீரென ஆயுத ஒப்படைப்பு நிகழ்வுகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்தன. அதன் பிறகு பிரச்சினை தொடங்கிற்று.

***கேள்வி: ஏன் பின்னர் விடுதலைப் புலிகள் ஆயுத ஒப்படைப்பை நிறுத்தினர்?***

**பதில்:** ஏனெனில் ஈ.பி.ஆர்.எல்.எவ். காரர்களுக்கு ஆயுதம் வழங்குவதை இந்திய மத்திய அரசும், றோவும் நிறுத்தவில்லை. வெளிவிவகார அமைச்சு இதனை நன்கறிந்திருந்தும் இதனை நிறுத்த முயற்சிக்கவில்லை. தீட்சித்தும் இதனை அறிந்திருந்தார். இதன் விளைவாக ஆயுத ஒப்படைப்பு முற்றாக நிறுத்தப்பட்டது. அனைத்துத் தரப்பாரது மனதிலும் ஒரு மாறுபட்ட திருப்பம் வந்து சேர்ந்தது. தமிழ் மக்கள் இந்திய அமைதிப்படைக்கெதிரான போராட்டங்களில் குதித்தனர்.

[தொடரும்]

# ஆனையிறவு படைத்தள வீழ்ச்சியும் ஓயாத அலைகளும்

சிறீலங்கா தனது வரலாற்றிலேயே மிக மோசமான ஓர் படுதோல்வியை ஆனையிறவு- இயக்கச்சிப் படைத்தளத்தின் வீழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டுள்ளது. யாழ்.குடாவின் வாசலில் மிகப் பிரம்மாண்டமாக நிலைகொண்டிருந்த இப்பெருந்தளம், தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறப்பு அணிகளால் முற்றுமுழுதாக தாக்கியழிக்கப்பட்டுள்ளது. பல ஆயிரம் படையினர் இறந்து, மேலும் பல ஆயிரம் படையினர் காயமடைந்து, மேலும் பல ஆயிரம் படையினர் உடைகளை களைந்தெறிந்து தப்பியோடிய நிகழ்வுகள் ஆனையிறவில் ஏற்பட்டுள்ளது. ஆனையிறவு படைத்தளத்தின் பாதுகாப்பில் சிறீலங்காவிற்கு மிகவும் நம்பிக்கை அதிகம். இப்பெரும் தளம் முன்பு ஒருமுறை புலிகளின் அணிகளால் தாக்கப்பட்டு, பின்னர் காப்பாற்றப்பட்டதுடன், அங்கு மிகப்பெரும் அளவிலான தளவாடங்களை குவித்து அப்படைத்தளத்தின் பாதுகாப்பை உச்சக் கட்டத்தில் வைத்திருந்தது. இரண்டு டிவிசன்களைக் கொண்ட அனுபவம் பொருந்திய இராணுவ அணிகள் ஆனையிறவில் நிலைகொண்டிருந்தன. இறுதியாக 54வது படையணியின் பல பிரிகேட்டுகள் மற்றும் 53வது படையணியின் பிரிகேட்டுகள் பல அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. சிறீலங்காவின் மிகப்பெரும் படைத்தளங்களில் ஒன்றாக இது கணிக்கப்பட்டது. இரண்டு டிவிசன்களையும் சேர்த்து சுமார் 20,000 வரையிலான படையினர் இங்கு இருந்ததாக சொல்லப்படுகிறது.

ஆனையிறவின் விரிவாக்கம் என்பது 90களின் முற்பகுதியிலேயே ஆரம்பமாகியது. 91ம் ஆண்டு விடுதலைப் புலிகளின் தாக்குதல்களின் பின் படைத்தளத்தை விரிவுபடுத்துவதற்காக பலவேகய-1, பலவேகய-2 எனும் இராணுவ நடவடிக்கைகளை சிறீலங்கா நடத்தியது. அதுபோலவே, பின்னர் சத்ஜெய-1, சத்ஜெய-2 போன்ற இராணுவ நடவடிக்கைகளும் ஆனையிறவு இராணுவத்தாலேயே மேற்கொள்ளப்பட்டது. இப்படை நகர்வுகளால் குறிப்பிட்டளவு சதுர மைல் பிரதேசங்களை தனதாக்கிக்கொண்ட இராணுவம், தனது தளத்தை கடற்படை உதவி கிடைக்கக்கூடியதாக வடமராட்சி கிழக்கு பகுதிக்கும் விஸ்தரித்துக்கொண்டது. இவ்வாறு வடக்கே சோரன்பற்று முதல் கிழக்கே தாளையடி, கட்டைக்காடு வரையும், தெற்கே ஆனையிறவு முதல் கிளிநொச்சி வரையும் சுமார் 259 சதுரக்கிலோ மீற்றர் பரப்பில் இப்பெரும் தளம் நிலைகொண்டிருந்தது. யாழ்.குடாவில் 1995 இறுதி முதல் 1996 ஆரம்பம் வரை சிறீலங்கா இராணுவம், இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பகுதிகளை கைப்பற்றிக்கொண்டது. இதன்பின் ஆனையிறவு படைத்தளம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு பலப்படுத்தப்பட்டது. இப் படைத்தளத்தின் காப்பு கவசமாக ஒருபுறம் கிளிநொச்சியும், மறு புறத்திலே இயக்கச்சியும், வெற்றிலைக்கேணி பகுதியும் அமைந்திருந்தன. இப்படியான பெரும் படைத்தளம் கடந்த சனியன்று விடுதலைப் புலிகளின் படையணிகளால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது.




ஓயாத அலைகள்-3ன் முதலாம் கட்ட பெரும் தாக்குதல்களின் மூலம் வன்னிப்பெருநிலப் பரப்பை மீட்டுக்கொண்ட விடுதலைப் புலிகள், இரண்டாம் கட்டமாக மன்னாரில் தள்ளாடித் தளத்தின் புறப்பகுதிகளைக் கைப்பற்றி இராணுவத்திற்கு பெரும் நெருக்குதல்களை கொடுத்திருந்தனர். இதன்பின் சிறிது காலத்திற்கு அமைதியாக இருந்த ஓயாத அலைகள் படையணிகள், மீண்டும் டிசெம்பர் 10ம் திகதி வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆளியவளை, உடுத்துறை போன்ற பகுதிகள் மேல் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு அப்பிராந்தியத்தை மீட்டன. இத்தளத் தாக்குதலின்போது சிறீலங்கா இராணுவத்தின் 54வது படைப்பிரிவின் இரண்டாவது பிரிகேட் முற்றுமுழுதாக சிதறடிக்கப்பட்டது. இதனையடுத்து பரந்தன் பகுதி ஊடாக நகர்ந்த ஓயாத அலைகள் அணிகள், ஆனையிறவு தளத்தின் தென் பகுதி பிரதான பாதுகாப்பு வலயமாக அமைந்திருந்த இரசாயனத் தொழிற்சாலைப் பகுதியை உள்ளடக்கிய 54வது படைப்பிரிவின் 6வது பிரிகேட் தளம் தாக்கியழிக்கப்பட்டது. இதன் மூலம் கரடிப்போக்கு முதல் பரந்தன் சந்தி உட்பட்ட ஆனையிறவின் கீழ்ப்புற பாதுகாப்பு வலையங்கள் குறுக்கப்பட்டன. அதன்பின் உமையாள்புரம் படைத்தளத்தினை மையமாகக்கொண்ட சிறீலங்கா இராணுவத்தின் 54வது படைப்பிரிவின் 5ம் பிரிகேட் படைத்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்டது. வலிமை வாய்ந்த உமையாள்புரம் படைத்தளம் ஆனையிறவு தளத்தின் பாதுகாப்பு கவசங்களில் மிகப் பெரும் ஒன்றாக இருந்தது. இது ஆனையிறவுத் தளத்திலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் 25 மினி முகாம்கள், 10 முகாம்கள் போன்றவற்றைக்கொண்டு அமைக்கப்பட்டு இருந்தது. ஆனையிறவு கிழக்கு, தெற்கு பகுதிகளில் பாதுகாப்பு கவசங்கள் தகர்த்து அழிக்கப்பட்டிருந்த நிலையில் சிறீலங்கா இராணுவம் தனது பாதுகாப்பு அரணை 53வது விசேட படைப்பிரிவின் கொமாண்டோக்களைக் கொண்டு பளைவரை விஸ்தரித்துக்கொண்டது. இங்கு மிகப் பெரும் கனரக எறிகணைப் படைப்பிரிவின் தளமொன்று அமைக்கப்பட்டிருந்தது.

ஓயாத அலைகள்-3 படையணிகள் மார்ச் 26ம் திகதி ஆனையிறவு தளம் மீதான புதிய தாக்குதல்களை புதிய பகுதியில் ஆரம்பித்தனர். கடற்புலிகளின் விசேட கொமாண்டோக்கள் தாளையடி, செம்பியன்பற்று, மருதங்கேணி ஆகிய முகாம்களை தாக்கி கைப்பற்றிக்கொண்டனர்.

ஆனையிறவு படைத்தளத்தின் கிழக்குப் பகுதி பாதுகாப்பு கவசமாகவும் கடல்வழங்கலை மேற்கொண்டதுமான இப்பகுதிகள் தாக்கியழிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆனையிறவுத் தளத்தின் முற்றுகை மேலும் இறுக்கமடைந்தது. வடமராட்சி கிழக்கு, கிளிநொச்சி பிராந்தியம் போன்றவைகள் விடுதலைப் புலிகளின் படையணிகளால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருந்தன.

**ஆனையிறவுப் படைத்தளம் இப்போது மூன்று முனைகளாலும் விடுதலைப் புலிகளால் நெருக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இறுதிக் கவசமாக நிலைகொண்டிருந்த இயக்கச்சி பிராந்தியதின் மீது மிகக்கடுமையான தாக்குதல்களை விடுதலைப் புலிகளின் படையணிகள் மேற் கொண்டன.**

அதேவேளை, வெற்றிலைக்கேணி ஊடாக நகர்ந்த விடுதலைப் புலிகளின் அணிகள் 18ம் திகதி பெரும் தளத்தை கைப்பற்றும் சமரை ஆரம்பித்தன. பளைக்கு தெற்காக இருந்த இராணுவ முன்னரங்கத் தளங்களையும், கனரக எறிகணைத்தளத்தையும் தாக்கியழித்த படையணிகள் ஆனையிறவுப் பெருந்தளத்தின் வடபகுதி பாதுகாப்பு கவசங்களை உடைத்தெறிந்தவாறு உள்நுழைந்தன.

ஆனையிறவுப் படைத்தளம் இப்போது மூன்று முனைகளாலும் விடுதலைப் புலிகளால் நெருக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இறுதிக் கவசமாக நிலைகொண்டிருந்த இயக்கச்சி பிராந்தியதின் மீது மிகக்கடுமையான தாக்குதல்களை விடுதலைப் புலிகளின் படையணிகள் மேற்கொண்டன. இதற்கிடையே பளையில் இருந்து முகமாலை வரையிலான ஏ9 நெடுஞ்சாலையை குறுக்கே வெட்டியிருந்த விடுதலைப் புலிகளின் அணிகள் ஆனையிறவுத்தளத்தின் விநியோகங்களை தடை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டன. சிறீலங்கா இராணுவம் தனது வழங்கல் பாதையை நிலை நிறுத்திக் கொள்வதற்காக மிகக்கடுமையான இராணுவ நடவடிக்கைகளை பல தடவைகள் மேற்கொண்டது. ஆனால் விடுதலைப் புலிகளின் தந்திரோபாயமான யுத்த நகர்வுகள் அதற்கான வழியினை ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. இயக்கச்சியை அண்டியிருந்த சோரன்பற்று, மாசார் பகுதிகளை உள்ளடக்கிய ஏ9ன் அடுத்தபிரிவு புதுக்காட்டுச் சந்தியில் அமைந்திருந்த பாலத்தைக் கைப்பற்றியதன் மூலம் விடுதலைப் புலிகளின் உக்கிரமான தாக்குதல்களால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருந்தது. சிறீலங்காவின் பெரும் படைத்தளம் இப்போது முற்றுமுழுதாக விநியோகங்களை இழந்துபோயிருந்தது. இயக்கச்சிப் படைத்தளம் மீதான தாக்குதல்கள் உச்சநிலையில் இடம்பெற்று, அத்தளம் விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ந்தன. அதேவேளை சனியன்று காலை ஓயாத அலைகள்-3 படையணிகள் ஆனையிறவு பெருந்தளத்தின் தென்பகுதியில் முன்புறத்தில் அமைந்திருந்த தட்டுவன்கொட்டி, சுற்றுலாவிடுதி ஆகியவற்றில் இருந்த படை முகாம்களையும் அரண்களையும் கைப்பற்றி தாக்கியழித்தன. அடுத்ததாக ஆனையிறவு படைத்தளத்தின் உப்பளக் கூட்டுத் தாபனத்திற்கு சொந்தமான 30 பாரிய கட்டடங்கள், பாடசாலை போன்றவற்றில் அமைந்திருந்த இராணுவத்தின் முகாம்கள் விடுதலைப் புலிகளின் அணிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்டன. இதனையடுத்து ஆனையிறவின் மத்திய பகுதியும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

சிறீலங்காவின் மிகப்பெரும் படையணிகளான 53ம், 54ம் பிரிவுகள் இங்கு பெரும் அழிவுகளை சந்தித்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் வட போர்முனை உக்கிரமடைந்து வருகையில் இங்கிலாந்தில் கண்சிகிச்சைக்காக சென்றிருந்த சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, யுத்த கதாநாயகன் என வர்ணிக்கப்படும் ஜானக பெரேராவை வடபகுதி விசேட தளபதியாக நியமித்தார். அத்துடன் ஓய்வு பெற்றிருந்த முப்படைத் தளபதியான றோகான் தலுவத்தை மீள அழைக்கப்பட்டு, கூட்டுப்படைத் தலைமைப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். இம் மாற்றங்களின் மூலம் வடபுலத்தில் இராணுவத்தின் தோல்வியை வெற்றியாக்கலாம் என சிறீலங்கா ஜனாதிபதி எண்ணியிருக்கலாம். ஜானக பெரேராவைப் பொறுத்தவரை மணலாற்றில் அவர் கதாநாயகனாக வர்ணிக்கப்பட்டிருக்கலாம், ஆனால், எல்லாப் போர் முனைகளும் மணலாறு அல்ல என்பதை ஆனையிறவின் வீழ்ச்சி உணர்த்தியிருக்கும்.

**வடபுலத்தில் இராணுவத் தோல்விகளை வெற்றியாக்கலாம் என சிறீலங்கா ஜனாதிபதி யுத்தக் கதாநாயகன் என வர்ணிக்கப்பட்ட ஜானக பெரேராவை வடபிராந்தியத் தளபதியாக நியமித்தார். மணலாற்றைப் பொறுத்தவரை அவர் கதாநாயகனாக இருந்திருக்கலாம்; ஆனால் எல்லாப் போர் முனைகளும் மணலாறு அல்ல என்பதை ஆனையிறவின் வீழ்ச்சி நிச்சயமாக அவருக்கு உணர்த்தியிருக்கும்.**


## உடன் தேவை

St.Tropez உள்ள Indien Restaurant க்கு பிரெஞ்சு, ஆங்கில மொழி பேசக்கூடிய பணியாளரும், அத்துடன் இந்திய உணவு வகைகளில் தேர்ச்சிபெற்ற உதவிச் சமையலாளரும் (Cuissenier) உடன்தேவை.

மற்றும் இருப்பிட வசதிகளும் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 04 94 97 71 71 / 06 86 86 19 39

# தமிழீழ விடுதலைப்
# மிகப்பெரி

## ஆனையிறவு மண் மீட்டெடுக்கப்பட்டது தொடர்பாக வன்னியில் இருந்து ஒலிபரப்பாகும் புலிகளின் குரல் வானொலி வழங்கிய செய்திக் கண்ணோட்டத்தில் இருந்து...

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் நேரடி நெறிப்படுத்தலில் 240 ஆண்டுகாலம் அந்நிய இராணுவங்களின் ஆக்கிரமிப்பில் இருந்த ஆனையிறவுப் படைத்தளம் விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. அன்று முதல் இருந்து இன்று வரை மூவாயிரம் மாவீரர்களின் உதிரத்தால் உறுதிபெற்ற நிலையில், ஆனையிறவு மண் தமிழர் வசமாகியிருக்கிறது. ஆயிரக்கணக்கான படையினர் இவ் ஆனையிறவு பெரும் சமரில் கொல்லப்பட்டுள்ளார்கள். ஆனையிறவு பெரும் சமரின் வெற்றியை வன்னி மக்கள் எழுச்சியுடன் வெடிகொழுத்தி, இனிப்புப் பண்டங்களை பரிமாறிக் கொண்டாடி வருகின்றார்கள். தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின்

**தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரே தடவையில் மிகப் பெரிய தொகையான இராணுவத்தினர் இத்தளப் பகுதியில் கொல்லப் பட்டுள்ளார்கள்.**

நேரடி நெறிப்படுத்தலில், 240 ஆண்டுகாலம் அந்நிய இராணுவங்களின் ஆக்கிரமிப்பில் இருந்த ஆனையிறவுப் பெருந்தளம் விடுதலைப் , புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசின் கௌரவமாக திகழ்ந்து வந்ததும், தமிழீழ நிலப்பரப்பின் மிகப்பெரும் தடைக்கல்லாகவும், தொண்டைக்குள் சிக்கிய முள்ளாகவும் 1760ம் ஆண்டு முதல் ஐரோப்பிய இராணுவங்களாலும், பின் சிறீலங்கா பொலிசாராலும்- இராணுவத்தாலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த ஆனையிறவுப் பெருந்தளம், முழுமையாக விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்துள்ளது. உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் உச்சத் தாக்குதலாக விளங்கிய வியட்நாமிய தியன் மியன் பூ தள அழிப்புக்கு இணையாகவும், அதற்கு மேலாகவும் ஆனையிறவுத்தளம் வெற்றிகொள்ளப்பட்ட உன்னத நிகழ்வு இன்று நிகழ்ந்தேறியிருக்கிறது. அன்று முதல் இன்றுவரை மூவாயிரத்திற்கும் அதிகமான மாவீரர்களின் உதிரத்தால் உரமேறிய நிலையில் அவர்களின் தியாகங்களின் விளைவாக இந்தப் பெரும்தளம் கைப்பற்றப்பட்டுள்ளது.

15,000ற்கும் மேற்பட்ட இராணுவம் குவிந்திருந்த 259 சதுரக் கிலோ மீற்றர் பரப்பில் உச்சக் கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் யாழ்.குடாநாட்டினை இராணுவ வசம் தக்க வைத்திருப்பதற்காக ஆனையிறவுப் பெரும் தளம் சிறீலங்கா இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழர் தாயகத்தை இணையவிடாது தடுத்து, சிறீலங்கா இராணுவம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவை, மிகவுயர் பாதுகாப்புடன் தக்கவைத்திருந்தது. இது சிறீலங்கா அரசின் உயர் கௌரவத்தின் சின்னமாகவும் கருத்தேற்கப்பட்டிருந்தது. 1991ல் ஆகாய கடல்வெளிச் சமர் முதல், பல்வேறு தடவைகள் இந்த பெரும் படைத்தளத்தினை விடுதலைப் புலிகள் தாக்கிவந்தனர். மூவாயிரம் வரையிலான மாவீரர்கள் இந்த தளப்பகுதியை மீட்பதற்கான தாக்குதலில், தங்கள் உதிரத்தை இந்த மண்ணில் சிந்தினர். வடக்கே சோரன்பற்று முதல் கிழக்கே தாளையடி முதல் கட்டைக்காடு வரையும், தெற்கே ஆனையிறவு முதல் கிளிநொச்சி வரையும் சுமார் 259 சதுரக் கிலோ மீற்றர் பரப்பில் தமிழ் மக்களின் வாழ்வை அழித்து, ஆனையிறவு படைத்தளத்தை சிறீலங்கா இராணுவம் 1996ல் விஸ்தரித்தது. இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் இதன்மூலம் தம் சொந்த மண்ணிலான வாழ்வை இழந்தனர். ஒரு இராணுவ டிவிசனின் ஆறு பிரிகேட்டுகள் கொண்ட பல ஆயிரம் படையினர் மூலம் ஆனையிறவுத்தளம் சிறீலங்கா இராணுவத்தால் விஸ்தாரம் செய்யப்பட்டிருந்தது.


யாழ். குடாநாட்டை 1995, 1996ல் ஆக்கிரமித்த சிறீலங்கா படைகள் அதனைத் தக்கவைப்பதற்காகவும் ஆனையிறவைப் பலப்படுத்தி வந்தனர். சிறீலங்கா இராணுவத்தின் போர்ச்செலவில் பெரும்தொகை ஆனையிறவிற்கு வழங்கப்பட்டது. அத்தோடு வன்னியில் 3000 சதுரக் கிலோ மீற்றர்களுக்கு அதிக நிலப்பரப்பை ஆக்கிரமித்து ஆனையிறவு ஊடாக யாழ். குடாவிற்கான தரைவழிப்பாதையை அமைத்து இருந்தது. கடந்த ஆண்டு நவம்பர் 2-ம் திகதி ஆரம்பமான ஓயாத அலைகள்-3 நடவடிக்கை, வன்னியில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீட்டது. டிசெம்பர் பத்தாம் திகதி தமிழீழ மண்ணில் தொண்டைக்குள் முள்ளாக இருந்த ஆனையிறவு தளத்தை அழித்து அதனை மீட்கும் நடவடிக்கை ஆரம்பமானது. ஆனையிறவு பெருந்தளத்தின் கிழக்குப் புற பாதுகாப்பு கவசமாகவும் கடல்வழி வழங்கலை மேற்கொண்டிருந்ததுமான வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, ஆளியவளை, உடுத்துறை பகுதிகள் ஓயாத அலைகள்-3 நடவடிக்கை மூலம் மீட்கப்பட்டன. இதன் மூலம் இப்பகுதியில் இருந்த 54-2 பிரிகேட் சிதறிக்கப்பட்டது. ஆனையிறவுத் தளத்தின் தென் பகுதி பிரதான பாதுகாப்பு கவசமாக விளங்கிய பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மையமாகக்கொண்ட 54-6 வது பிரிகேட்தளம் சிதறடிக்கப்பட்டது. அதன்பின் உமையாள்புரத்தை மையமாகக்கொண்ட 54-5ம் பிரிகேட் தளம் வெற்றிகொள்ளப்பட்டது. ஆனையிறவு கிழக்கு, தெற்கு புறப் பிரதான பாதுகாப்பு கவசங்கள் ஓயாத அலைகள்-3 படையணிகளால் தகர்த்து அழிக்கப்பட்ட நிலையில், 53வது டிவிசன் கொமாண்டோக்களைக் குவித்து தளத்தை இராணுவம் பளைவரை விஸ்தரித்தது. இந்த தளப்பகுதிக்கு வடக்கே முகமாலையை, மார்ச் 26ம் திகதி கடற்புலிகளின் தரையிறக்கம் மூலம், ஓயாத அலைகள்-3 படையணிகள் ஊடுருவி பிரதான வழங்கல் பாதையைக் கைப்பற்றினர். இப்பாதையை மீளக் கைப்பற்ற இராணுவம் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன.

அதேவேளை, வடமராட்சி கிழக்கில் கொமாண்டோக்களின் பிரிகேட் தளத்தை அழித்த ஓயாத அலைகள்-3 படையணிகள், நாகர்கோவில் வரையான பகுதிகளை மீட்டன. இதற்கு முன் ஆனையிறவுப் பெருந்தளத்தை கைப்பற்றும் இறுதிச்சமர் கடந்த 18ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. பளைக்கு தெற்காக உள்ள இராணுவ முன்னரங்க தளங்களை அழித்தவாறு ஆனையிறவுப் பெருந்தளத்தின் வடபகுதி பாதுகாப்பு கவசங்களை உடைத்தெறிந்தவாறு ஓயாத அலைகள்-3 படையணிகள் வேகமாக முன்னேறின. ஆனையிறவு வடமுனை பிரதான பாதுகாப்பு கவசத்தளமான இயக்கச்சியைக் கைப்பற்றிய ஓயாத அலைகள்-3 படையணிகள், ஆக்ரோசமான தாக்குதல்களை நடாத்தியவாறு முன்னேறின. இதேவேளை ஆனையிறவுப் பெருந்தளத்தின் தென்பகுதி முன்பகுதிகளான தட்டுவன்கொட்டி, சுற்றுலா விடுதி ஆகியவற்றில் இருந்த படைமுகாம்களும், அரண்களும் ஓயாத அலைகள்-3 படையணிகளால் தகர்க்கப்பட்டன. உப்பளக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக இருந்த 30 பெரிய கட்டடங்கள், பாடசாலை ஆகியவற்றில் இருந்த சிறீலங்காப் படையினரின் முகாம்கள், களஞ்சியங்கள் என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்டன. ஆனையிறவின் மையப் பகுதி முழுமையாக விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப் பட்டுள்ளது.

வன்னியில் இருந்துவரும் எதிர்ப்புக்களை தடுப்பதற்காக 1760ம் ஆண்டு ஒல்லாந்தர்கள் ஆனையிறவில் கோட்டையை அமைத்து அங்கு தம் தளத்தை அமைத்தனர். அதன்பின் ஆங்கிலேயர் அதனை தமது தளமாக வைத்திருந்தனர். பின் சிறீலங்காவின் வனத் திணைக்களமும், சுங்க இலாகாவும் ஆனையிறவை தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. 1958ல் தமிழர்களை ஒடுக்கிய சிறீலங்கா பண்டாரநாயக்கா அரசு கட்டவிழ்த்துவிட்ட இனக் கலவரத்தின்போது ஆனையிறவு, இராணுவ முகாமாக்கப்பட்டது. இதுமுதல் படிப்படியாக வலுப்படுத்தப்பட்ட ஆனையிறவுத் தளம், இறுதியாக 15,000 வரையிலான படையினர் மூலம் பெரும் தளமாக்கப்பட்டது. உலக இராணுவங்களின் நுட்பங்களையும் உச்சக்கட்ட போராயுதங்களையும், 20,000ற்கும் அதிகமான படையினரையும் பின் தளங்களில் கொண்டிருந்த ஆனையிறவுப் பெரும்தளமும், அதன் தளங்களின் தொகுதிகளும் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் நேரடி நெறிப்படுத்தலிலான ஓயாத அலைகள்-3 நடவடிக்கை மூலம் வெற்றிகொள்ளப்பட்டது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகப்பெரிய வெற்றியாகவும் மைல்கல்லாகவும் இந்தச் சமர் அமைந்துள்ளது.

1760ல் இழந்த எமது மண் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் தலைமையில் மீட்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட ஆனையிறவு பெருந்தளப்பகுதியில் ஆயிரக்கணக்கான இராணுவச் சடலங்கள் சிதறிக்கிடக்கின்றன. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரே தடவையில் மிகப் பெரிய தொகையான இராணுவத்தினர் இத்தளப் பகுதியில் கொல்லப்பட்டுள்ளார்கள்.

தொடர்ந்து விடுதலைப் புலிகள் தேடியழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். பெரும் தொகையான ஆயுத தளவாடங்கள், இராணுவ கவச வாகனங்கள், வாகனங்கள் இந்த பெரும் தளத்தில் சிதறிக் காணப்படுகின்றன. இராணுவத்தள வீழ்ச்சி பேரழிவுக் காட்சியாக உள்ளது. நேற்றும், நேற்றுமுன்தினமும் ஆனையிறவு பெருந்தளத்தை மீட்கும் சமரில் 35 போராளிகள் வீரச்சாவைத் தழுவினர். இம் மாவீரர்களுக்கு புலிகளின் குரல் தனது வீர வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறது.



# போராட்ட வரலாற்றில்
# ப வெற்றி

## இந்த மாற்றம் தமிழீழத்திற்கு அங்கீகாரம் கொடுப்பதில் போய் முடியும்

– பழ.நெடுமாறன் –

ஆனையிறவில் சிங்கள இராணுவ முகாமை முழுமையாக வீழ்ச்சியடைய வைத்து விடுதலைப் புலிகள் பெற்றிருக்கிற வெற்றி மகத்தானது. தமிழீழத்தில் வாழ்கிற தமிழ் மக்கள் மட்டுமல்ல, இந்தியாவில் வாழ்கின்ற தமிழர்கள் மட்டுமல்ல, உலகம்பூராவும் பல்வேறு நாடுகளில் வாழக்கூடிய தமிழர்கள் மிகப்பெரும் மகிழ்ச்சியும் எழுச்சியும் இதன்மூலம் பெற்றிருக்கிறார்கள். இந்த வெற்றி வரலாற்று பூர்வமானது, மிகப்பெரியது. 1996ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தை கைப்பறிய சிங்கள இராணுவம், அங்கு சிங்களக் கொடியை ஏற்றியது. அதிபர் சந்திரிகாவும் அவர்களது அமைச்சர்களும் தளபதிகளும் யாழ்ப்பாண வெற்றிகளை மிகப்பெரிய வெற்றியாக கொண்டாடி மகிழ்ந்தார்கள். ஐந்தாண்டு கழிவதற்குள் அந்த வரலாற்றையே திருப்பிக்காட்டியிருக்கிறார் நம்முடைய மதிப்பிற்குரிய பிரபாகரன் அவர்கள்.

கடந்த ஐந்து ஆண்டு காலங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து விடுதலைப் புலிகள் வெளியேறினாலும் கூட இந்த ஐந்தாண்டு காலத்தில் அவர்கள் வெற்றிக்கு மேல் வெற்றிகளை தொடர்ந்து பெற்று, சிங்கள இராணுவத்தை முழுமையாக நிர்மூலம் செய்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக யாழ். குடாநாட்டில் அமைந்திருக்கிற மிகப்பெரிய இராணுவ முகாமான ஆனையிறவு முகாம் விழுந்திருப்பது என்பது எண்ணிப் பார்க்க முடியாத மிகப்பெரிய வெற்றியாகும். இதன் மூலம் உலகம் எங்கும் உள்ள தமிழர்கள் மகிழ்ச்சி பெற்றிருக்கிறோம். இந்தியாவில் மிகப்பெரிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் மக்கள் மகிழ்ச்சி பொங்க இந்த மகிழ்ச்சியை கொண்டாடுகிறார்கள். ஒரு பெரிய மாற்றம் இதன்மூலம் உருவாகிக்கொண்டிருக்கின்றது. எதிர்காலத்தில் இந்த மாற்றம் முழுமையாக தமிழீழத்திற்கு அங்கீகாரம் கொடுப்பதில் போய் முடியும் என்று நான் நிச்சமாக நம்புகிறேன்.

## உலகத்தில் தமிழனுக்கென்றொரு நாடு பிறக்கப்போகிறது

– சு.ப.வீரபாண்டியன் –

மிகப்பெரிய மிகிழ்ச்சிப்பேரைலையே நேற்றைய வெற்றிச் செய்திகள் கொண்டுவந்திருக்கின்றது. மறக்க முடியாத நிகழ்ச்சியாக அந்த நிகழ்ச்சி அமைந்தது விட்டது என, ஆனையிறவு கைப்பற்றப்பட்டது தொடர்பாக தமிழீழ விடுதலை இன உணர்வாளர் சு.ப.வீரபாண்டியன் அவர்கள் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கும்பகோணத்தில் தமிழ்நாட்டு பிரச்சனையொன்றிற்காக கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் பேசத்தொடங்குகின்ற போதுகூட எனக்கு இந்த வெற்றிச் செய்தி தெரியாது. நேற்று மாலை நான்கு மணியளவிலேயே சென்னையில் ஐயா நெடுமாறன் அவர்களுக்கும், நண்பர் அறிவுமதி போன்றவர்களுக்கும் இந்தச் செய்தி எட்டியிருக்கின்றது. எப்டியாவது இந்தச் செய்தியை என்னிடத்தில் சேர்ப்பித்துவிடவேண்டும் என்று முயற்சித்திருக்கிறார்கள். இரவு 7.30 மணிக்கு அந்தக் கூட்டத்தில் பேசத் தொடங்கினேன். தொடங்கிறபோதே நான் சொன்னேன், இன்றைக்கு தமிழ் நாட்டில் இருந்து கசப்பான செய்திகள் வந்தாலும் ஈழத்தில் இருந்து இனிப்பான செய்திகள் வந்தகொண்டிருக்கின்றன என்று சொல்லிக்கொண்டுதான் எனது பேச்சைத் தொடங்கியிருந்தேன். தமிழ் நாட்டில் உயர் நீதிமன்றம் ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழியில் படிப்பது கூட அரசியலுக்கும் சடத்திற்கும் விரோதமானது என்று தீர்ப்பு அளித்திறக்கிறது. அந்த தீர்ப்பை எதிர்த்து வரும் 29 திகதி தமிழ்நாடே அந்தத் தீர்ப்பை எரிக்கவேண்டும் என்று மக்களை வலியுறுத்தியும் நடத்தப்பட்ட கூட்டமது. எனது உரையில், இறுதி அரைமணி நேரமும் முழுக்கமுழுக்க ஈழத்தைப் பற்றியும் ஈழத்தினுடைய மாவீரர்கள் பற்றியும், அவர்கள் போராடி இன்று பெற்றுக்கொண்டிருக்கிற வெற்றிகள் பற்றியும், இறுதியாக மாவீரர்நாள் புலம்பெயர்ந்த நாடுகள் முழுவதும் எப்படிக் கொண்டாடுகிறார்கள் என்கிற செய்தியையும் சொல்லி முடித்தேன்.

ஏறத்தாள உணர்ச்சிகரமாக ஒரு இறுக்கமான சூழலில் அந்த அரங்கம் இருந்தது. அரங்கு நிரம்பிவழிந்து வெளியிலும் நூற்றுக்கணக்கானவர்கள் நின்றுகொண்டிருந்த அந்த நேரத்தில், இரண்டுபேர் ஓடோடிவந்து ஒரு சின்னக்காகிதத்தை என்னிடம் கொடுத்தார்கள். அதைநான் படித்துப்பார்த்தேன் என்னுடைய மகிழ்ச்சிக்கு அளவில்லாமல் போயிற்று. இயக்கச்சி, ஆனையிறவு இரண்டு முகாம்களையும் புலிகள் கைப்பற்றி விட்டார்கள் என்று அதில் எழுதியிருந்தது. நிகழ்ச்சி முடிந்து மக்கள் எல்லாம் கலைந்து கொண்டிருந்தார்கள். மீண்டும் நான் ஒலிபெருக்கிக்குச் சென்று, ஒரு நிமிடம் அப்படியே எல்லோரும் நில்லுங்கள், நண்பர்கள் ஒரு இனிப்பான செய்தியை கொண்டு வந்திருக்கின்றார்கள், என்று சொல்லி இந்த செய்தியை நான் படித்து முடிப்பதற்குள், அந்த அரங்கமே அதிர்ந்தது. அது அடங்குவதற்கு பத்து நிமிடங்கள் ஆயிற்று. அந்த மகிழ்ச்சியின் எல்லையை என்னால் மறக்கவே முடியாது. ஆனந்தக்கண்ணீரில் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டோம். எனவே தமிழ்நாட்டில் மக்களிடத்தில், உணர்வாளர்களிடத்தில் மிகப்பெரிய மிகிழ்ச்சிப்பேரைலையே நேற்றைய வெற்றிச் செய்திகள் கொண்டுவந்திருக்கின்றது.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் செய்தியிதழ்களில் எல்லாம் தலைப்புச் செய்தியாகவே இந்தச் செய்தி இடம்பெற்றிருக்கின்றது. தமிழ்நாடு முழுவதும் இன்று நாம் சந்திக்கும் நண்பர்கள் எல்லாம், தொடர்ந்து தொலைபேசியூடாகவும் மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டிருக்கின்றார்கள். எங்கும் மகிழ்ச்சியும், ஆனந்தமும் தமிழின உணர்வாளர்களிடம் பரவியிருக்கிறது. பொதுவாக தமிழர்களிடம் புலிகள் வெல்வார்கள் இனி அவர்களை எவராலும் அடக்கமுடியாது என்ற எண்ணம் வந்திருக்கிறது. தொலைக்காட்சியில், அரசியல் விமர்சகர்கள் ஆனையிறவைக் கைப்பற்றியதற்குப் பிறகு யாழ்குடா நாடு என்பது ஏறத்தாள முடிந்துபோன மாதிரித்தான். பலாலியையும் வென்றுவிட்டார்கள் என்றால் ஈழத்தில் பெரும் பகுதி வந்தவிட்டது. திருகொணமலை மட்டும்தான் மிச்சம். திருகோணமலையும் எம் வசமாகும், வவுனியாவும் எம் வசமாகும். தமிழீழம் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருக்கின்றது. இதோ உலகத்தில் தமிழனுக்கென்றொரு நாடு பிறக்கப்போகிறது என்ற மகிழ்ச்சியில் நீந்திக்கொண்டிருக்கிறோம். இந்த மகிழ்ச்சியை, ஆனந்தத்தை, அடக்கமுடியாத பேரின்பப்பூரிப்பை உலகத்தில் வாழும் அத்தனை தமிழ் மக்களோடும் நான் பகிர்ந்துகொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

## எழுச்சியின் உச்ச நிலையில் மக்கள்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகப்பெரிய தடைக்கல்லாக விளங்கிய ஆனையிறவு பெருந்தள அழிப்பை தமிழீழ மக்கள் பெரும் எழுச்சியுடன் கொண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள். தடைக்கல் அழிக்கப்பட்ட மகிழ்ச்சியினை மக்கள் வெடி கொழுத்தி இனிப்புகளை பரிமாறிக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். மக்கள் உணர்ச்சிப் பெருக்கில் திளைத்துள்ளனர். போர்ப்பயிற்சி பெற்ற எல்லைப்படை, சிறப்பு எல்லைப் படை வீரர்கள் எல்லைப்படைச் செயலகங்களில் போர்முனைப் பணிகளுக்கு செல்ல முண்டியடித்தவாறு உள்ளனர். எங்கும் மக்கள் எழுச்சியின் உச்ச நிலையில் உள்ளனர்.

யாழ்ப்பாண மக்களினதும், கிளிநொச்சி மக்களினதும் வாழ்வழித்து அவர்களை இடம்பெயரச் செய்து அவர்களை காடு காடுகாடா ஓடச்செய்த ஆனையிறவுப் படைத்தளம் ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டு அந்த மண் மீட்கப்பட்டது, உலகத் தமிழர் வரலாற்றில் மிகப்பெரிய நிகழ்வாக மக்கள் கூறி உணர்வுப் பெருக்கில் உள்ளனர்.

அக்கராயன், புதுக்குடியிருப்பு, மல்லாவி, விசுவமடு, உடையார் கட்டு, முள்ளியவளை, முழங்காவில் ஆகிய நகரங்களில் மக்கள் தோரணங்களையும், வாழை மரங்களையும்கட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர். மக்கள் போர்முனையில் போராளிகளுக்கு உடனடியாக சிறப்பு உணவு வகைகளை செய்து அனுப்பிக் கொண்டிருக்கின்றனர். வன்னியெங்கும் தமிழீழத் தேசியத் தலைவர் வாழ்க என மக்கள் முழக்கமிட்டு வருகின்றனர்.

## விடுதலைப் போராட்ட வரலாற்றில் பங்களிக்க இதைவிட்டால் தருணம் இல்லை

விடுதலைப் போராட்ட வரலாற்றில் பங்களிக்க இதைவிட்டால் தருணம் இல்லை. இத் தருணத்தில் பங்களிக்காத வாழ்வு பயனற்ற வாழ்வு என வன்னி மக்கள் தெரிவிக்கின்றனர். வார்த்தைகளால் விபரிக்கமுடியாத அளவிற்கு மக்கள் உணர்வுப் பெருக்கில் உள்ளனர். ஆனையிறவுத்தள வீழ்சியின் மூலம், கிளிநொச்சி மக்கள் தமது இடப்பெயர்வு சீரழிவு வாழ்வு முடிவுக்கு வந்ததுள்ளதாக பெரும் மகிழ்சியுடன் தெரிவிக்கின்றனர். ஆனையிறவுத்தள வீழ்ச்சி வன்னி மக்களின் மிகப் பெரிய அளவு கொண்டாட்டமாக அமைந்துள்ளது. மக்கள் பெருமளவு போர்முனை செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். எல்லைப்படைச் செயலகங்கள், போர்முனைச் செயலகங்கள் என்பவற்றில் மக்கள் போர்முனைப் பணிகளுக்கு செல்ல முண்டியடிக்கின்றனர்.

## யாழில் இருந்து வன்னிக்கு சுதந்திர தரைவழிப்பாதை

ஆனையிறவு பெருந்தள வீழ்சிக்கு பின் யாழ். குடா நாட்டிற்கும் வன்னிக்குமான முதல் சுதந்திர தரைவழிப்பாதை திறக்கப்பட்டுள்ளது. 240 ஆண்டு காலங்களின் பின் தேசியத்தலைவரின் தலைமையில் சுதந்திரமான இந்தத் தரைவழிப்பாதை தமிழினத்திற்கு கிடைத்துள்ளது. ஓமந்தையில் இருந்து பளைவரை இன்று தமிழன் தடையின்றி பயணிக்கலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டு விட்டது. இந்தப் பயணத்திற்கு பெருந்தடையாக இருந்த ஆனையிறவுப் பெருந்தளம் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டுவிட்டது. உலக பெரும் இராணுவ நுட்பங்களையும் பெருமளவு போரிடும் ஆற்றலைக் கொண்டதுமான சிறீலங்கா படையினரின் ஆனையிறவுப் பெரும்தளம் விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டுள்ளதானது சிறீலங்கா படையினரின் போரிடும் ஆற்றலுக்கும் அதன் கௌரவத்திற்குமான பாரிய வீழ்ச்சியாக கருதப்படுகின்றது. இந்த வீழ்ச்சி தமிழீழ தேசத்தின் முழுமையான விடிவிற்கு வழிவகுக்கும் என நம்பப்படுகிறது.

இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் ம.சுகந்தனை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கைவண்ணம்

பெயர்: **சனசிவன் சிவகாந்தன்**
முகவரி: Isleworth Miool, London.
அங்கத்தவர் இல: B103



சித்திரை வருடப் பிறப்பு

சித்திரை மாதம் தமிழர்களின் முதல் மாதம். புதிய ஆண்டை ஆரம்பிக்க வைக்கிறது. உலகெங்கும் பரந்து வாழும் எம் தமிழ் மக்களுக்கு சித்திரை மாதம் சிறப்பு மாதம். ஆங்கில மாதம் ஏப்ரல் 13ம் திகதி தமிழுக்கு சித்திரை மாதம் முதல் திகதி ஆகும். இவ்வருடம் விக்கிரம வருடம் என அழைக்கப்படும்.

நாம் வீட்டைச் சுத்தம் செய்து, நீராடி, புதிய ஆடைகள் அணிந்து கோவிலுக்குச் சென்று கடவுளை வழிபடுவோம். பெரியோர்களாகிய அப்பா அம்மாவின் ஆசீர்வாதம் பெறுவோம். வீட்டில் சமைத்த உணவுப் பண்டங்களை மற்றவர்களுக்கும் கொடுத்து உண்போம். உண்டு முடிந்ததும் வீட்டுப் பெரியவர் கைவிசேடம் கொடுப்பார். எம் நாட்டில் வாழும் எம் உறவுகளுக்கு எமது புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, நன்மைகள் பெருகக் கடவுளை வேண்டுகிறோம்.


## அறிந்து கொள்ளுங்கள்

### லோப்ஸ்டர் (கடல் நண்டு)


லோப்ஸ்டர் எனப்படும் கடல் நண்டு இனத்தைப் பலரும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். இது மீன் இனத்தைச் சேர்ந்ததல்ல. உடலமைப்பு பலவகையில் நண்டுகளை ஒத்தது. மெல்லிய உடலைப் பாதுகாக்கும் ஓடு இதற்கு உண்டு. உடல் முழுவதையும் அது மூடியிருக்கும். புள்ளிகளுடன் கூடிய கரும்பச்சை அல்லது கரு நீல நிறத்தில் ஓடு இருக்கும்.

ஐந்து சோடிக் கால்களைக் கொண்டவை. மெலிதாக உள்ள நான்கு சோடிக்கால்களை நடப்பதற்குப் பயன்படுத்துகின்றது. தலைக்கு முன்புறம் உள்ள ஐந்தாவது சோடிக் கால்களின் முனையில் நகங்கள் இருக்கும். ஒன்று மிகவும் கனமானது. இரையை நொறுக்குவதற்கு உறுதியான பற்களைக் கொண்டது. சிறியதான மற்றதில் உணவைக் கிழிக்கக் கூரான பற்கள் இருக்கும். பெரிய இடுக்கி போன்ற கொடுக்கு சிலவற்றுக்கு வலப்புறமும் மற்றவைகளுக்கு இடப்புறமும் காணப்படும்.

சிறு மீன்கள், நத்தைகள், நண்டுகள் ஆகியவையே இதன் உணவு. இறந்துபோன உயிரினங்களையும் இவை உண்ணும். பெண் இரண்டாண்டுகளுக்கொருமுறை ஐயாயிரம் முதல் ஒரு இலட்சம் முட்டைவரை இடும். குஞ்சு வளரும்போது பல முறை தன் கூட்டை மாற்றிக்கொள்ளும். முதல் கூட்டைப் பிறந்த இரண்டாவது நாள் உரிக்கும். முதல் மாதத்தில் மூன்று முறை இவ்வாறு செய்யும். 15 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.



நிலத்தில் பூச்சி வகைகளே ஏராளமாகக் காணப்படுவது போல லோப்ஸ்டர்களும் அதன் இனத்தைச் சேர்ந்த நண்டுகள், இறால்களும்தான் கடல்களில் பெரும் எண்ணிக்கையில் உள்ளன. இது தன் கொடுக்கை இழக்க நேரிட்டால் அது மீண்டும் வளரக்கூடியது. பல அளவுகளில் இருக்கும். பெரியவை 50 செ.மீ. நீளம் இருக்கும்.




## முல்லாவின் கதை படியுங்கள்

### ஒரு குவளை பால்



முல்லாவும் அவர் நண்பர் ஒருவரும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஊர் ஊராகச் சென்றனர்.

அவர்களிடம் ஒரே ஒரு குவளை இருந்தது. ஆளுக்குப் பாதிப் பணம் போட்டுக் குவளை நிறையப் பால் வாங்கினார்கள்.

'முல்லா! முதலில் உங்கள் பங்கான பாதிப் பாலைக் குடித்துவிட்டு, என் பங்குப் பாலைக் கொடுங்கள். என்னிடம் கொஞ்சம் சர்க்கரை இருக்கிறது. அதைப் பாலில் கலந்து சாப்பிடப் போகிறேன்!' என்றார் நண்பர்.

'நண்பரே, சர்க்கரையை இப்போதே பாலில் கலந்துவிடுங்கள். நான் சரியாகப் பாதிக் குவளைப்பாலைக் குடித்துவிட்டு, மீதியைக் கொடுத்து விடுகிறேன்!' என்று கூறினார் முல்லா.

'முல்லா, என்னிடமிருக்கும் சர்க்கரை அரைக்குவளைப் பாலுக்குத்தான் சரியாக இருக்கும். அதனால் இப்போதே அந்தச் சர்க்கரையைப் பாலில் கலக்கமாட்டேன். உங்கள் பங்குப் பாலைக்குடித்துவிட்டு, மீதியைக் கொடுங்கள்!' என்றார் நண்பர்.

நண்பரின் சுயநலம் முல்லாவின் கோபத்தைக் கிளறியது.

சரி என்று கூறிவிட்டுத் தம் பையில் கையை விட்டு, ஒரு பொட்டலத்தை எடுத்துப் பிரித்தார்.

'இது என்ன முல்லா?'

நண்பர் ஆவலோடு கேட்டார்.

'இது உப்பு. என் பங்குப் பாலில் உப்புப் போட்டுக் குடிக்கப்போகிறேன்!' என்றார் முல்லா.

நண்பர் பதறி, 'முல்லா... அப்படிச் செய்யாதீர்கள்!' என்று கூறிக்கொண்டிருக்கும் போதே, பாலில் உப்பைக் கொட்டி, அது கலக்கும் முன் மடமடவென்று அரைக் குவளைப் பாலைக் குடித்துவிட்டு, மீதிப்பாலை நண்பரிடம் நீட்டினார்.

நண்பர் சிலையாகத் திகைத்து நின்றார்.

## கவிதை முற்றம்

### முயல்



வெள்ளை முயல்
ஓடுது
வேகமாக ஓடுது
குள்ள முயல்
ஓடுது
குதித்துக் குதித்து ஓடுது.

முத்துப் போன்ற கண்ணினால்
மேலும் கீழும் பார்க்குது
தத்தித் தத்தி விண்ணிலே
தாவிக் குதிக்கப் பார்க்குது.

நெட்டையான காதையே
நீட்டி நீட்டி ஆட்டுது
குட்டையான வாலையே
குறு குறுன்னு ஆட்டுது!

- புவியரசன்

## வினா-விடை முற்றம்

**கடந்தவார விடை:**


1. இஸ்தான் பூல் (கொன்தாந்தி நோபிள்)
2. ஊதா, நீலம், கருநீலம், பச்சை, மஞ்சள், சிவப்பு.
3. பழுது அடைந்தால் அவற்றைத் திருத்தியமைக்க முடியாது.
4. அட்லாந்திக் கடலையும் வட கடலையும் இணைக்கின்றது.
5. மெழுகுதிரி வெளிச்ச அளவையால்.
6. 1/48 அங்குலம்.

### வினா-விடை முற்றம்

1. நீந்தத் தெரியாத இரண்டு விலங்குகள்?
2. நயாகரா நீர் வீழ்ச்சியின் உயரமென்ன? அது எங்குள்ளது?
3. பாடும் பறவையின் சிறப்பு வல்லமை என்ன?
4. சிங்கம், கழுகு என்னும் அடையாளங்களால் குறிக்கப்படும் நாடுகள் எவை?
5. மாட்டுக்கு எத்தனை இரைப்பைகள் உண்டு?
6. யானையல்லாத வேறு எவ் விலங்குகளில் இருந்து தந்தம் கிடைக்கிறது?

*விடைகள் அடுத்தவாரம்.*


## கண்டுபிடியுங்கள்




இந்த வட்டத்திற்குள் 3 வட்டங்கள் வரைந்து எல்லாப் புள்ளிகளையும் இணைக்கவேண்டும். ஒவ்வொரு வட்டமும் 3 புள்ளிகளை இணைத்திருக்கவேண்டும். முயன்றுபாருங்கள்! முடியாவிட்டால் விடை அடுத்தவாரம்.

**கடந்தவார விடை:**

ஒரு மனிதர் குதிரைச்சவாரி செய்து கொண்டிருப்பது போன்ற காட்சி.



இருவாரக் கதை




# இன்னார்க்கு... இன்னார்

மேல் வானத்தைக் கவ்வியிருந்த கருமுகில் கூட்டங்கள் மெதுவாகக் கலைந்து செல்ல, கீழ் வானம் சிவந்து காணப்பட்டது.

மார்கழி மாதத்து கடும் குளிரைத் தாங்கிக்கொள்ள முடியாமல், மரக் கிளைகளுக்குக் கீழ் பதுங்கி இருந்த பட்சிகள் பொழுது புலரப் போவதற்கான அறிகுறிகள் தென்படுவதைப் புரிந்துகொண்டு, 'கீச்' என்று சத்தம் இட்டு தம் உறவுகளையும் உதவிக்கு அழைத்துக்கொண்டு இரை தேடுவதற்காய் பறந்துகொண்டிருந்தன.

அமைதியான அந்த அதிகாலை வேளையில் அந்நகரத்திற்குப் பெருமை சேர்க்கும் புனித ஸ்தலங்களுள் ஒன்றான, கந்தன் ஆலயத்தில் இருந்து வந்த 'கணீர்' என்ற மணியோசை அங்குள்ள மக்களைத் துயில் எழுப்பியது.

சோம்பல் முறித்தபடி எழுந்த இராசம்மா, பனிக் குளிரைத் தாங்கிக்கொள்ள முடியாமல், அரைகுறை உறக்கத்துடன் சுருண்டு படுத்திருந்த தன் கணவரைப் பார்த்து,

'பிள்ளையின் அலுவலாய் கொழும்புக்குப் போறமெண்டு சொன்னியள், பொழுது விடியப்போகுது எழும்புங்கோவன்' என்று கூறிவிட்டு அடுக்களைக்குள் நுழைந்துகொண்டாள்.


மனைவி கூறியதைச் செவிமடுத்த பொன்னுக் கண்டர், 'இந்தப் பொட்டச்சிக்கு ஒரு வரனும் நல்லதாய் அமையுதில்லை' என ஆதங்கப்பட்டுக்கொண்டு, எழுந்து எதிரே இருந்த பிரம்பினால் பின்னப்பட்ட நாற்காலியில் அமர, அது 'கிறீச் என்று சப்தம் இட்டு ஆட்சேபித்த பின் அவரைத் தாங்கிக்கொள்ள, சுருட்டொன்றை எடுத்துப் பற்ற வைத்து தன் உதட்டில் சொருகி புகையை உறிஞ்சி இழுத்து, பின் வெளியே ஊதித்தள்ளிக்கொண்டிருக்க, இராசம்மா தேநீர்க் கோப்பையுடன் அவர் எதிரே வந்து நின்றார்.

'ஒன்றுக்கும் யோசிக்காதையுங்கோ! சண்முகமும், நாங்கள் பெற்ற பிள்ளைதானே! அதைவிட தன் தங்கச்சியின் மேல் உயிரையே வைத்திருந்தவன். ஆனால் அவன் வாழ்க்கைப்பட்ட இடம்தான் கொஞ்சம், பணத்தாசை பிடிச்சதுகள்.

இதனால், இதுவரையில் எமக்கு ஏற்பட்ட மனக்கஷ்டங்களை எல்லாம் தாங்கிக்கொள்ளத்தான் வேணும். காரணம்: அவர்களின் பார்வைக்கு நாம் வசதியில்லாத ஏழைகள்' என்று கூறியிருந்தபோது, அந்தத் தாயின் கண்கள் குளமாகிக்கொண்டிருந்தன. அதைத் தன் சேலைத் தலைப்பால் ஒற்றிக்கொண்ட பின் மீண்டும் தொடர்ந்தாள்.

'சண்முகம் விபரம் புரியும் விடலைப் பருவமாய் இருந்தபோது, சொன்னவன், தன் தங்கச்சியின் மகள்தான் தன் வீட்டு மருமகள் என்று, அது எனக்கு இப்ப சொன்னது மாதிரி இருக்குது'. என கடந்த கால நிகழ்ச்சிகளையும் நினைவுபடுத்திவிட்டு, இன்றைக்கு அந்தப் பிள்ளை தாய், தகப்பனை இழந்து, அனாதையாய் இருப்பதை நினைக்கும்போது, அவனது மனமும் வேதனை அடையாமல் இருக்க முடியாது. 'இரத்த பாசம் இலேசிலை அழிஞ்சு போகாதப்பா..' என்று தன் மனதில் வைத்திருந்தவற்றை எல்லாம் மூச்சு விடாமல் கூறி முடித்தார் இராசம்மா.

மனைவி கூறியதில் அர்த்தம் இருந்தாலும், மகனது வீட்டில் எல்லாமே மருமகள் எடுக்கின்ற




முடிவுகள்தான் என்பது அவருக்குத் தெரியும். இருந்தாலும் தம் பேத்தியின் நல்வாழ்வுக்காய், எத்தனை இடையூறுகள் ஏற்பட்டாலும் தாங்கிக்கொள்ளவேண்டும் என்ற, மன வலிமையுடன்தான், மகனது மனக்கதவுகளை மீண்டும் ஒருமுறை தட்டிப் பார்ப்பதற்காய் கொழும்பு செல்லுவதற்கு முடிவெடுத்தார்.

சண்முகத்தைப் படிப்பித்து முன்னுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதற்காக, அவர் அனுபவித்த கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. இப்படி இருந்த போதிலும், அவன் தன் உயர் கல்வியை, கொழும்பில் தொடரவேண்டும் என்று ஆசைப்பட்டபோது, தன் ஏழ்மையையும் பொருட்படுத்தாமல், மனைவி வழி மூலம் சீதனமாகக் கிடைத்த சொத்துக்களை எல்லாம் விற்று, அதன் மூலம் கிடைத்த பணத்தைக்கொண்டு படிப்பித்தவர் பொன்னுக்கண்டர்

அவன் படித்து, பட்டம் பெற்று பெற்ற மனங்களில் பாலை வார்த்தபோது, அந்த உள்ளங்கள் மகிழ்ச்சிப் பெருக்கினால் திளைத்திருந்த வேளையில், சண்முகம் தனக்கென ஒரு வாழ்க்கையைத், தானே தேடிக்கொண்டபோதிலும்கூட, இந்த உள்ளங்கள் ஊனமாகிப் போகவில்லை, மாறாக மகிழ்ச்சியடைந்தன.

ஆனாலும், மணமுடித்த பின்பு பெட்டிப் பாம்பாய் மனைவிக்கு அடங்கிப்போய் இருந்தது தான், பெற்றவர்களுக்கு வேதனையைக் கொடுத்தன.

அதைவிட அத்தி பூத்தது போல், அவனிடம் இருந்து வரும் கடிதங்களில், கீழே இருவரிகள்; 'சாப்பாட்டிற்கு பணம் இல்லாவிட்டால் எழுதிவிடவும் அனுப்பி வைக்கிறேன்' என்று மறக்காமல் குறிப்பிட்டிருப்பதும், இவர்களுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் இருக்கும்.

இதனால்தான், இத்தனை வருடங்களாக ஓடும் புளியம்பழமும்போல் இருந்த உறவுகளைத் தம் பேத்தி செந்தூரியின் திருமணத்தின் மூலம் ஒட்ட வைக்கலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டார்.

ஆயினும், காலம் இம்முறையும் அவரைத் தலைகுனிய வைத்தது.

அங்கு சென்று, தான் வந்த விசயத்தை மகனுக்கும், மருமகளுக்கும் விளக்கியபோது, மருமகள் சொன்னாள்;

'கொழும்பிலேயே வாழ்ந்து பழக்கப்பட்ட எங்களுக்கு, யாழ்ப்பாணத்து மண்வாசனை ஒத்துவராது மாமா.... அதைவிட, கௌரவமான உத்தியோகம் பார்க்கிற என் பிள்ளையும் சுடுகாடாய்க் கிடக்கிற யாழ்ப்பாணத்தில் வாழ்க்கைப்பட விரும்பமாட்டான்'!

'இவைகளை எல்லாம் யோசித்த பின்புதான் எனது அண்ணனின் மகளை, இவ் வீட்டிற்கு மருமகள் ஆக்குவது என முடிவு செய்திருக்கிறம், செந்தூரியின் திருமணத்திற்கு ஏதும் பண உதவி வேணுமெண்டால் கேளுங்கோ செய்யிறம்' என்று கூறி முடித்தாள்.

மனைவி ஊதிய மகுடியை காதுற்றும், கட்டுப்பட்டு மௌனமாக இருந்தான் சண்முகம்.

திருமணம் செய்யாவிட்டாலும் பரவாய்இல்லை. தன் மகன் தனக்கும் சாதகமாக, இரண்டு வார்த்தைகள் கதைத்திருந்தால் கூட, தடை முகாம்களைத் தாண்டி கொழும்பிற்கு வரும்போது ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு, சிறு ஆறுதலாக இருந்திருக்கும், மகனை நினைத்துத் தனக்குள்ளேயே வேதனைப்பட்டுக் கொண்டார் பொன்னுக்கண்டர்.

மேலும் சில கணப்பொழுது கூட அங்கு நிற்க விரும்பாத அவர், வேதனைகளைச் சுமந்துகொண்டு யாழ். நோக்கிப் புறப்பட்டார்.

மருமகள் கூறியவற்றைக் கேள்விப்பட்டு இடிந்து போனார் இராசம்மா.

'அவளுக்குத்தான் மூளை பிசகிப் போய் இருந்தாலும், இவனுக்கு எங்கவாம் கோயிட்டுது.........?' என்று மனதினுள் எழுந்த ஆத்திரத்தை அடக்க முடியாமல் கணவரைப் பார்த்துக்கேட்டாள்.

தன் மகளும், மருமகனும் கொல்லப்பட்டபோது, அதிர்ச்சி தாங்கமுடியாமல் அழுது, அழுது வற்றிவரண்டுபோய் இருந்த அவரது வழிகளிலும் கண்ணீர் ஊற்றெடுக்க ஆரம்பித்தன.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த செந்தூரி சொன்னாள்;

'தாத்தா, தாலி வரம் என்பது, பெண்களுக்கு ஆண்டவனால் கொடுக்கப்பட்டது. அதைப் பெறும் தகுதி எனக்கும் இருந்தால், அது தானாகவே அமையும். அதைத் தேடி நாம் அலைய வேண்டியதில்லை. இந்தத் தள்ளாத வயதினிலும் எனக்காக, நீங்கள் அனுபவிக்கின்ற வேதனைகளை உணர்ந்துகொண்ட பின்புதான் இதைச் சொல்லுகிறேன். என்றுகூறி பாசத்தோடு அவரது, கரங்களைப் பற்றிக்கொண்டாள்.

ஆனால், அவள் எதையோ சொல்ல நினைப்பதையும், பின்பு முடியாமல், மனதிற்குள்ளேயே அவை அழிந்து போவதனால் ஏற்படும் தாக்கத்தை, செந்தூரியின் முகம் கோடிட்டுக் காட்டியதைப் புரிந்துகொண்ட பொன்னுக்கண்டர்:

'பிள்ளை நீ உன்னுடைய மனதில், எதையாவது வைத்திருந்தால் சொல்லு நான் அதைக் கண்டிப்பாக நிறைவேற்றி வைப்பேன்' என்று கேட்டார்.

சிறிது தயங்கிவிட்டு அவள்:

தாத்தா உங்களுக்கு விருப்பம் என்றால், சுரேனைக் கேட்டுப்பாருங்கள். என்றாள்.

பரிதாபத்தோடு தன் பேத்தியைப் பார்த்த பொன்னுக்கண்டர்.

இந்தத் தாத்தா உனக்கு வரன்தேடிக் களைத்துப் போய்விட்டார் என்பதற்காகவா நடைப் பிணமாய்த் திரியும் சுரேனுடன் வாழ்வதற்கு ஆசைப்பட்டாய்......? எனக் கேட்கவேண்டும்போல் இருந்தது அவருக்கு ஆனால், வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

காரணம், அவனும், இவளுக்கு உறவுக்காரன் என்பதனால்!

(மிகுதி அடுத்தவாரம்)

**இ.சிவனேஸ்வரன்**




# குழந்தைப் பேறும் அதற்கான உடலியல் தன்மைகளும்

உலகில் எவ் இனத்தவராயினும் சரி குழந்தையைப் பெற்றுக்கொள்ள விரும்பாத தம்பதிகளே கிடையாது. ஆனாலும் எல்லோர்க்கும் மனம் விரும்பியபடியெல்லாம் வாழ்க்கையில் நடந்து முடிவதில்லையே. ஆம்! எத்தனையோ குடும்பங்கள் மத்தியில் கடைசி ஒரே ஒரு குழந்தைதானும் எமக்குக்கிடைக்காதா என ஏங்கும் தம்பதியினரும் உண்டு. எனவே இங்கு பொதுவாகக் குழந்தை கிடைக்காத தம்பதிகள் மத்தியில் இந்தக்குழந்தை கிடைக்காத நிலைக்குக் காரணம் என்ன என்று தெரிந்து கொள்வதுதான் முழுமையாக இவர்களின் கவலையைப் போக்க வழி கண்டுபிடிக்கும் முயற்சியாகும். அதாவது பொதுவில் ஒரு குடும்பத்தில் குழந்தை இல்லாவிடின் அது பெண்ணிலேயே மட்டும் உள்ள குறைபாடுதான் காரணம் என்றே பலரும் நினைத்துவிடுகிறார்கள். இது முற்றிலும் தவறான கருத்து. குழந்தைப் பேறு கிடைக்காமைக்கு சிலவேளை பெண்ணிலும் குறைபாடு இருக்காலாம். இல்லையேல் ஆணிலும் குறைபாடு இருக்கலாம். எனவே குழந்தை இல்லையென ஏங்குபவர்கள் ஆண், பெண் என்ற பேதமின்றி கணவன் மனைவி இருவருமே இது தொடர்பான பரிசோதனைக்குத் தம்மை உட்படுத்தல் வேண்டும். ஏனெனில் தற்போது மருத்துவ உலகம் மிகவும் வளர்ச்சி அடைந்துவிட்டதால் எக்குறைபாட்டையும் நீக்க வல்ல சக்தி பெரும்பாலும் இதன் வசம் உண்டு. இருப்பினும் இங்கு குழந்தைப்பேறு இன்மைக்கான ஆண், பெண் இருபாலாரினதும் குறைபாடு பற்றிப் பார்ப்போம்.

முதலில் ஆணை எடுத்துக் கொண்டால் ஆண் மலட்டுத் தன்மை என்பது பற்றிப் பார்ப்போம். அதாவது ஆண் உறுப்பில் போதிய விறைப்புத்தன்மை இருக்கும். விந்து நீரும் சுரக்கும். ஆனால் அதில் உயிரணுக்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும். இதைப் பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கவும் குணப்படுத்தவும் முடியும். சாதாரணமாக திடகாத்திரமான ஆரோக்கியமான உடலுக்கும் விந்துவில் உள்ள உயிர் அணுக்களின் எண்ணிக்கைக்கும் தொடர்பில்லை. அதாவது ஒருவரின் உடல் தோற்றத்தையோ அல்லது பலத்தையோ கொண்டு அவர் குழந்தைப் பேற்றுக்குத் தகுதியுடையவர் எனச் சொல்ல முடியாது. சாதாரணமாக ஒரு ஆணுக்கு விந்துப்பரிசோதனையில் கீழ்க்கண்டவாறு நிலைப்பாடு இருந்தாலே அவர் குழந்தை பெறத் தகுதி உடையவர்.

1. **ஒரு மில்லி மீட்டரில் விந்தணுக்களின் எண்ணிக்கை இரண்டு கோடிக்கு மேல் இருக்க வேண்டும்.**
2. **விந்தணு ஊர்ந்து செல்லும் தன்மை 50 சதவிகிதம் இருக்க வேண்டும்.**
3. **அளவு, உருவ அமைப்பில் 30 சதவிகிதம் மாறுபாடு இல்லாது இருக்கவேண்டும்.**
4. **75 சதவிகிதம் உயிருடன் இருக்கவேண்டும்.**

மேற்சொன்ன நிலைப்பாடு இன்மைக்கு பின்வரும் சில பழக்கங்கள் காரணமாகவும் இருக்கலாம். அதாவது போதை மருந்துப்பாவனை, அதிக மது, புகை பாவித்தல், ஆண்குறியைச் சரிவரச் சுத்தமாக்காமையால் தொற்று நோய்க்கிருமிகள் விதைப்பையிலிருந்து வெளிவரும் விந்துவிலுள்ள உயிரணுக்களை அழித்துவிடலாம். இதைவிட நீரிழிவு நோய், காசநோய், கல்லீரல் நோய், சிறுநீரக வியாதி போன்றனவும் காரணமாக இருக்கும்.



இதேபோல் பெண் மலட்டுத் தன்மையைப் பற்றிப் பார்த்தால், பொதுவாக பெண் பருவ வயதை அடைந்ததும் அவர்கள் உடலில் குழந்தை பெற உதவியாக உள்ள உறுப்புக்களான சினைப்பை, கருக்குழல், கருப்பை போன்றவையும் வளர்ச்சி அடையும். ஒவ்வொரு மாதமும் சினைப்பையிலிருந்து வளர்ச்சி முதிர்ச்சியடைந்த ஒரு சினை முட்டை, கருக்குழல் வழியாகக் கருப்பையை வந்தடைந்து அங்கு உள்ள திசுக்களில் மாற்றங்கள் ஏற்பட்டு மாதவிலக்காக வெளிவருகிறது. இவ்வாறு சினைப்பையிலிருந்து வெளிவரும் முதிர்ச்சி அடைந்த சினைமுட்டை, ஆணின் விந்துடன் சந்தித்து கருத்தரித்து கருவாக மாறி கருப்பைச் சுவரில் புதைந்து கருவாக வளரும். இல்லையேல் இச் சினைமுட்டை மாதவிலக்கின் போது வெளியேறிவிடும். ஆனால் கருப்பை மீண்டும் மாதவிலக்குக்குத் தன்னைத் தயார்படுத்தும். இருந்தாலும் முட்டையகத்திலிருந்து சினைமுட்டை வெளிவராவிடினும் ஒவ்வொது மாதமும் மாதவிலக்கு நிகழும். சிலருக்கு சினைப்பையில் ஏற்படும் நோய்கள், கட்டிகள், அமைப்புக்கள் போன்றவற்றால் முட்டையகத்தை அகற்றும் சந்தர்ப்பம் உண்டு. இவ்வாறு நடந்தாலும் மாதவிலக்கு நிகழும். ஆனால் குழந்தைப்பேறு நிகழாது.

எனவே நிச்சயம் ஒவ்வொரு மாதமும் சினைப்பையிலிருந்து வெளியேறும் முதிர்ந்த சினை முட்டையோடு கூடிய மாதவிலக்கு என்பது மிக மிக அவசியமாக பெண்களுக்கு உள்ளது.

எனவேதான் பெண்களுக்கான குழந்தைப்பேறுக்கு ஒழுங்கான மாதவிலக்கு அவசியமாக உள்ளது. அதாவது ஒரு பெண் குழந்தைப்பேறு அடையாமைக்குப் பின்வருவன காரணமாக இருக்கிறது. முறையற்ற மாதவிடாய், சினைப்பையில் அடைப்பு, கட்டி, சினைப்பைப்புற்றுநோய், கருக்குழாயில் அடைப்பு, கட்டி, சினைப்பைப்புற்றுநோய், கருக்குழாய் அடைப்பு, திருமணத்திற்கு முந்திய தேவையற்ற கருக்கலைப்பு அல்லது ஒழுங்கான மாதவிடாய் இன்மையால் கருப்பையை (Dac) செய்துகொள்வதால் கருப்பை பலவீனம், இரத்தச்சோகை, அதிகமனக்கவலை, சுரப்பிகளின் குறைபாடுகள், உரிய நாளில் உறவு கொள்ளாமை (மாதவிலக்கு உண்டான 12ம் நாள் உறவு கொள்ளல் நன்று) போன்றனவாகும்.

## கவர்ச்சியை வெறுக்கும் ஹொலிவுட் நடிகை

ஹொலிவூட் நடிகைகள் என்றாலே பெரும்பாலும் கவர்ச்சி நாயகிகளாக வலம் வருவோரே அதிகம். ஆனால் அங்கு மிகப் பிரபலமான 'ஏஞ்சலினா ஜூலி' என்ற நடிகை சற்று வேறுபட்டவர். அதாவது இவரது உடல் அழகைக் கண்டு கவர்ச்சியாக இவரை நடிக்கவைக்க போட்டிபோடும் இயக்குநர்கள் ஏராளம். ஆனால் இவரின் கொள்கையோ என் நடிப்பால் மட்டுமே நான்



பாராட்டுப்பெறவேண்டும். நிறைய இரசிகர்களைச் சம்பாதிக்க வேண்டும் என்பதுதான். இதனால்த்தான் நான் தெரிவு செய்யும் என்னுடைய பாத்திரமும் மிக வித்தியாசமானதாக இருக்கவேண்டுமென நினைக்கிறேன் என்கிறார். ஏஞ்சலினா ஜூலி பெரும்பாலும் விரும்புவது, கடுமையான பொலீஸ்காரர் வேடம்தான்.

## வாரம் ஒரு விடயம்

## நாட்டுடமை ஆக்கல்

நாட்டுடமை ஆக்கல் என்ற கொள்கை இரண்டாம் உலகப் போரின் பின்னர் பெருமளவு பேசப்பட்டும் செயற்பட்டும் வருகின்றது. உற்பத்தியில் ஈடுபடும் பெரும் உற்பத்திச் சாதனங்களை நாட்டின் நன்மைக்காக அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற கொள்கையே நாட்டுடமையாக்கல் (Nationalisation) என வியாக்கியானம் கூறப்படுகின்றது. பொதுவாக பொருளாதார வளர்ச்சியில் தனியார் நிறுவனங்களும், பொது நிறுவனங்களும் ஈடுபடும் செயல்முறை 20ம் நூற்றாண்டில் எல்லா நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. குறிப்பாக தனியார் முயற்சியிலும், முதலீடுகளிலும் நம்பிச் செயற்படும் முதலாளித்துவநாடுகளில் இக் கொள்கை முதலில் செயற்படத்தொடங்கியது. தொழில்துறை, பகிர்வுமுறை ஆகிய பொருளாதார நடவடிக்கைகளில் அரசே தனியாரிடமிருந்து எடுத்துச் செயற்படத்தொடங்கியது.

ஆரம்பத்தில் இங்கிலாந்து நாட்டில் தொழிலாளர் கட்சி நாட்டுடமையாக்கற் கொள்கையை நீண்டகாலமாக வலியுறுத்திவந்தது. 1945ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இக்கட்சி பெரும் வெற்றிபெற்றதன்பின்னர் நாட்டுடமையாக்கல் கொள்கையை அது நடைமுறைப்படுத்தியது. இதன் பின்னரே நாட்டுடமையாக்கல் ஐரோப்பாவில் பரவத் தொடங்கியது. ஐரோப்பிய நாடுகளில் பொதுவாக அஞ்சல்துறை, விமானப்போக்குவரத்துப் போன்ற துறைகள் அரசால் ஏற்று நடாத்தப்பட்டு வந்தன. இங்கிலாந்து வங்கி 1946ம் ஆண்டு நாட்டுடமையாக்கப்பட்டதன் பின்னர் நிலக்கரித்தொழில், உள்நாட்டுப் போக்குவரத்து எரிநெய் தொழில் மின்னுற்பத்தி, இரும்பு உருக்குத்தொழில் ஆகியன நாட்டுடமையாக்கப்பட்டதையடுத்து நாட்டுடமையாக்கல் கொள்கை முதலாளித்துவநாடுகளில் நடைமுறையாகிவிட்டது. பிரான்ஸ் நாட்டிலும் நாட்டுடமையாக்கல் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது.

கார்ள்ஸ் மார்க்சின் பொருளியல் சிந்தனைப்படி மூலதனமும், தனியார் தொழில் அமைப்பும் முதலாளித்துவத்தின் இரு கூறுகளாகக் கருதப்பட்டன. மார்க்சின் இச் சித்தாந்தம் ஐரோப்பிய நாடுகளில் பரவத்தொடங்கியதுடன் தனியார் தொழிற்துறை சமூக அமைப்பையும் தொழிலாளர்களையும் சுரண்டுகின்றனர் என்ற எண்ணம் எழுச்சிபெறத் தொடங்கியதால் நாட்டுடமையாக்கல் கொள்கை வலுப்பட்டது என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

பொதுவுடமை நாடுகளில் எல்லாத் தொழில்களும், பொருளாதார அமைப்புக்களும் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு சமுதாய நன்மைக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. இக்கொள்கை சமூகமயமாக்கல் கொள்கை (Socialisation) எனப்படும். நிலங்களை சமூகமயமாக்கும் கொள்கையை முதலில் லெனினே சோவியத் நாட்டில் அறிமுகப்படுத்தினார். ரஷ்யப் புரட்சிக்குப் பின்னர் 1922ம் ஆண்டு சொத்துரிமை நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதையடுத்து நிலம், நீர், காட்டு வளம் போன்றன சமுதாயச் சொத்துக்களாக அறிவிக்கப்பட்டன. அதுமட்டுமல்ல, பெருந்தொழில்கள் எல்லாம் அரசினாலே மேற்கொள்ளப்பட்டன. எனவே பொதுவுடமைப் பொருளாதார அமைப்பில் நாட்டுடமைக் கொள்கையின் வலு எப்போதும் அதிகம்தான். ரஷ்யாவைப் போன்றே சீனாவிலும் 1949ம் ஆண்டு நாட்டுடமையாக்கும் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

நாட்டுடமையாக்கும் கொள்கை தனியார் பொருளாதார ஆதிக்கத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்படும் ஒரு கருவியாகவே பொதுவுடமைக் கொள்கைநாடுகளில் உள்ளது. அது மட்டுமல்ல, தொழில் தகராறுகள் காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலையிலும் நாட்டுடமையாக்கல் கொள்கை அரசினால் கடைப்பிடிக்கப்படுகின்றது.

நாட்டுடமையாக்கல் கொள்கைகளைப்பற்றி சிறப்பாகக் கூறப்பட்டாலும் அது பற்றி எதிர்க்கருத்துக்களும் இல்லாமல் இல்லை. நாட்டுடமையாக்கப்பட்ட நிறுவனங்களில் போதிய உற்பத்தித் திறன் பெருகுவதில்லை எனவும், தொழிலாளர்கள் பொறுப்பான முறையில் பணிசெய்வதில்லை எனவும் மேலாண்மை செய்யும் உயர் அதிகாரிகள் போதிய ஆர்வம் காட்டுவதில்லை எனவும் குற்றச்சாட்டுக்கள் நாட்டுடமையாக்கல்மீது அடுக்கப்படுகின்றன. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு வலுச் சேர்ப்பதுபோல இன்று பல நாடுகளின் பொருளாதாரத்துறையில் அரச நிறுவனங்களின் தொழிற்திறமையை விட தனியார் நிறுவனங்களின் தொழில் வலு அதிகமாய் இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருப்பதையும் மறுக்கமுடியாது.

* மளிகைப் பொருட்கள்
* உடன் மரக்கறிகள்
* உடன் மீன் வகைகள்
* மற்றும் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்

**Sri Murugan**
Wiesen Str-10, 4900 Langenthal, Switzerland
உரிமையாளர்: மாணிக்கம் இளமுருகன்
Tel: 062/922 17 98-Fax: 062/922 78 33

---

**Palm Beach**
RESTAURANT
10%OFF
ALL TAKE AWAY ORDERS
P.Sivarupan
Proprietor




17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

---

**ARCHIE'S**
Audios - Videos - CD's
Whole Salers & Retailers
205 Edgware Road,
Colindale,
London NW9 6LY
T.P: 0181-205 3652

---

உங்களுக்குத் தேவையான மளிகைச் சாமான்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு

**KANNA**
**Euro Enterprises**
198, Arch Way Road
(முருகன் ஆலயத்திற்கு அருகில்)
High Gate,
N6 5BB, London.
T. Phone- 0181-3483356

---

**ஈழமுரசு**
Eelamurasu Weekly

பிரித்தானியாவிற்கான சந்தாக் கட்டணத்தினை (வருடம் ஒன்றிற்கு £60, 6 மாதங்களுக்கு £32) செலுத்துவதன் மூலம் ஈழமுரசு உங்கள் வாசல் தேடி வருவதற்கான வாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## பிரித்தானிய வணிகம்

பிரித்தானியா நாட்டிற்கான விளம்பரங்களை ஒரே பக்கத்தில் பிரித்தானியப் பதிப்பில் 'பிரித்தானிய வணிகம்' என்ற பகுதியில் இடம் பெறுவதற்கான விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன. குறைந்த கட்டணத்துடன் விளம்பரப்படுத்த இப்பகுதி உங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பினை அளிக்கின்றது.

உங்கள் விளம்பரம் தொடர்பான தேவைகளுக்கு நாடுங்கள்

**EELAMURASU (அஞ்சல் வழி)**
**5, Saxony Parade, Hayes,**
**UB3 2TQ**
**Fax/Tel: 0181-56 16 877**

சிறிய வரி விளம்பரங்களுக்கு £5 மட்டுமே!

ஜெயந்தன் Tel: 0956908145
ஹரி Tel: 07887874177
பாஸ்கரன் Tel: 0181-7698302

---

**ASIAN FUNERAL DIRECTORS**
24 மணிநேரச் சேவை



அமரத்துவம் அடைந்தவர்களது இல்லங்களுக்கான பிரத்தியேக விஜயங்கள், அமரர்களைக் குளிப்பாட்டுதல் - ஆடை அணிவித்தல் - அஞ்சலிக்கு வைத்தல், வார இறுதி ஈமக்கிரியைகளுக்கான ஒழுங்குகள், மலர் வளையங்களுக்கான ஒழுங்குகள், மதச் சடங்குகளுக்கான ஒழுங்குகள் ஆகியவற்றுடன் அமரர்களின் பேழைகளைச் சர்வதேச ரீதியில் காவிச்செல்லும் பணி.

**LONDON 0800 026 2335**
MIDLANDS **0800 026 2334**
F·O·S Part of the SCI Group of Funeral Directors
*Member of the Funeral Ombudsman Scheme and the Funeral Standards Council*
Pub Lon

---

**A.J**
**VIDEO & AUDIO**
A.J. VIDEO & AUDIO
Leading Agent for:
Tamil videos, Audios, CDs,
Sri Lankan News papers,
Tamil magazines
*14, Loampit hill, Lewisham London SE13 7SW*
Contact:
VASANTHAN & SUGNTHAN
Tel: 0181-694-6653

---

**SHASME**
*Super Store*
இலங்கை இந்திய மளிகைச் சாமான்கள் வீடியோ, ஒடியோ, CD, சஞ்சிகைகள், பத்திரிகைகள், மரக்கறி வகைகள், கடல் உணவுப்பொருட்கள் Gnanam Phone Card அனைத்தையும் பெற்றுக்கொள்ள Birmingham த்தில் ஒரே தமிழ்க்கடை
*211, Lady Pool Road,Balsall Heath, Birmingham B 12, 8 LG*
*Tel No: 0121-4465896*

---

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரித்தானியா
# TAMILS REHABILITATION ORGANISATION

## 10 TH ANNUAL INTERNATIONAL FOOTBALL TOURNAMENT
## 10வது வருடாந்த சர்வதேச உதைபந்தாட்டப்போட்டி

**7 A SIDE KNOCKOUT**

**30 Th April 2000**
**SUNDAY**
**BANK HOLIDAY**
**AT 9.00 A.M**

**மீட்ட மண்ணில் மீளக்குடியமர்வுத் திட்டத்திற்கான நிதி சேகரிப்பு**


தமிழீழ உணவகம் பல்வேறு தமிழீழ உணவு வகைகள் குறைந்த வகையில் சுடச்சுட விற்பனைக்குண்டு

**வினோத விளையாட்டுப்போட்டி**

DOUGLAS EYRE SPORTS CENTRE
COPPERMILL Lane, WALTHAMSTOW
LONDON E 17 7HE

**Along with Under 10,12,14,16 Football & Netball**

**UNDER 14 CHILDREN SPORTS**
ENTRIES ACCEPT At 11.30 A.M
SPORTS START AT 1.30 P.M
*FOLLOWING EVENTS WILL BE HELD*
25,50,100 Netres
Sack Race, Bun Race, Spoon Race
Cycle Race
Age Groups: Under 5,6,8,10,12 & 14



ஒரே இடத்தில் சகல பொருட்களையும் வாங்கக்கூடிய முறையில் பல்வேறு வியாபார நிறுவனங்கள் தமது கடைகளை நடாத்த உள்ளன.

தொடர்புகட்கு: 0181-520 5876, விளையாட்டு: 0181-503 3503
79 Hoe Street, Walthamstow, London E17 4SA
TRO CHARITY SHOP: 520 Forest Road. London E17

**Admission:£ 2.0**


Pub gra Lo

## நோயற்ற வாழ்வே...

Dr.N.S. மூர்த்தி

# மூட்டு வலிக்கு

உடலுள் இயற்கையாகச் சுரக்கப்படும் Glucosanine இது அமினோ சர்க்கரை வகையைச் சேர்ந்தது. 1970 களில் இது தொடர்பான பல் வேறு ஆய்வுகள் நடைபெற்றுவந்தன. பல பரிசோதனைகளின் விளைவாக இது உடலுக்கு எவ்வளவு தூரம் நன்மைகளை விளைவிக்கின்றது என்பதற்கான ஆதாரங்கள் பெருமளவில் கிடைத்தன. குளுக்கோசேமைன் எனும் இப் பதார்த்தம் உடலில் இயற்கையாகச் சுரப்பதுடன் உடலுள் உள்ள குருத்தெலும்புகளிலும், தசை நார்களிலும் இழையங்களிலும் பெருமளவு காணப்படுகின்றது. ஓர் பசைப் பொருள்போன்று



குருத்தெலும்புகளை இணைத்து வைப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றது. நாம் உண்ணும் உணவில் ஓரளவு இச்சத்து இருந்தாலும், நாளாந்த தேவைக்கான இதன் அளவு போதாமையின் காரணமாக உடல் தானாகவே பெருமளவு குளுக்கோசேமைனைத் தயாரிக்கின்றது.

மாத்திரைகளாக இவற்றை நாம் உட்கொள்வதன் மூலம் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிலையிலுள்ள இச்சத்து உடலினுள் சென்று உடனடியாக வேலை செய்ய ஏதுவாகின்றது பழுதடைந்த மூட்டுக்களையும் இழையங்களையும் பழைய நிலைக்குக் கொண்டுவரும் பணியை இது செய்வதால் மூட்டுவலி நீங்குவதுடன் வீக்கமும் குறைகின்றது.

கூடிய அளவில் இதை உட்கொள்வது எவ்விதமான பக்க விளைவுகளையும் தோற்றுவிக்காது என்பது ஓர் ஆறுதலளிக்கும் விடயமாகும். இதன் செயல்பாட்டை அதிகரிக்கவேண்டுமானால் கொன்றெயிட்டின் Chondroitin என்ற தாதுப்பொருளையும் சேர்த்து எடுத்தால் நல்ல பலன் கிடைக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இரண்டு தாதுப்பொருட்களும் ஒன்றாகச் சேர்ந்து மூட்டுவலி நோயாளிகளில் Ibuprofen போன்ற வலி நிவாரணிகளை விட நீண்ட நேரம் செயலாற்றுவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இயற்கையான இம் மருந்து வாதநோயால் வருந்துபவர்களுக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதமென்றே கூறவேண்டும். தினமும் கிரமமான உடற்பயிற்சி, விட்டமின் ஏ,டி இரண்டும் இணைந்த மீன் எண்ணை வில்லைகள் ஆகியவற்றையும் மேற்படி மருந்துகளுடன் சேர்த்துப் பாவிப்பது மேலும் நல்ல பலனை அளிக்கும்.


## மரண அறிவித்தல்

மலர்வு: 08.01.1958
உதிர்வு: 16.04.2000



கனகரெட்ணம்
வரதன்

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்சில் எப்பினேயை (Epiany) தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.க. வரதன் அவர்கள் 16.04.2000 அன்று அகால மரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கனகரெட்ணம் கனகலட்சுமியின் அன்புப் புதல்வரும் பிறேமாவின் அன்புக் கணவரும், செல்வி பவினி, செல்வன் கார்த்தீபன், செல்வன் மௌலீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. திருமதி யோகராசா - கமலாவதி (சின்னம்மா லண்டன்) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் 25.04.2000 அன்று Cimetière Joncherolles இல் நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்: மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்*

1, Allée Carpeaux - 93800 Epinay Sur - Seine, France
Tel: 01 48 27 32 68

Pub


## கடந்த நூற்றாண்டு கண்ட இரு பெரும் போர்கள்

# ஐந்து கோடி மக்களைப் பலி கொண்ட இரண்டாம் உலகப்போர் (1939 - 1945)

### ஹிட்லருக்குக் கிடைத்த 'லெனின்கிராட்' தோல்வி

1938ம் ஆண்டு ஜேர்மனியின் அடோல்ப் ஹிட்லர் ஒஸ்ரியா நாட்டை ஜேர்மனியுடன் இணைத்துக் கொண்டதையடுத்து இரண்டாம் உலகப்போருக்கான சூழ்நிலை முகிழ்விடத் தொடங்கியது. ஹிட்லரின் நடவடிக்கை ஒஸ்ரியாவுடன் மாத்திரம் நிற்கவில்லை. செக்கோசிலோவாக்கியாவின் ஒரு பகுதியான சுடேட்டன்லான்தையும் அவர் கைப்பற்றிக்கொண்டார். இவ்வேளை இங்கிலாந்தின் தலைமை அமைச்சரான நெவில் சேம்பர்லேன் இப்பிரச்சினையில் தலையிட்டு 'மியூனிச் ஒப்பந்தம்' எனப்படும் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டார். இவ் ஒப்பந்தத்தில் ஜேர்மனால் கைப்பற்றப்பட்ட சுடேட்டன்லான்தை நிர்வகிக்கும் பொறுப்பினை இங்கிலாந்திற்கு ஜேர்மனி கொடுப்பதாக ஒப்புக்கொண்டது. ஆனால் ஹிட்லரின் ஆதிக்க வெறியின் தந்திரத்தை இங்கிலாந்து மிக விரைவிலேயே உணர்ந்துகொண்டது. 1939ம் ஆண்டு ஹிட்லர் செக்கோசிலோவாக்கியா முழுவதையுமே கைப்பற்றிக்கொண்டார். அதுமட்டுமல்ல, போலந்தின் கட்டுப்பாட்டிலிருந்த டான்சிக் துறைமுகப்பகுதியைத் தனக்குத் தரும்படி ஹிட்லர் போலந்தையும் நெருக்கத்தொடங்கினார், போலந்தின் அரசு ஜேர்மனியின் இந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்க்க மறுத்தது. இதனால் ஆத்திரமடைந்த ஹிட்லர் போலந்துமீது தாக்குதலைத் தொடுத்தார். இந்தவேளை போலந்தின் நட்பு நாடுகளான இங்கிலாந்தும் பிரான்சும் போலந்திற்கு உதவி செய்வதற்காக ஜேர்மனிமீது தமது தாக்குதலை ஆரம்பித்தன. ஆம் இரண்டாம் உலகப்போர் ஆரம்பித்துவிட்டது. 1939ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3ம் திகதி இரண்டாம் உலகப்போர் வெடித்தது.

போரின் ஆரம்பத்தில் ஹிட்லரின் புதிய தாக்குதல் வியூகத்திற்கு பதில் அளிக்கமுடியாமல் எதிர்த் தரப்பினர் திணறியது என்னவோ உண்மைதான். 'பிளிஸ்ட் கிறிக்' என்னும் மின்னல்வேகத் தாக்குதலை ஹிட்லர் வேகமாகத் தொடுக்கத்தொடங்கினார். போலந்தின் தலைநகர் வார்சோ ஜேர்மனியின் கடும் குண்டுவீச்சிற்கு இலக்கானது. ஐந்து வாரமாக போலந்துமீது குண்டுகள் மழையெனப் பொழியவே போலந்து ஜேர்மனிக்குப் பணிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. ஆனால் ரஷ்ய துருப்பினரும் போலந்தின்மீது தாக்குதலைத் தொடுத்து கர்சான் எல்லைக்கப்பால் உள்ள பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டதுடன் லித்துவேனியா, எஸ்தோனியா, லத்வியா போன்ற ஸ்னர்நேவிய பகுதிநாடுகளையும் ஆக்கிரமித்துக்கொண்டனர். ஹிட்லர் தனது போரினைத் தீவிரப்படுத்தினார். 1940ம் ஆண்டு ஏப்ரல் மாதம் டென்மார்க்கையும், நோர்வே நாட்டையும் ஹிட்லர் தன்வசப்படுத்தினார். அத்திலாந்திக் கடலில் தனது துருப்பினர் மேலாதிக்கம் செலுத்தவேண்டும் என்பதற்காகவே ஹிட்லரின் போர்வெறிக்கு நோர்வே இலக்கானது. இரண்டாம் உலகப்போரில் தாம் நடுநிலைமை வகிப்பதாக அறிவித்திருந்த நெதர்லாந்து பெல்ஜியம் ஆகிய நாடுகளும் ஹிட்லரின் போர்வெறிக்குத் தப்பவில்லை. 1940ம் ஆண்டு ஏப்ரல் 10ம் திகதி இவ் இரு நாடுகளும் ஹிட்லரின் வசமாகின.

ஹிட்லர் பிரான்ஸ்மீதான தாக்குதலைத் தொடுத்தவேளை இத்தாலியின் சர்வாதிகாரியான முசோலினியும் தன் பங்கிற்கு பிரான்சின் தென்கிழக்குப் பகுதியைத் தாக்கத்தொடங்கினார். பிரான்சின் நிலைமை மிருதங்கத்தின் நிலைபோல் ஆயிற்று. இருபக்கமும் அதற்கு அடி கிடைத்ததால் 1940ம் ஆண்டில் பிரான்சும் ஹிட்லரிடம் வீழ்ந்தது. ஹிட்லர் தனது போர்முனையைப் பல பக்கங்களிலும் வியத்தகு முறையில் விஸ்தரித்தது அநேக மேற்குலக நாடுகளுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. இங்கிலாந்தை வீழ்த்தும் நோக்குடன் ஹிட்லர் தனது விமானப்படையினை இங்கிலாந்துமேல் குண்டுமழை பொழிய அனுப்பிவைத்தார். ஜேர்மனிய விமானங்களில் இருந்து ஆயிரக்கணக்கான குண்டுகள் இங்கிலாந்து எங்கும் வீசப்பட்டன. இங்கிலாந்திற்கு பேரழிவு ஏற்பட்டது. என்றாலும் ஆங்கிலேயர் ஜேர்மனிக்கு அஞ்சாது சேர்ச்சில் தலைமையில் தமது எதிர் தாக்குதலைத் தொடுத்தனர். இதனால் இங்கிலாந்தினை வீழ்த்தும் ஹிட்லரின் எண்ணம் வெற்றிபெறவில்லை. ஹிட்லர் தனது போரினை நடாத்தியவேளை முசோலினியும் ஆபிரிக்க கண்டத்தின்மீது தனது தாக்குதலைத் தொடுத்தார். சோமாலிலாந்து முசோலினியிடம் வீழ்ந்தது. ஆனால் ஆங்கிலேயர்கள் சளைக்காது போரிட்டு எரித்திரியா, சோமாலிலாந்து ஆகியவற்றைக் கைப்பற்றினர். அங்கிருந்த இத்தாலியத் துருப்புக்கள் ஆங்கிலேயர்களால் விரட்டியடிக்கப்பட்டனர்.

இவ்வேளை இரண்டாம் உலகப்போரின் களநிலைமை பற்றி வெகு கவனமாக ஆய்வு செய்த அமெரிக்கா 1941ம் ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்க காங்கிரசைக் கூட்டியது. போர் நிலைமை பற்றி காங்கிரசில் பலமாத விவாதங்கள் நடாத்தப்பட்டன. கூட்டத்தின் முடிவில் நேசநாடுகளுக்கு உதவுவதென காங்கிரசில் முடிவெடுக்கப்பட்டது. இவ்வேளை ஹிட்லர் தான் செய்துகொண்ட ஒப்பந்தங்களை மீறத் தலைப்பட்டார். ஒப்பந்தங்கள் என்பது வெறும் கடதாசிகளில் எழுதப்பட்டவை. அவசியம் ஏற்பட்டால் அவற்றைக் கிழித்தெறிவதில் தவறில்லை என்ற கொள்கையில் ஹிட்லர் பிடிவாதமாக நின்றதால், ரஷ்யாவுடன் தான்செய்துகொண்ட ஒப்பந்தத்தினை மீறி 1941ம் ஆண்டு ஜூன் மாதம் ரஷ்யாமீது போர்தொடுத்தார். இவ்வேளை அமெரிக்கா ஹிட்லருக்கெதிரான போரில் கால்பதித்தது. அமெரிக்கப் போர்த் தளவாடங்கள் ரஷ்யாவிற்கும், இங்கிலாந்திற்கும் அவசரமாக அனுப்பப்பட்டன. ஜேர்மனியத் துருப்பினர் ரஷ்யாமீது நுழைந்தவேளை லெனின் கிராட் பகுதியில் கடும்போர் நடைபெற்றது. இந்தப்போர்தான் ஹிட்லரின் ஆதிக்கவெறிக்கும் ஒரு பாடத்தைப் புகட்டியதென்றுதான் கூறமுடியும். லெனின்கிராட் கடும் சமரில் ஜேர்மனியத் துருப்புக்கள் மாபெரும் தோல்வியடைந்தன. இந்தத் தோல்விபற்றி இன்றும் உலகநாடுகளின் போர்நிலவரங்களைப் பற்றி ஆராயும் ஆய்வாளர்கள் மேற்கோள்காட்டி வருகின்றனர். லெனின்கிராட்டிற்குக் கிடைத்த தோல்வி ஜேர்மனிக்கு ஒரு பெரிய தோல்விதான். ஐரோப்பாவின் போர்க்களம் இவ்வாறு இருக்க ஜப்பானின் ஆதிக்கவேட்கை மக்களுக்குப் பெருத்த இன்னல்களைக் கொடுத்தது. 1941ம் ஆண்டு டிசம்பர்மாதம் 7ம் திகதி ஜப்பான் மேற்கொண்ட ஒரு தாக்குதல் அமெரிக்காவுக்கு பெரும் அதிர்ச்சியினையும் அழிவினையும் ஏற்படுத்தியது. பசுபிக் பெருங்கடலில் இருக்கும் ஹவாய்த் தீவுகளைச் சார்ந்த பேர்ள் துறைமுகத்தை ஜப்பானியப் போர் விமானங்கள் அதிரடிக் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாக்கின. பேர்ள் துறைமுகப் பகுதியில் நிலைகொண்டிருந்த அமெரிக்க கடற்படையினர் இத்தாக்குதலை எதிர்பார்க்கவேயில்லை. ஏழு அமெரிக்க போர்க் கப்பல்கள் ஜப்பான் குண்டுவீச்சுத் தாக்குதலில் அழிக்கப்பட்டது. அக் கப்பல்களில் இருந்த 150 போர் விமானங்களும் கப்பல்களோடு சேர்ந்து கடலில் மூழ்கின. அழிக்கப்பட்ட கப்பல்களில் அமெரிக்காவின் ஒரு நம்பிக்கை நட்சத்திரமான 'அரிசோனா'வும் ஒன்று. ஜப்பானின் இந்தத் தாக்குதலையடுத்து அமெரிக்கா சினம்கொண்டது. ஜேர்மனிய தலைமையில் போரிடும் அச்சுநாடுகளிற்கு எதிராக அது களத்தில் குதித்தது. அப்போது அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த பிராங்கிளின் ரூஸ்வெல்ற் ஐரோப்பாவிற்குப் பெரும் படையொன்றினை அனுப்பிவைத்தார். தளபதி ஐசநோவர் தலைமையில் இப்படை ஐரோப்பாவிற்குச் சென்றது. ஐரோப்பாவிற்கு படையணி சென்ற அதே வேளை ஜப்பானின் போர்வெறியை அடக்குவதற்காக தளபதி மைக்காதர் தலைமையில் வலிமை வாய்ந்த மற்றொரு படையணி பசுபிக் பெருங்கடல் போர்ப்பகுதிக்கு நகர்ந்தது. தென்கிழக்கு ஆசியாவில் போர் நடவடிக்கைகளைத் தான் பொறுப்பேற்பதாக மவுன்ற்பேட்டன் பிரபு ஒத்துக்கொண்டதுடன் போர் நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தினார். பர்மா நாட்டில் ஆக்கிரமித்திருந்த ஜப்பானியத் துருப்பினர் மவுன்ற்பேட்டனால் விரட்டியடிக்கப்பட்டனர். மைக்காதர் தலைமையில் நகர்ந்த படையணி பிலிப்பைன்ஸ் தீவுகளைக் கைப்பற்றிக்கொண்டது. எங்கும் ஒரே போர்மேகம். இருண்ட கண்டமென அழைக்கப்படும் ஆபிரிக்காவையும் போர் விட்டுவைக்கவில்லை. அங்கும் கடுமையான போர் நடைபெற ஆரம்பித்தது. அது பற்றி மறுவாரம் பார்ப்போம்.

- சி.பி.

# பலதும் பத்தும்

## திருடனின் மனிதாபிமானம்

பாரிசின் புறநகரப் பகுதியொன்றில், ஒருநாள் காலை ஒரு வாடகைக்கார் சாரதி தனது ஆறு வயது மகளுடன் தனது வாடகைக்காரில் புறப்பட்டுச் சென்றுள்ளார். வேலைக்குச் செல்லும் வழியில் அச்சிறு பெண்ணை அவரது தாய் தந்தையரது இல்லத்தில் விட்டுச் செல்வது வழக்கமாக இருந்தது.


அன்றும் அது போலவே, குழந்தையை அழைத்துச் சென்றவர் வீதியோரத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு மகளுக்கு ஏதோ வாங்க கடைக்குச் சென்றுவிட்டார். வலது புற ஆசனத்தில் அச்சிறுபெண் அமர்ந்திருந்துள்ளார். அவ்வேளை திடீரென கார்க்கதவைத் திறந்த ஒருவன், கார்ச் சாரதியின் ஆசனத்தில் அமர்ந்து காரைக்கிளப்பிக்கொண்டு சென்றார். அருகில் இருந்த சிறு பெண்ணிடம், எங்கே செல்லப்போகிறாய் என திருடன் வினாவியபோது, அச்சிறுமிக்கு தனது வீட்டைக் காட்டத் தெரியவில்லையாம்.

குழம்பிப்போன திருடன், என்னசெய்யலாம் என யோசித்து இறுதியாக அச்சிறு பெண்ணை அந்நகரின் பொலிஸ் நிலையத்தின் முன் இறக்கிவிட்டு, காருடன் தலைமறைவாகிவிட்டார். இவ்வளவு இரக்க குணம் படைத்த அந்தத் திருடன் தான் பக்கத்துக் கிராமத்தில் காரைக் கைவிட்டுவிட்டு அந்தத் தகவலையும் பொலிசாருக்கு அறிவிக்க மறக்கவில்லையாம்.



இந்தப் புலிக்குட்டியின் வயது ஆறுமாதங்கள் கூட இல்லை. அதற்குள் இப்படியான ஒரு நட்பு! சற்று வளர்ந்தால் இந்தக் குரங்குக்குட்டியை விழுங்கக்கூடிய இவர், இப்போது இதன் துணையில்லாமல் பால் கூடக் குடிப்பதில்லையாம்.

***இவளுக்கு பெயர் மோரிகா. உண்மையிலேயே இவளொரு வாத்தியக்கலைஞி அல்ல, ஆனாலும், மோர்ஸ் வாத்தியக்கருவியை மிக அழகாகப் பயன்படுத்துகிறாள். இவள் ஜப்பானின் தலைநகர் டோக்கியோவுக்கு அருகே உள்ள ஒரு கடல் காட்சிச்சாலையில் இருக்கிறாள். ஜப்பானிய பாரம்பரிய இசையை மிக அழகாக இவள் வாசிக்கிறாள். இவளது வாத்திய இசையை கேட்பதற்காகவே இங்கு வருபவர்கள் ஏராளம் என்றால் பாருங்களேன்!***



## போலி நாணயங்களும் பொலிசாரும்

*பிரான்சில் மொன்தார்ஜி எனும் நகரில் அமைந்திருந்த காவல் நிலையத்திற்கு, ஒருநாள் காலை ஒருவர் ஒரு பையுடன் வந்தார். அதற்குள் என்ன இருந்ததென்றால், 550 பிராங் பெறுமதியான பத்து பிராங் நாணயங்களாகும். 38 வயதான அந்த நபர் தான் வீதியில் கண்டெடுத்த அந்த பணப்பையை மிகவும் நேர்மையாக பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளார். பொலிஸ் நிலையத்தில் இருந்த அதிகாரியும் அவற்றை எண்ணி பொறுப்பேற்றவர், 'கண்டெடுத்த பொருட்கள்' எனும் தலைப்பில் அதனை வங்கியிலும் இட்டுள்ளார்.*

*அடுத்தடுத்த மாதங்களில் பொலிசாரினால் நடத்தப்படும் விழாக்களுக்கு அதனைப் பயன்படுத்தலாம் என அவர் எண்ணியிருந்திருக்கலாம்! ஆனால், சில மணி நேரங்களில் வங்கியில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்ததாம். என்னவென்று பார்த்தால் அத்தனையும் போலி நாணயங்களாம்! பிரச்சனை நீதிமன்றத்திற்கு போனது. அந்த அதிகாரிக்கு 18 மாதகால சிறைத்தண்டனை நன்நடத்தையுடன் வழங்க நீதிமன்றம் தீர்மானித்தது.*

*பாவம் ஒய்வெடுக்கப்போகும் காலத்தில் இப்படியோர் தண்டனையா?*

# கவிக்களம்

## இன்னொரு காத்திருப்பு...

புத்தகம் சுமக்கவே - நான்
பிரியப்பட்டேன்
கல்லூரி வளாகத்தில்
கனவுகளைத் துறக்கவே -
நான் கனவுகண்டேன்
படிப்பதற்காக மட்டும்
பள்ளிக்கூடம் போனேன்
துப்பாக்கியைக் கண்டு
தூர ஓடினேன்
கத்தியைக் கண்டு
கதறினேன்

ஆனால்... ஆனால்...
அம்மாவின் கையிலிருந்து
இடுங்கி வீசப்பட்டேன்
அனாதையாய்....

அப்பாவின் தலையை
ஆட்லெறி அறுத்தெடுக்க
கூடப்பிறந்தவர்கள்
கைதுசெய்யப்பட்டார்கள்

என் ஆசையக்கா
அவர்களால்
அநியாயமாய்ச் செத்தாள்

பள்ளிபோன சிறுவரெல்லாம்
பயங்கரவாதியென்று
சகடையை அறைப்பிச்
சாகடித்தார்கள்....

அரசு சொன்னது
பயங்கரவாதிகளை
அழித்தோம் என்று!

கல்வி மறுக்கப்பட்டு
கனவுகள் மறக்கப்பட -
காலம்
என்கையில்
கத்தி தந்தது

துயரம் என்
கையில்
துப்பாக்கி தந்தது

இப்போ என் கத்தி
அறுக்கிறது
கொடியவல்லூறுகளை

இப்போ என் துப்பாக்கி
முழங்குகிறது
எங்கள் எல்லையிலிருந்து
எதிரியை விரட்டியபடி....

இன்னொரு
காத்திருப்பு அது
என்னால் முடியாது

இன்றே... இப்போதே....
அடிக்கு அடி
அதுதான் அருமருந்து.

*- புதியநிலா - ஜேர்மனி*

## இது எமது யுகம்

அது விடியலின் வாயில்
என் உதிரத்தான்
மரண பத்திரத்தில்
யாப்பெழுதுகிறான்...

நண்பர்களே!
என்னைக் கொளுத்தி
விடாதீர்கள்.

வறுமையில் எரிந்த என்
வயிறுகளுக்கு
இன்னொரு கொள்ளி
தேவையில்லை.
விதைத்து விடுங்கள்.
ஆனால்....

என் சாவின்
வரவு தாமதப்பட்டிருக்கலாம்.
பசியின் பக்கச் சார்பில்
சாவின் இந்த
இடைச்செருகல்
அநியாயமானது.

என் மூச்சுக் காற்றை
மரண வரிவிடலில்
சுவீகரித்து சாவின் சமரசம்
செய்யும்
மரணமே நீ செத்துப் போ!

என் தளிர்களின்
சுதந்திரவாசிப்பின்
சுவடுகளில்

நான் புரளவேண்டும்.
அதற்கொரு
பரிகாரம் இல்லையா?
பாழ்பட்ட மரணமே
உனக்கொரு பட்டினி
வராதா?

கிழக்கு வெளிக்கிறது...
அங்கொரு சூரிய செதுக்கல்...
எங்களுக்காய்...
இது எமது யுகம்
என்பதற்காய்!!

ஆ... மரணமே
தள்ளிப்போகாயா?
சுதந்திர வாசல்வரை நான்
நடக்க வேண்டும்!!...

மனமிரங்கா மரணமே
என் பிரசவத்தையேனும்
துரிதப்படுத்து.
புல்லாகவேனும் நான்
புனிதப்பட வேண்டும்.

நண்பர்களே!
என்னைக் கொளுத்தி
விடாதீர்கள்.

நாளை நானும்
சுவாசிக்க வேண்டும்.

*பழதியான்.*
*(லொறா - ஜேர்மனி)*


# ‘இறுதிக்காலம் வந்தாச்சு’

**(நாம் சொல்லவில்லை வேதம் சொல்கிறது)**

## காலம்: 25 ஏப்ரல் செவ்வாய் தொடக்கம் 30 ஞாயிறு வரை

*(இவ்வாராதனைகள் பெரிய வெள்ளி 21ம் திகதியில் இருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது)*

**செய்தி வழங்குபவர்**



**போதகர்: மேர்வின் குணச்செல்வம்**

*ஸ்தாபகர், நிர்வாகி*

**(எக்காளத்தொனி சபை, இலங்கை)**

அன்பான தேவஜனமே.

கடந்தவாரம் நாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்த்து மரித்த நாளாகிய பெரியவெள்ளி உயிர்த்த ஞாயிறு தினங்களை முன்னிட்டு நடக்கும் ஆராதனைகள் பற்றி எழுதியிருந்தோம். ஒவ்வொரு மனிதனையும் ஜாதி, மத, பேதம் இல்லாமல் ஆண்டவர் இயேசு நேசிக்கிறார் என்பதையே கூறுகிறோம்.

இன்று மனிதனுடைய நிலை, தேசங்களின் நிலைமை, வல்லரசுநாடுகளின் ஆட்சிகளையும் ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொருவருக்கும் கேள்விகள் உண்டாகிக்கொண்டேயிருக்கிறது.

இன்று மனிதனுக்கு என்ன நடக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன் இருந்த சமாதானம் இன்று இல்லை. கேள்விப்படாத புதிய புதிய நோய்கள், வாலிபர்கள் பிள்ளைகள் பரிதாபமான மரணங்கள், அகால மரணங்கள். முன்பு அன்புக்குக் குறைவில்லை, இப்பொழுதோ அன்பே இல்லை. சுயநலம் பெருகிக்கொண்டு போகிறது. எவ்வளவு தூரம் அறிவு பெருகிறதோ அவ்வளவு தூரம் அழிவு பெருகிறது. மனநிலையிலும், உளவியல் ரீதியிலும் வெகுவாய்ப் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கணவன் / மனைவி / பெற்றோர் / பிள்ளைகள், சகோதரர் / சகோதரிகள், குடும்பங்களின் உறவுகள் மிகவும் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. முன்னொருபோதும் இல்லாதவண்ணமாக கோபங்கள், பொறாமைகள், எரிச்சல்கள், வன்கண்கள், போட்டிகள் பெருகிக்கொண்டே போகின்றன.

இவைகள் நமக்கு என்னத்தைக் கற்பிக்கின்றன? ‘இறுதிக்காலம் வந்தாச்சு’ என்பதை அறியவே!

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்த்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரைத் தெய்வமாக, கடவுளாக, மீட்பராக, சுகம் கொடுப்பவராக, ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விடுதலை தருபவராக விசுவாசித்து அவர் வழியில் நடப்பவர்களுக்கு மேற்கூறப்பட்டவை புதிதானதொன்றல்ல.

ஏனென்றால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்த்து சொன்னார், யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும் முடிவு உடனே வராது.

ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.

அநேகர் இடறலடைந்து, ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து, ஒருவரையொருவர் பகைப்பார்கள்.

அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோகும்.

ஏனெனில் உலகம் உண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் உண்டாயிருக்கும். (இவை வேதப்புத்தகத்தில் மத்தேயு 24ம் அதிகாரம் 6,7,8,10,12,21ம் வசனங்களில் உண்டு)

சந்தோசம், சமாதானம், ஆறுதல், அமைதி அமைந்த ஓர் இராஜ்யம் அமைக்க ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வருகிறார்.

**இந்த இராஜ்யத்தில் பங்கடைய தீவிரமாய் ஓடிவாருங்கள்**
**ஓடிவா மகனே... ஓடிவா மகளே...**
**எப்படிப்பங்கடையலாம்? விடையைக்காண...**
**‘இயேசு அழைக்கிறார்’**

## EGLISE EVANGELIQUE DE SION

## சீயோன் சுவிசேஷ சபை

## பாரிஸ் - பிரான்ஸ்

**N°. D'ENREGISTREMENT: 1/00084**

**இடம்:**

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி மாலை 6 மணி
ஞாயிறு மாலை 4 மணிக்கு

## PORTE DE LA CHAPELLE

**215, Avenue du Président Wilson,**
**93210 La Plaine St-Denis.**

RER- B அல்லது D - Stade de France
Métro: Porte de la Chapelle இல் இருந்து
Bus: 153/302 - 5 வது தரிப்பு. (Climat Hôtel முன்பாக)
Car: N1 (Porte de la Chapelle இல் இருந்து)

**இடம்:**

சனி 29 மாலை 6 மணி

## ST-OUEN

**41, Rue Landy,**
**93400 St. Ouen.**
**Métro: Mairie de St.Ouen (Ligne 13)**

தொடர்புகட்கு: 01 46 65 16 77
01 49 39 00 06, 01 64 00 09 13
01 46 07 88 67, 06 86 54 18 93

Pub.

# அன்னைபூபதி

## அவரை நினைவு கூர நெஞ்சம் கிளர்ந்து எழுந்த வார்த்தைகள்

வல்லூறுகளா வட்டமடித்தன?
கழுகுகளா கால் பதித்தன?
யானைகளா துவம்சம் செய்தன?
ஏணைகளில் எங்கள் பிள்ளைகள்
அழுதன.
வால் நட்சத்திரம் ஒன்று
வந்து வீழக்கண்டேன்.
பால் நிலா நின்று
பட்டுப்போகக் கண்டேன்.
கால்கள் தரித்தன
கைகள் மடங்கின
வால் உடனும் இல்லாதும்
வானரச்சேனை வாசல்வரக்கண்டேன்.
தானிருந்து பாட
தனித்திருந்து அழ
ஏனென்று கேட்ட
எவருமில்லாது ஏங்க
கூன் விழுந்த வாழ்வாய்
குறைமிகுந்த உடலாய்
நான் வாழ்ந்த நாடு
நாசமாகத்தான் போச்சு.
வல்லூறுகள் வட்டமடித்தன
கழுகுகள் கால்பதித்தன.
யானைகள் துவம்சம் செய்தன
இருந்தது ஒரு காலம்
இப்போது பார் இந்தக் கோலம்
எங்கள் வாழ்வு இனித்திருந்தது
தங்கக் கம்பிகளாய் நாமிருந்தோம்.
எதற்கு என்று இல்லை
ஏங்கி அழவும் செய்யவில்லை.
வாழ்விற்குள் வசந்தம் இருந்தது
வார்த்தைகளில் இனிமை இருந்தது
வாசலில் வண்ணக்கோலம் மிளிர்ந்தது
வாடைக்காற்றோ வந்துகுளிர்தந்தது.
மல்லிகை மணம் வீசியது
மாமரங்கள் பூத்துக்கிடந்தது
பலாக்களோ பிஞ்சுகள் வைத்தன
வாழையோ குலைகள் தள்ளின.
கேட்பதற்கு எவருமில்லை
கேள்வியில்லா வளம் வந்தது
பார்ப்பதற்கோ எவருமில்லை
பக்கம் பக்கமாய் பசுமை பொங்கின.
நம்மைச் சூழக் கடல் இருந்தது
நமக்கு அது வளம் தந்தது.
ஆண்டவனால் படைத்த கடல்
அத்தனையும் மீன்கள்
அத்தனை மீன்களையும்
அள்ளி வந்தவர் நாங்கள்
வேண்டியவர் வேண்டியவாறு
எய்துகின்ற மீன்கள்
வெங்கடலைக் குடைந்தெடுத்து
தந்தவர்கள் நாங்கள்.
வெட்கமில்லை துக்கமில்லை
வேதனை இல்லை வெப்பியாரம் இல்லை
சொர்க்கம் ஊரில் கண்டோம்
சோர்விலாது வாழக்கற்றோம்.
துக்கம் தொடர இல்லை
துன்பம் படரவில்லை.
அக்கம் பக்கம் அனைத்தும்
அன்பு சொரியக்கண்டோம்.
எவைதாம் இல்லை
என்னவொரு வாழ்வு அது!

வாழ்வின் வளம் சொல்ல
வார்த்தை இல்லை
தாழ்வு - வந்ததில்லை
தவிப்பு நேர்ந்ததில்லை.
சூழ உள்ள உறவுயாவும்
சுற்றி நின்று அன்பு செய்தன
ஏழை இருப்பினும் மனதில்
ஏழ்மை இருந்ததில்லை.
ஆழக் கிணறுதான் ஆயினும்
அதனிடையே ஊற்றுப் பெருகும்
நீளக்கடல்தான் எனினும்
நித்திலங்கள் கொழித்துவரும்.
சோலைப் புஷ்பங்கள்
சொகுசான வாழ்வுகள்
நீலவான் தொட்டு நீண்டு
நெடிதுயர்ந்த பனைகள்
ஆற்றுப் பெருக்கில்லை ஆயினும்
ஊற்றுப் பெருகியது - அதனால்
நாற்று முளைத்தது நற்பயன் தந்தது
காற்று வீசி கடும் வெய்யில் குறைந்தது.
இன்னும் என்ன சொல்ல?
ஏது சொல்ல?
வாழ்வினோர் வதை
வந்து சேர்ந்தது
தாழ்வினை அது
தமிழர்க்குத்தந்தது.
மீள வழியில்லை
மீட்பார் யாருமில்லை.
ஏனது என்றதொரு ஏக்கம்
எம்மிடையே எழுந்தது.
காலம் ஆகவில்லை

இருந்து விடல் முடியுமா?
தப்பாக ஏது செய்தோம்?
தமிழராய் பிறந்தது தானா!!
இல்லை என்றோர் சொல்
இதயத்திலிருந்து எழுந்தது
சொல்லைச் சொன்னவர்



சுறுசுறுப்பாய் எழுந்தனர்.
தொல்லை தவிர்த்தனர்
துயர் தனைப் போக்கினர்
எல்லை வகுத்தனர் - இது
எங்கள் தேசம் என்றனர்.
புலியாய்ப் புகுந்தனர்
போருக்கு எழுந்தனர்
பலியாய் ஆயினர்

### காலத்தைப் பதிவுசெய்து [illegible] எழுதுவது

கடும் சூறை வீசியது
நாளும் போகவில்லை
நமக்கது நேர்ந்தது -
ஊரே மிரண்டுபோனது
உலகே இருண்டு போயிற்று
வேரை இழந்து போனோம்
வேதனையில் மிதந்துபோனோம்
ஆரும் இங்கு வருது
அடிமைப்படுத்தும் காலம்
போரே வாழ்வாய் ஆயிற்று
போக்கிடம் இலாது போயிற்று!
யாரோடு நோவோம்
யார்க்கெடுத்துரைப்போம்
வேரோடும் வேரடி மண்ணோடும்
வீழ்ந்துவிட்ட வாழ்வதனை
யாரோடு நோவோம்
யார்க்கெடுத்துரைப்போம்
பார், நமக்கு வந்த
பதை பதைத்த வாழ்வை!
ஒப்பாரி எதற்கு
ஓலமிடல்தான் எதற்கு?
அப்பாவியா நாங்கள்?
அடிமைகளா நாங்கள்?
இப்பாரில் அடிமையாய்

படையாளப் போயினர்.
கிலிகொண்டவர் அல்லர்
கீரியாய் ஆவர் அல்லர்
எலியாய்ப் போனவர் அல்லர்
எழுந்தனர் வேங்கையாய் அவர்கள்.
வெற்றி கிட்டியது
வேறென்ன சொல்வது?
பற்றி நின்ற துயரனைத்தும்
பஞ்சாய்ப் பறந்தது.
சுற்றி நின்ற உறவுயாவும்
சொந்தமாய் ஆனது.
மற்றென்ன சொல்ல? இந்த
மாநிலமே நம் வசமாய் ஆனது!
சொல்ல என்ன இருக்கிறது என்றோர்
சொல் இருக்கிறதே -
வெல்ல வைத்த வாழ்வை
வெற்றி என்ற சொல்லை
சொல்ல வேண்டுமல்லவோ
சோர்வு வராது அல்லவோ?
மெல்ல இன்னொன்று சொல்லவா?
மேதினியை வியக்க வைத்தது
அல்லவா!!
நல்லது - நமக்கது உகந்தது.
நாட்டிற்கும் சிறந்தது.

கொல்ல வைத்த கொடுமைகளைக்
கொன்றுபோட்டது.
மெல்ல சொல்ல வந்த சேதி என்ன?
மேதினி வியக்கவைத்த சேதி என்ன?
சொல்லச் சொல்ல இனிக்குமா?
சுகத்தினை அது தருமா?
அன்னை பூபதி - அவர் பெயர்
தெரியாதோர் யார்? இளைஞர்கள்
இருபது வயது நிறைந்தவர்கள் - சற்றுக்
கூடும் குறையும் - போரைக்
கையிலெடுத்தோம். அவர்கள் புதிய
இரத்தம் அது - புயலாய்ப் புறப்படும்
அது-
போரை நிகழ்த்தியது அது - புதிய
இரத்தம்.
கல்வி கற்கும் காளையர்கள்
கருவி தூக்கி வந்தனர்
வெல்வதென்று சூளுரைத்து எம்
செல்வியர் எழுந்தனர் -
இவர்களிடையே இந்தக் கிழவிக்கு என்ன
வேலை - இளைஞர்களிடையே இந்தக்
கிழவிக்கு ஏதுவேலை?
போருக்குப் புறப்பட்டார். இருட்டோடு
வந்தபோது புட்டு அவித்துக்
கொடுக்கலாம் -
போருக்குப் புறப்பட்டவர் ஆயுதம் வாங்க
நகைகளை அடகு வைக்கக்
கொடுக்கலாம் - அதற்கு மிஞ்சி என்ன
செய்யலாம்?
செய்யலாம் - இளைஞரை இயக்கத்தில்
சேர்ந்தோரை ஒளித்து வைத்திருக்கலாம்
ஆமி வருகிறபோது ஐயோ என்று
குழறியோ - குசுகுசுத்தோ - இவர்களை
அவதானமடையச் செய்யலாம் -
எச்சரிக்கை செய்யலாம் - செய்வதற்கா
வேலை இல்லை? இன்னும் சொன்னால்
இராமர் அணைகட்ட அணில் செய்த
உதவிபோல் ஆயிரம் உதவி செய்யலாம்
- அதற்கு மிஞ்சி வேறென்ன செய்யலாம்?
அப்படித்தான் நாம் நினைத்தோம்?
முதியோர் ஆயுதம் தூக்கலாமா? மீசை
முறுக்கி எழலாமா? ஆக மிஞ்சினால்
அணிதிரளலாம் - அணியாய் ஊர்வலம்
போகலாம் - ஆயுதம் ஏந்தலாமா?
அன்னை பூபதி என்ன செய்தார்?
ஆயுதம் ஏந்தினார், அல்லர் - அதற்கும்
அப்பால் சென்றார் - அகிம்சையில்
வென்றார் - மகாத்மா காந்தி -
அகிம்சைக்கான மாமனிதர் என்று பேர் -
அவரையும் மிஞ்சியவர் அன்னை பூபதி
அன்னை என்பவர் யார்? அன்புக்காய்
தன்னைத் தருபவர் - அன்னைக்கு
இணையாய் ஒரு சொல் அவனியில்
உண்டா? ஆயினும் -இந்த அன்னை
அன்பைத் தந்தார் - அதற்கும் அப்பால்
தன்னைத் தந்தார் - தாய்த்
தேசத்திற்காய் தன்னைத் தந்தார் -
என்னவிதமான தியாகம் அது - தன்னைக்
கரைத்து - தானாய் உருகி
மெழுகுதிரியாகி என்ற சொல் - வெறும்
சொல்
அன்னை பூபதி என்பதே பெரும் சொல் -
தலைதாழ்த்தி வணக்கம் தர நாம்
ஒருப்படோம்
உடல் கிடத்தி, நெடுஞ்சாண் கிடையாக்
கிடந்து வணக்கம் சொல்வோம்.
அம்மா, அன்னையே - என் வணக்கத்தை
இதோ ஏற்றுக்கொள். உன் முன் சிறு
துரும்பு நான் எனினும், என்னால்
தரத்தக்கது இதுவே அன்னையே உன்
காலடியில் என் வணக்கம்.


# NÆRKØB -DKS Video

Danmark பதரேஸ்சியா
மாநகரில் (Nærkøb) நியர்குய்ப் DKSVideo
ஸ்தாபனத்தாரின் மற்றும் இரு சேவைகள்

இடமாற்றம் 01.09.99 முதல் NÆRKØB ரவல்ஸ் கு Mony Exchence

புதிய முகவரி

NÆRKØB ரவல்ஸ் 5
Vestcenter,Venvsvej-10, 7000 Freclericia, Danmark.
தொலைபேசி: 75915840 -75915841 / Fax: 75915842

# Nærkøb Travels®

*Nærkøb* Travels புதிய நவீன படுக்கை வசதிகள்
கொண்ட பஸ்சேவை - வாரம் 3 நாட்கள்

| | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark - London- | 540Kr | 890Kr |
| Danmark - Paris | 358Kr | 574Kr |
| Danmark - Hambvrg | 205Kr | 327Kr |

இலையுதிர்கால மலிவுப் பயணச்சீட்டுகள் October கடைசிவரை
பாரிஸ் சென்று அதே பஸ்சில் திரும்பிவர 398 Kr மட்டுமே
பிரான்ஸ் நாட்டில் இருக்கும் டிஸ்னிலான்ட்
(Disny Land Paris) சென்று திரும்பிவர 6.78 Kr மட்டுமே
2 வயதிற்குமேல் 12 வயதுக்குட்பட்டவருக்கு 598 Kr மட்டுமே
உடன் தொடர்புகொண்டு ஆசனங்களைப் பதிவு
செய்துகொள்ளுங்கள்: 75915840 - 75915004
Fax 75915842 Fax 75915806

# Nærkøb Money Transfer

15 நிமிடங்களுக்குள் உங்கள் பணத்தை
அன்றைய வங்கி மதிப்பின்படி உலகில் எந்த
இடத்துக்கும் கொடுக்கவோ/
பெற்றுக்கொள்ளவோ முடியும்.
இந்த Money Exchange அரச அங்கீகாரம் பெற்ற
ஒரு நிறுவனம் என்பதை மிக மகிழ்ச்சியுடன்
அறியத்தருகிறார்கள்.

**இவ்வாரம் முதல் Okotober 30th திகதி வரை**
**மலிவான விமானப் பயணச்சிட்டுக்கள்.**
Copenhagen - Colombo - **3,200 Kr**
மட்டும் **(Tax 165 Kr)**
Copenhagen - Colombo - India
(திருவனந்தபுரத்திற்கு) -
**3800 Kr + Tax 185 kr**

# சுவிசில் அன்னைபூபதி எழுச்சிவிழா

இந்திய வல்லாதிக்கத்திற்கெதிராக பூகம்பமாக எழுச்சிகொண்ட பூபதித்தாயின் 12ம் ஆண்டு நினைவு தாங்கிய எழுச்சிவிழா சுவிசிலுள்ள தூண் நகருக்கு அருகிலுள்ள கைம்பேர்க் (Heimberg) பகுதியில் 15.04.2000 அன்று நடைபெற்றது. வெற்றிமேல் வெற்றியைக் குவித்து தமிழீழ எல்லைகளை நிலைநிறுத்திவரும் ஓயாத அலைகள்-3 வீரச்சமரில் விதையான மாவீரன் மன்மதனின் தந்தை நாகேந்திரன் தேசியக் கொடியை ஏற்றிவைக்க, காவிய நாயகர்களான மாவீரர்கள், பொது மக்களுக்கான அமைதி வணக்கம் இடம்பெற்றது. மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி சிவநேசன் ஈகைச்சுடரை ஏற்றிக்கொள்ள, பாடசாலை மாணவர்கள் முதலில் அன்னைக்கு மலர்வணக்கம் செய்துகொண்டனர். பின்னர் மண்டபம் திரண்டிருந்த மக்களும் தங்கள் தாயக விடியலுக்கான தாய் பூபதி உருவப்படத்திற்கு மலர்வணக்கம் செலுத்திக் கொண்டனர்.



தூண் வட்டநிலா, பேர்ண் தமிழ்வித்தியாலயம் தூண், அன்னைபூபதி ஆகியவற்றின் நடனங்கள் சிறப்பாக இருந்தன. விடுதலை உணர்வை வெளிக்காட்டின. பேர்ண் தமிழர் இல்ல மாணவிகளின் எழுச்சி கீதங்கள் ஒரு முன்னெடுப்பாக அமைந்தன.

வட்டநிலா மாணவர்களின் வயலின் இசை குறிப்பிடும்படியாக மக்களைக் கவர்ந்துகொண்டது. சிறுவயதினராக இருந்த போதிலும் கலைவெளிப்பாடாக அவர்கள் வயலின் இசையில் விரல்களைத் தவழவிட்ட விதம் பிரமாதம்.

தற்போது புலம்பெயர் தேசங்களில் எதிர்நோகப்படும் வளர்ந்துவரும் எமது சந்ததியின் பிரச்சினைகளை மையப்படுத்திய பட்டிமன்றம் சுவையான விவாதத்தோடு தரமான கருத்துக்களையும் குவித்தது. 'புலம்பெயர் சிறார்களின்வளர்ச்சிக்கு பாடசாலைச்சூழலே காரணம்' என திருமதி அனுஷா சற்குணநாதன், கிருஷ்ணா அம்பலவாணர் வாதிட்டுக்கொண்டார். இல்லை பெற்றோரை உள்ளடக்கிய வீட்டுச் சூழலே காரணம் என உதய பாரதிலிங்கம், வல்வை சுயேன் தங்கள் வாதங்களை முன்வைத்தனர். முடிவாக இரண்டுமே தேவை, இருந்தும் பெற்றோர்களின் கண்காணிப்பு அவசியம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டிருந்தது.


இந் நிகழ்வில் சிறப்புரையாற்றிய கலைபண்பாட்டுப் பொறுப்பாளர் 'தேவை கருதிய ஆதரவுக் கருத்துடன் நிதானமாக வெற்றி படைத்துவரும் எமது போராட்டம் அடைந்த வரலாறு காணாத மாறுதலையும், அதற்காகக் கிடைத்த ஒப்பற்ற தலைமையையும் பற்றி மக்கள் முன் எடுத்துரைத்தார். சின்னஞ்சிறு பேர்ண் தமிழர் இல்ல மாணவர்களை வைத்து 'நிலவைத்தேடி' என்னும் நாடகத்தை அருமையிலும் அருமையாக இயக்கிக்கொண்டார் விரிவுரையாளர் ஆதவன் ஆசிரியர் அவர்கள். இந்நாடகம் சொந்த நிலமின்றி, சொந்த பந்தமின்றி அடித்துச் செல்லப்படும் குருவிக்கூட்டத்தினூடாக ஒரு இனத்தின் பூர்வீக நிலையை வெளிப்படுத்திக்கொண்டது. ஜேர்மன் சுவிஸ் கலைஞர்கள் இணைந்து வழங்கிய வாத்திய இசை மீட்டலும் நன்றாக இருந்தது; வரவேற்பைத் தட்டிக்கொண்டது. அன்னை பூபதியின் கதையை நாட்டிய நாடகமாக வழங்கிக்கொண்டனர் பேர்ண் தமிழர் இல்ல மாணவிகள். அமைதியான கொடியிறக்கத்துடன் சிறப்பாக நடந்தேறிய அன்னையின் எழுச்சிவிழாவை செல்வி சுதர்சினி உமாதேவன் சிறந்த சொல்லடக்கங்களைக் கையாண்டு அறிவிப்புச் செய்து மேலும் சிறப்பாக்கிக்கொண்டார்.



– பொன். தாமோதரம்.

# தமிழர்களை நாடு கடத்தப்படுவதை எதிர்த்து ஊர்வலம்

ஜேர்மனியிலிருந்து சிறீலங்காவுக்கு தமிழ் அகதிகளை நாடு கடத்தவேண்டாம் எனக்கோரி டோட்முண்ட் நகரில் 15.04.2000 சனியன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.




இதனை பிறேமன், டோட்முண்ட் மனித உரிமை மீறல் அமைப்புகளுடன் இணைந்து தமிழர்கள் நடாத்தினர். ஊர்வலம் டோட்முண்ட் பிரதான புகையிரத நிலையத்தின் முன் ஆரம்பித்து நகரின் மையப்பகுதியில் முடிவடைந்தது. ஏராளமான பொதுமக்கள் நடமாடும் பகுதியில், ஊர்வலத்தினர் மனிதக்கொடுமை புரியும் சிறீலங்காவுக்கு தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பவேண்டாம் எனக் கோசமிட்டனர். ஆனாலும் ஊர்வலத்திற்கு எதிர்பார்த்தளவு தமிழர்கள் வரவில்லையென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## புகலிட நிகழ்வுகள்

# மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம்

மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த 2ம் திகதி Yeading Southalல் நடைபெற்றது. மதியம் ஒரு மணிக்கு அமைதி வணக்கத்துடன் போட்டிகள் ஆரம்பமாகின. இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய E-17 கழகமும் பிளாசெட் (Plashet) கழகமும் விறுவிறுப்பாக மோதிய போதும், பிளாசெட் அணி ஒரு கோலைப்போட்டு 1:0 என்ற அடிப்படையில் வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.

பல நூற்றுக்கணக்கானவர்கள் இப்போட்டிகளைக் கண்டு இரசித்தனர். வெற்றி பெற்ற கழகங்களுக்கு இங்கிலாந்து அணியின் முன்னாள் விளையாட்டு வீரரான Mr. Neil Webb அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கி கௌரவித்தார்.







பாரிஸ் லாசப்பலில்
KTC CHANGE
193 rue du Fg.St.Denis, 75010 Paris
M°: Gare du Nord/La Chapelle - Tel: 42 05 41 36
★ எந்தவித கொமிசனும் இல்லாமல் உள்நாட்டு – வெளிநாட்டு நாணயங்களை மாற்றீடு செய்வதற்கும்
★ தங்க நாணயங்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்கும்
நங்கையர் மனங்கவரும் நல்ல தங்க நகைகளை நம்பிக்கையோடு றெடிமேட்டாகவும் செய்து பெற்றுக்கொள்ள
கே.ரி.சி. ஜூவல்ஸ்
Pub

# வட துருவத்தில் எழுச்சித் தமிழ் விழா!

தமிழீழச் சுதந்திரப் போராட்டத் தியாகி அன்னை பூபதி அவர்களின் நினைவு தினத்தையும், அன்னை பூபதி கல்விக் கூடத்தின் 8வது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் அன்னை பூபதி கல்விக் கூடத்தினரால் முத்தமிழ் விழா சித்திரைமாதம் 1ம் திகதி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சிறப்பு விருந்தினர் உயர் திரு. போர்ட் போல்க்க பிறட்றிக்சன் அவர்களுடன், பிரதம விருந்தினர் உயர் திரு.பேராசிரியர் நடராஜா சிறீஸ்கந்தராஜா அவர்கள் இணைந்து குத்துவிளக்கேற்ற நிகழ்ச்சிகள் வழமைபோல் குறித்த நேரத்திற்கு ஆரம்பமாகியன.

தாயக மீட்புப்போரில் கலந்து வானுறையும் இறையுடன் இரண்டறக் கலந்திட்ட மாவீரர்கட்கும் சுதந்திரப் போரில் உயிர்நீத்த நம் தேச மக்களுக்குமான அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து கல்லூரிக் கீதம் இசைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்ச்சிகளான பாலர் பிரிவினர் பங்குகொண்ட, 'பச்சைக் கிளியே வா வா!'. 'அம்மாவுக்கு வணக்கம்... அப்பாவுக்கு வணக்கம்.' 'சிங்கத்தின் வீட்டில் கொண்டாட்டம்,' 'புள்ளி புள்ளி மானே' பாடல்காட்சிகளில் பங்குகொண்ட அனைத்துக் குழந்தைகளும், தாளம்தப்பாது பாடி ஆடியது நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களின் கடின உழைப்பைக் காட்டியது.

ஆரம்ப வகுப்பு மாணவர்களின் அற்புதமான நடிப்பில், தரமான ஒப்பனையுடன் கூடிய' கோணற் புளிய மரத்திலே, வயற்காட்சி, அம்மா அம்மா வந்திடுவாய்' பாடல் காட்சிகளைத் தொடர்ந்து முதலாம் வகுப்பு மாணவர்கள் கலந்துகொண்ட 'பட்டணத்தைப் பார்க்கப்போகும், பள்ளிக்குச் செல்வோம்' ஆகிய இரு நிகழ்ச்சிகளும் பார்வையாளர்களின் பாராட்டுதல்களைப் பெற்றன. இரண்டாம் வகுப்பு மாணவர்கள் பங்குபெற்ற 'கும்மியடிங்கடி கும்மியடிங்கடி' கும்மிப்பாட்டும், 'வர்ணக் கோலங்கள் ஆடிடுவோமே' கோலாட்டப்பாடலும் ரசிகர்களைத் தாளம்போட வைத்தன.

அச்சமில்லை அச்சமில்லையென ஆர்ப்பரித்து வந்த இளஞ் சிங்கங்களைத் தொடர்ந்து, நான்காம் வகுப்பு மாணவர்களின் அட்டகாசமான நடிப்பில் அமைந்த 'மறுபிறவி' குறு நாடகம் நாடகப் பிரியர்களிற்குப் பெருவிருந்தாய் அமைந்தது. மூன்றாம் வகுப்பு மாணவர்களின் 'மண்ணை நம்பி உழுதுவைத்து' கிராமிய இசைவடிவில் உழவுத் தொழிலின் அனைத்துப் பரிமாணங்களையும் சொற்ப நேரத்தில் அழகாகப் படம் பிடித்துக் காட்டியது. தொடர்ந்து 'கட்டுமரம்கட்டியல்லோ' இசைச்சித்திரம் பார்வையாளர்கள் அனைவரிற்கும் தமிழீழத்தின் நீல நதிக் கரையோரம் உலாவிவந்த உணர்வுகளைத் தந்தது. நான்காம் வகுப்பு மாணவர்களின் நடிப்பில் உருவான அறியாமை இருள் குறு நாடகத்தில், 'தற்பெருமை, ஆணவம் கொண்டவர் முடிவில் அவமானத்தையும், அழிவையுமே பெற நேரிடும்' என்பதனை நகைச்சுவையுடன் மாணவர் மனதைத் தொடும் வகையில் அழகாகக் கையாளப்பட்டிருந்தது.

இடைவேளையைத் தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்திற்குத் தலைமை தாங்கிய கல்லூரி அதிபர் சிவபாலசிங்கம் சிவதாஸ் அவர்கள் உரையாற்றுகையில், உயிர் தமிழிற்கு உடல் மண்ணிற்கு என்றவரெல்லாம் ஓடி ஒளிந்தபோதும், தமிழிற்காக, தமிழருக்காக, தான் கொண்ட கொள்கைக்காக தன் உயிர் தந்த அன்புத் தாயவள் அன்னை பூபதியின் கனவு நனவாகும் நாள் வெகுதூரத்தில் இல்லை என பார்வையாளர்களின் பலத்த கரகோசத்தின் மத்தியில் கூறினார்.

நோர்வேயில் தமிழ், கலை, கலாச்சாரப் பணியாற்றிவரும் ஆர்வலர்கட்கு ஆண்டுதோறும் அன்னை பூபதி, விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்த அதிபர் அவர்கள், இவ்வாண்டின் விருதினை தமிழ் முரசம் வானொலியின் சிறுவர் நிகழ்ச்சித் தயாரிப்பாளரான திரு. நிரஞ்சன் அவர்களிற்கு வழங்கினார்.

பிரதம விருந்தினராக் கலந்துகொண்ட பேராசிரியர் நடராஜா சிறீஸ்கந்தராஜா அவர்கள் உரையாற்றுகையில், தமிழ் மக்களை வேரோடு அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் சிங்களவர்கள் முழுமூச்சாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இந் நேரத்தில் நாங்கள் இங்கே கல்விக் கூடங்களையும், மத வழிபாட்டுத் தலங்களையும் அமைத்தால் மட்டும் போதாது. இளஞ் சந்ததியினர்க்கு எமது வரலாறு, பண்பாடு, கலை கலாச்சாரங்களை உணர்வு பூர்வமாகக் கற்பிக்க வேண்டும் என்றார். இங்கு நாம் தலைநிமிர்ந்து வாழவேண்டுமாயின் அங்கே எமக்குத் தனி நாடொன்று இருக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், உலகமே வியந்து பாராட்டும் தலைமை எங்களது, நாம் யாவரும் எம் பொறுப்புக்களை மீளாய்வு செய்தல் காலத்தின் கட்டாயமென்றார்.

தொடர்ந்து கல்லூரியில் நடைபெற்ற பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி, உறுப்பெழுத்துப்போட்டி, இந்து சமயப் பரீட்சை ஆகியவற்றில் பரிசு பெற்றவர்களிற்கு பிரதம விருந்தினர் அவர்கள் பரிசில்களை வழங்கினார்.



'வால் து வாஸ்' பகுதியில் குசன்வில், ஆர்ஜென்தெயில், சேர்ஜி, சார்சல் நகரங்களில் அமைந்துள்ள தமிழ்ச் சங்கங்களால் புலம்பெயர் நாடுகளில் தமிழ் பெற்றோர்கள் எதிர்நோக்கும் பொதுப்பிரச்சினையான 'பிரெஞ்சு நாட்டு கல்வித்திட்டமும் அதன் நடைமுறையும்' என்னும் தலைப்பில் கடந்த 01.04.2000, 02.04.2000 ஆகிய இரு தினங்களில் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரெஞ்சு கல்விச் சேவையில் நீண்ட காலம் சரித்திர பேராசிரியராக கடமையாற்றிய செவாலியே சுகிர்தராஜ் அவர்கள் உரையாற்றும்போது....

# தமிழீழ மக்கள் மருத்துவ நிதிக்காக 80000 பிராங்குகள்

தமிழீழ மக்கள் மருத்துவ நிதிக்காக, பாரிஸ் தமிழர் கல்வி நிலையம் வருடாவருடம் 'கலை மாலை' எனும் நிகழ்ச்சியை நடாத்தி வருகின்றது. இவ்வருடமும் 'கலைமாலை 2000' எனும் நிகழ்ச்சியை நடாத்தி 80,050 பிரெஞ்சு பிராங்குகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளித்துள்ளது.

கடந்த 16.04.2000 ஞாயிறன்று பாரிஸ் 'எத்தியன் மார்சல்' பகுதியில் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற்ற இக் கலைமாலை நிகழ்வு, மண்டபம் நிறைந்த மக்களுடன் நடைபெற்றது. மாலை நான்கு மணிக்கு தமிழீழ விடிவிற்காக தமது உயிர்களை அர்ப்பணித்த போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு விழா ஆரம்பிக்கப்பட்டது.

விழாவில் கல்வி நிலைய மாணவிகளின், நர்த்தனாலய மாணவிகளின், கலாலய மாணவிகளின் நடனங்களும், கல்வி நிலைய விளையாட்டுக் கழக நடனக்குழு, ஈழவர் நடனக்குழு, விழுதுகள் நடனக்குழு ஆகியவற்றின் மேலைத்தேய நடனங்களும் இடம்பெற்றன. தொடர்ந்து, ரி.தயாநிதி எழுதி இயக்கிய 'இரு துயரங்கள்' எனும் நாடகம் எமது மண்ணின் வாழ்வையும், புலம்பெயர் மண்ணின் வாழ்வையும் 'இரு துயரங்களாக' வெளிக்காட்டின. நாடகத்தின் முடிவில் மக்களிடம் இருந்து 4405 பிராங்குகள் சேகரிக்கப்பட்டு புனர்வாழ்வுக் கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து இடம்பெற்ற 'அன்புள்ள அப்பாக்கள்' எனும் நகைச்சுவைக் கதம்பம், இன்றைய யதார்த்த நிலையை தொட்டுநின்றதால் பார்வையாளர்கள் மத்தியில் பலத்த பாராட்டைப்பெற்றது.

புலம்பெயர் மண்ணில், விழாக்கள் என்ற பெயரில் உழைப்புக்கள் வீணடிக்கப்படும் நிலையில், தமிழ் மக்களின் உழைப்பில் இருந்து 'இத்தனை பெரிய தொகையை' ஒன்றுதிரட்டி, அதனை ஈழத்தில் மருத்துவ வசதிகளின்றி அல்லல்படும் மக்களுக்கு வழங்கிய பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்தின் முயற்சியை மனம்திறந்து பாராட்டலாம்.

- செந்தூரன்

## மாவீரர் நினைவு விளையாட்டு போட்டிகள் 2000

### பிரான்சில் நடைபெற்று முடிந்த மாவீரர் நாள்போட்டிகளின் முடிவுகள்

**கரப்பந்தாட்டம் ஓவர் முறையிலானது**

1ம் இடம்: வள்ளுவன் விளையாட்டுக் கழகம்
2ம் இடம்: காந்திஜி விளையாட்டுக் கழகம்
சிறந்த விளையாட்டு வீரன் – திரு. செல்வன் கார்த்திகேசு (காந்திஜி வி.க)

**கரப்பந்தாட்டம் செற்றப் முறையிலானது.**

1ம் இடம் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகம்
2ம் இடம்: பா.த.க. நி. விளையாட்டுக் கழகம்
சிறந்த விளையாட்டு வீரன் திரு.சூரி (புனித அந்தோனியார் வி.க)

**பூப்பந்தாட்டம் ஒற்றையர்**

1ம் இடம்: திரு. ராஜ்குமார்
2ம் இடம்: திரு.பாலன் (பாரிஸ் தமிழர் விளையாட்டுக்கழகம்)

**பூப்பந்தாட்டம் இரட்டையர்**

1ம் இடம்: திரு. பாலன் – திரு. தொம்சன் (பா.த.க.நி.)
2ம் இடம்: திரு. ராஜ்குமார் – திரு. சுரேன்

**பூப்பந்தாட்டம் பெண்கள்**

1ம் இடம்: செல்வி. ஜெனிபா
2ம் இடம்: செல்வி. பிரியா

**பூப்பந்தாட்டம் 15 வயதிற்கு கீழ்ப்பட்டோர்**

1ம் இடம்: செல்வன். கஜிபன் (பா.த.க.நி.வி.க.)
2ம் இடம்: செல்வன். திவாகர் (பா.த.க.நி.வி.க.)

*மாவீரர்நாள் விளையாட்டுப்பிரிவு – பிரான்ஸ்.*

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
(மக்கள் கடை அருகில்)
இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500–க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.
அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
திங்கள் முதல் - சனி வரை 09.00 – 22.00 மணி வரை
59, Rue Louis Blanc, 75010 Paris - Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42
அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு:
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், சேட்டிகள் மொத்தமாக வேற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்
Pub

சர்வதேச உயர்கல்வி நிறுவனம்
INSTITUT DES HAUTES ETUDES UNIVERSELLES
தமிழர் வித்தியாலயம்
75, rue Philippe de Girard, 75018 Paris - Tel: 01 40 05 11 16
Métro: Marx Dormoy அல்லது La Chapelle அல்லது Bus: 60, 65
இந்த ஆசிரியரிடம் 1984–1985ல் பிரெஞ்சு கற்றவர்கள், கல்விநிலையங்கள் நடாத்துகிறார்கள். பிரெஞ்சு படிப்பிக்கிறார்கள். மொழி பெயர்ப்பாளராகப் பணிபுரிகிறார்கள். பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்கிறார்கள். உரியவர்களிடம் உசாவிப் பாருங்கள். இதைமறைக்காய் உண்மை வெளிவரும்.
★ ஆரம்பம் ஆகும் கணினி பயிற்சி நெறிகள்
* Windows 95, 98, NT, M-S Dos, M-s Word, Page Maker
* Internet, E-mail, Web Side, C+, C++, HTML Front Page
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 01, 06.05.2000
பிரெஞ்சு வகுப்புக்கள் Le Cours de Français
* வாரநாட்கள்: காலை–மாலை வகுப்புக்கள் ➲❸ மாத கற்கை நெறி
* சனி–ஞாயிறு: பகல் –மாலை வகுப்புக்கள் ➲❻ மாத கற்கை நெறி
இதைவிட, கற்பவர்களின் நேரம்–தரம் என்பவற்றிற்கேற்ப குறுகிய காலத்தில் பேச – எழுத கற்றுக்கொள்வதற்கான தனி வகுப்புகளும் உண்டு.
நல்ல ஆங்கிலம் Good English
Toefl க்குத் தயார்செய்து பரீட்சைக்குத் தோற்ற ஒழுங்கு செய்யப்படும்.
டியூசன் வகுப்புக்கள் Soutien Scolaire (CP தொடக்கம் Terminal வரை)
ஒரு பாடம் வாரத்தில் இரு தடவைகள். வகுப்பில் படித்த பாடங்களை மீட்டு, வீட்டு வேலைகளைச் செய்வதற்கு உதவி செய்வது முதல் பாடநேரத்திலும், அடுத்து படிக்க இருக்கும் பாடங்களை முன்கூட்டியே தயார் செய்வது இரண்டாம் பாடநேரத்திலும் இடம்பெறுகிறது.
புதன், சனி: 14 மணி - 18 மணி. ஞாயிறு: 10 மணி - 13 மணி
இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்பதையும், கற்பிப்பதையும் தொழிலாக உடையவர்கள் என்பதை பெற்றோர்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.
பரதநாட்டியம், வயலின், மிருதங்கம், சங்கீதம், யோகாசனம்
ஆரம்பமாகும் புது வகுப்பு ★ நல்ல தமிழ்
ச.சச்சிதானந்தம் M.A. (10 பிரெஞ்சு, ஆங்கில நூல்களின் ஆசிரியர்)
Pub

# முதலாம் எலிசபெத்

முதலாம் எலிசபெத் அரசி இங்கிலாந்தின் வரலாற்றில் மிகச் சிறப்புவாய்ந்த ஆட்சியாளராகக் கருதப்படுகிறார். அவருடைய 45 ஆண்டு ஆட்சியில் பொருளாதாரச் செழிப்பும், இலக்கிய மலர்ச்சியும் ஏற்பட்டன; இங்கிலாந்து உலகக் கடலாதிக்க நாடுகளுள் தலையாய இடத்தைப்பெற்றது. ஆங்கிலேய அரசர்கள் வெறும் பொம்மையாக இராமல், உண்மையான அதிகாரம் செலுத்திவந்த அந்நாளில், இங்கிலாந்தின் பொற்காலச் சாதனைகளுக்கு எலிசபெத் அரசியும் முக்கிய காரணமாவார் என்பதில் ஐயமில்லை.

எலிசபெத் 1533–ல் இங்கிலாந்திலுள்ள கிரீன்விச்சில் பிறந்தார். அவருடைய தந்தையார் இங்கிலாந்தில் மதச் சீர்திருத்தத்தை நடத்திய எட்டாம் ஹென்றி மன்னராவார். எலிசபெத்தின் அன்னை ஹென்றியின் இரண்டாம் மனைவியான ஆன் பொலின், 1536-ல் தூக்குத் தண்டனை பெற்றாள். சில மாதங்கள் கழித்து பாராளுமன்றம், அப்போது 3 வயதாக இருந்த எலிசபெத்தை திருமணத்திற்குப் புறம்பாகப் பிறந்த பிள்ளையென்று அறிவித்தது. (ஆங்கிலேய கத்தோலிக்கர் பலர் அவ்வாறே கருதினர்.) நாடாளுமன்றம் இவ்வாறு ஒதுக்கிவைத்த போதிலும், எலிசபெத் அரண்மனையிலே வளர்ந்து, சிறந்த கல்வி பெற்றுவந்தார்.

எட்டாம் ஹென்றி 1547-ல் இறந்தார். அப்போது எலிசபெத்திற்கு 13 வயது, அடுத்த 11 ஆண்டுகளாக ஆட்சி செய்த ஆங்கிலேய மன்னர்கள் சிறப்புற ஆட்சி செய்யவில்லை. எலிசபெத்தின் சகோதரர் ஆறாம் எட்வேட் 1547 முதல் 1553 வரை ஆட்சி செய்தார். அவராட்சியில் அரசாங்கம் புரோட்டஸ்தாந்து சமயம் எனப்படும் மறுப்புச் சமயத்தையே பெரிதும் ஆதரித்து வந்தது. அடுத்த ஐந்தாண்டுகள் ஆட்சி புரிந்த முதலாம் மேரி அரசி போப்பாண்டவரின் மேலாண்மையை ஆதரித்து, ரோமன் கத்தோலிக்க சமயத்தை முந்திய நிலைக்கு உயர்த்த முயன்றார். அவரது ஆட்சியில் ஆங்கிலேய மறுப்புச் சமயத்தார் நசுக்கப்பட்டனர். அவர்களுள் ஏறக்குறைய 300பேர் கொல்லப்பட்டனர். (இதனால்தான் அரசிக்கு 'இரத்த வெறியுள்ள மேரி' எனும் வசைப் பெயர் வந்தது) எலிசபெத் கைது செய்யப்பட்டு அரச சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் அவர் விடுதலையான போதிலும், சிறிது காலம் அவர் உயிருக்கு ஆபத்து இருந்து வந்தது. மேரி (1558 இல்) இறந்ததும், 25 வயதுள்ள எலிசபெத் அரியணையேறினார். அப்போது இங்கிலாந்து மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

அப்போது இளம் அரசியைப் பல பிரச்சினைகள் எதிர்நோக்கி நின்றன. பிரான்சுடன் போர், ஸ்கொட்லாந்து, ஸ்பெயின் ஆகிய பகுதிகளுடன் பிணக்கு, எல்லாவற்றிற்கும் மேலாக இங்கிலாந்தில் நிலவிய சமயப் பிளவுகள் போன்ற பல பிரச்சினைகளை அவர் சந்திக்க நேரிட்டது.

இறுதியாக கூறப்பட்டதையே அவர் முதலில் தீர்க்க முயன்றார். எலிசபெத் பதவியேற்றதும் விரைவில் மேலாண்மைச் சட்டமும், ஒரு வழிபாட்டுச் சட்டமும் (1559) நிறைவேற்றப்பட்டன. இவை ஆங்கிலிக்க சமயத்தை இங்கிலாந்தின் அரசுச் சமயமாக நிறுவின. இதனால் மிதவாத மறுப்புச் சமயத்தினர் உளநிறைவடைந்தனர். ஆனால், பியூரிட்டான்கள் எனப்படும் தூய்மைச் சமயத்தினர் இன்னும் தீவிரமான சீர்திருத்தத்தை விரும்பினர். ஒருபுறம் பியூரிட்டான்களும் மறுபுறம் கத்தோலிக்கர்களும் எதிர்த்தபோதிலும், எலிசபெத் தமது ஆட்சி முழுவதும் 1559-ல் ஏற்படுத்திய சமரச இணக்கத்தை உறுதியாக நிலைநாட்டி வந்தார்.

ஸ்கொட்லாந்து மேரி அரசியின் நிலை சமயச் சூழலைச் சிக்கலாக்கியது. ஸ்கொட்லாந்தைவிட்டு வெளியேற்றப்பட்ட மேரி இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்திருந்தாள். விரைவில் எலிசபெத் அவளைச் சிறைப்படுத்தினார். எலிசபெத்தின் செயல் எதேச்சாதிகாரமான செயலன்று. மேரி ஒரு கத்தோலிக்கர். மேலும் எலிசபெத்திற்குப் பின் இங்கிலாந்தின் அரியணையேறும் உரிமையுடையவர். ஒரு புரட்சி அல்லது அரசியல் கொலை நிகழுமென்றால், இங்கிலாந்தில் திரும்பவும் கத்தோலிக்க அரசி பதவியேற்க நேரிடும். மேரி சிறையிலிருந்த 19 ஆண்டுகளில் எலிசபெத்திற்கு எதிராகப் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. அவற்றிற்கு மேரியும் உடந்தையாக இருந்ததாகப் போதிய சான்றுகள் இருந்தன. ஆகவே, இறுதியில் 1587 இல் மேரி கொல்லப்பட்டாள். எலிசபெத் விருப்பமின்றி மேரியின் கொலைத் தண்டனை ஆணையில் கையொப்பமிட்டார். எலிசபெத்தின் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் பலரும் மேரி விரைவில் தூக்குத் தண்டனைபெற வேண்டுமென விரும்பினர்.

சமயப் பூசலினால் எலிசபெத்திற்கு ஆபத்துகள் ஏற்பட்டன. 1570 இல் ஐந்தாம் பயஸ் போப்பாண்டவர் எலிசபெத்தைக் கத்தோலிக்கச் சமயத்திலிருந்து விலக்கி, அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக ஆணையிட்டார். 1596 இல் 13 ஆம் கிரகோரி போப்பாண்டவர் எலிசபெத்தைக் கொலைசெய்தல் பாவமன்று என்று அறிவித்தார். ஆயினும் அச் சூழ்நிலையினால் எலிசபெத்திற்கு நன்மைகள் ஏற்பட்டன. கத்தோலிக்க முடியாட்சி திரும்பவும் இங்கிலாந்தில் ஏற்படக்கூடுமென்று மறுப்புச் சமயத்தினர் அஞ்சினர். அவ்வாறு நிகழாதவாறு தடுக்கும் சிறந்த அரணாக எலிசபெத் விளங்கினார். ஆங்கிலேய மறுப்புச் சமயத்தினருள் பெருந்திரளானோர் அவரை ஆதரித்ததற்கு இது முக்கிய காரணமாக இருந்தது.



# உலக வரலாற்றில் பதிவானவர்கள்

எலிசபெத் அயல்நாட்டுக்கொள்கையைத் தூதாண்மைத் திறத்துடன் கையாண்டு வந்தார். அவர் 1560 லேயே எடின்பரோ உடன்படிக்கையைச் செய்தார். அதனால் ஸ்கொட்லாந்துடன் அமைதி ஏற்பட்டது. பிரான்சுடன் நிகழ்ந்துவந்த போரும் நிறுத்தப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவு வளர்ந்தது. ஆயினும் நாளடைவில் இங்கிலாந்து ஸ்பெயினுடன் போரிட நேர்ந்தது. எலிசபெத் போரைத் தவிர்க்க முயன்றார். 16ம் நூற்றாண்டில் கத்தோலிக்க நாடான ஸ்பெயின் போரார்வமுள்ளதாக இருந்ததால், ஸ்பெயினுக்கும் மறுப்புச் சமய நாடான இங்கிலாந்துக்கும் போர் நிகழ்வது தடுக்க முடியாததாக இருந்தது. நெதர்லாந்தில் ஸ்பெயின் ஆட்சிக்கு எதிராக ஏற்பட்ட கிளர்ச்சி அதற்கு ஒரு காரணமாக இருந்தது. டச்சுக் கிளர்ச்சியைத் தொடங்கியவர்கள் பெரும்பாலானோர் மறுப்புச் சமயத்தவர்; ஆகவே ஸ்பெயின் அக் கிளர்ச்சியை நசுக்க முயன்றபோது, எலிசபெத் டச்சுக்காரருக்கு உதவியளித்தார். எலிசபெத் போரை விரும்பவில்லையெனினும், ஆங்கிலேய மக்கள் பலரும், அரசியின் அமைச்சர்களும், நாடாளுமன்றமும் அவரைவிட மிகுதியாகப் போரார்வம் காட்டின. ஆகவே, 1580 இல் ஸ்பெயினுடன் போர் தொடங்கவே, எலிசபெத் ஆங்கிலேய மக்களின் பேராதரவைப் பெற முடிந்தது.

பல ஆண்டுகளாக எலிசபெத் இங்கிலாந்தின் கடற்படையை வலுப்படுத்திவந்தார். ஆயினும் ஸ்பெயின் மன்னரான 2–ம் பிலிப் இங்கிலாந்தின் மேல் படையெடுப்பதற்காக விரைவில் ஒரு பெரும் கப்பற்படையை உருவாக்கினார். 'ஆர்மெடா' எனப்படும் இக் கப்பற்படையில் இங்கிலாந்திடமிருந்த அளவிற்கு கப்பல்கள் இருந்தன. ஆயினும் அதில் கப்பலோட்டிகளின் எண்ணிக்கை குறைவு. மேலும், ஆங்கிலேயக் கப்பலோட்டிகள் சிறந்த பயிற்சி பெற்றவர்கள்; அவர்களுடைய கப்பல்களும் தரத்திலும் போர்த் தாக்குதலிலும் உயர்ந்தவை. 1588-ல் நடைபெற்ற பெரும் கடற்போரில் ஸ்பானிய ஆர்மெடா முற்றிலும் முறியடிக்கப்பட்டது. அந்த வெற்றியின் பயனாக, இங்கிலாந்து உலகில் மிகச் சிறந்த கடலாதிக்க நாடாக உயர்ந்தது. 20-ம் நூற்றாண்டு வரை இங்கிலாந்து இவ்வுயர் நிலையிலேயே இருந்தது.

எலிசபெத் எப்போதும் நிதிநிலை பற்றிக் கவனமாக இருந்தார். அவரது ஆட்சியின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் முடியரசின் நிதிநிலை நன்றாக இருந்தது. ஆனால். 'ஸ்பெயினுடன் நடந்த போரினால் பெரும் செலவு ஏற்பட்டது. ஆகவே, அவருடைய ஆட்சியின் இறுதி ஆண்டுகளில் கருவூலநிலை மோசமாக இருந்தது. ஆயினும், அரசாங்கம் வறுமையுற்றபோதிலும், நாடு, அரசியார் பதவியேற்றபோது இருந்ததை விட மிகச் செழிப்பாக இருந்தது.

எலிசபெத்தின் 45 ஆண்டு ஆட்சிக் காலம் (1587 -1603) இங்கிலாந்தின் பொற்காலம் எனப்படும். வில்லியம் ஷேக்ஸ்பியர் உட்பட இங்கிலாந்தின் புகழ்மிக்க எழுத்தாளர் சிலர் அக்காலத்தில் வாழ்ந்தனர். இதன் பெருமை ஓரளவு எலிசபெத்தைச் சாரும். லண்டன் உள்ளாட்சித் துறை அதிகாரிகள் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் எலிசபெத் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை ஆதரித்தார்.

எலிசபெத் காலத்தில் ஆங்கிலேயர் ஆய்வுப் பயணங்களையும் தொடங்கினர். ரஷ்யாவுக்குப் பயணங்கள் தொடங்கின. மார்ட்டின் ட்ரோபிஷர், ஜான் டேவிஸ் ஆகியோர் தூரகிழக்கு நாடுகளுக்கு ஒரு வடமேற்கு வழியைக் கண்டுபிடிக்க முயன்றனர். சர் பிரான்சிஸ் டிரேக் உலகைச் சுற்றிக் கடற் பயணம் செய்தார். வழியில் கலிபோர்னியாவில் தங்கினார். வட அமெரிக்காவில் ஆங்கிலேயக் குடியேற்றங்களை நிறுவ (சர் வால்ட்டேர் ராலே போன்றவர்களால்) முயற்சிகள் நடைபெற்றன. ஆனால், அவை வெற்றி பெறவில்லை.

எலிசபெத் அறிவாற்றல் உள்ளவராகவும், கூர்மதியுடைய அரசியல் வாதியாகவும் இருந்தார்; எதிலும் எச்சரிக்கையாக நடந்துவந்தார்; பிற்போக்குக் கொள்கையுள்ளவராகவும் இருந்தார். தேவையான மனவுறுதியுடனிருந்த போதிலும், போரையும் பழியையும் வெறுத்தார். தம் தந்தையைப் போலவே நாடாளுமன்றத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக அதனுடன் இணைந்து பணியாற்றி அரசியல் அதிகாரம் செலுத்தி வந்தார். அவர் திருமணம் செய்து கொள்ளவேயில்லை; பொது மேடையில் தாம்கூறி வந்ததுபோல் அவர் கன்னியாகவே வாழ்ந்திருக்கக் கூடும். ஆயினும் அவர் ஆட்வரை வெறுத்தாரெனக் கூறுவது தவறாகும். அதற்கு மாறாக, அவர் ஆடவரை விரும்பினார் என்பதும், ஆடவருடன் இருப்பதில் மகிழ்ச்சியடைந்தார் என்பதும் வெளிப்படை. எலிசபெத் தக்க அமைச்சர்களைத் தெரிந்தெடுத்தார். 1558 முதல் அவர் 1598-ல் இறக்கும் வரை அவருடைய முக்கிய அறிவுரையாளராக இருந்தவர் வில்லியம் செசில் (பர்க்லி பிரபு, அவருடைய சாதனைகளுக்குப் பெரிதும் காரணமாக இருந்தார்.)

எலிசபெத்தின் முக்கிய சாதனைகளைக் கீழ்க்கண்டவாறு சுருக்கமாகக் கூறலாம்; முதலாவது, மதச் சீர்திருத்த காலத்தின் இரண்டாம் பருவம் முழுவதும் அவர் இங்கிலாந்தை இரத்தக் களரியிலிருந்து காத்தார். (இதற்கு மாறாக ஜேர்மனியில் 20 ஆண்டுப் போர்களின்போது (1618 - 1648) 25 சதவீதம் மக்கள் உயிரிழந்தனர்) ஆங்கிலேயக் கத்தோலிக்கருக்கும் ஆங்கிலேய மறுப்புச் சமயத்தாருக்குமிடையே (புரோட்டஸ்தாந்து) நிலவிய சமயப் பகையை ஓரளவு தணித்து, நாட்டை ஒற்றுமைப்படுத்துவதில் வெற்றி கண்டார். இரண்டாவது, எலிசபெத்தின் காலம் எனப்படும் அவருடைய 45 ஆண்டு ஆட்சி உலகின் பெரிய நாடுகளில் ஒன்றாகிய இங்கிலாந்தின் பொற்காலம் எனப்படுகின்றது. மூன்றாவது, அவருடைய காலத்தில் தான் இங்கிலாந்து ஒரு முக்கிய அரசாக உருவாகி, நூற்றாண்டுகளாகப் பேரரசாகத் திகழ்ந்தது.

**உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்களை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன.**

டென்மார்க்கில் இருந்து முதல் முறையாக வெளியாகும் TeleCard

Universal Tele Card

எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் இன்னும் ஏராளமான நாடுகளுக்கும் அதிக நேரங்களுடன் வெளிவருகிறது Universal Tele Card என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறார்கள் DKS-NÆRKØB ஸ்தாபனத்தினர்.

மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்யவிரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

Korskaervej - 104, 7000 Fredericia-DK

Tlf: 75915804 - 75915805 - Fax: 75915842

எம்மிடம் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு டென்மார்க் நாட்டின் அங்கீகாரத்துடன்


★ பற்றுச்சீட்டு வழங்கப்படும்.


★ அத்துடன் UNIVERSAL Tele Card தொடர்புகளுக்கு ஏற்படும் இடையூறுகளை உடனுக்குடன் கவனிக்க இதற்கான தொழில்நுட்ப அலுவலகம் பரடோ நகரில் காத்திருக்கிறது என்பதை உத்தரவாதப்படுத்துகிறார்கள் DKS நியர்குமிப் ஸ்தாபனத்தார்.




Pub

# கடும்போராட்டத்தின் மத்தியில் பாகிஸ்தான் வென்றது





மேற்கிந்திய தீவுகளுக்குப் பயணம் செய்துள்ள சிம்பாவே, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளும் கலந்துகொண்ட ஒரு முத்தரப்பு ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் மேற்கிந்தியத் தீவுகளின் கைகள் ஓங்கியிருந்தன. இதன்விளைவாக இவ்விரு நாடுகளுமே மூன்று போட்டிகளைக் கொண்ட இறுதிக்குத் தேர்வாகின. முதல்போட்டியில் பாகிஸ்தான் 17 ஓட்டங்களால் வெற்றிபெற இரண்டாவது போட்டியை மேற்கிந்தியத்தீவுகள் 60 ஓட்டங்களால் வெற்றிபெற்று போட்டியில் சமநிலையை ஏற்படுத்திக்கொண்டன. இதனால் மூன்றாவது இறுதிப் போட்டி இரு அணிகளுக்கும் அதிமுக்கியத்துவமாகியது. 23.04.2000 அன்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகளை சுழற்றிப்போடுவதில் பாகிஸ்தான் சுழல்பந்து வீச்சாளர்கள் விசித்திரமாக வீச்சை மேற்கொண்டு 114-க்குள் காலியாக்கிவிட்டனர். இதற்கு உந்துசக்தியாக முஸ்ராக் அகமட் 4 விக்கட்டுகளைச் சாய்த்தார். பதிலுக்காடிய பாகிஸ்தான் சுலபமாக வென்றுவிடும் என எதிர்பார்த்தபோது மேற்கிந்திய ஆரம்பவீச்சாளர்கள் அம்புறூஸ், கிங் துல்லியமாக சுழன்றடித்து பாகிஸ்தானுக்கு சோதனையை ஏற்படுத்தினர்.

ஆனாலும் நிதானமாக மெதுமெதுவாக இலக்கைநோக்கி இம்சாம் உல்ஹக் நகர்த்தி இறுதியில் 45.1 ஓவரில் 6 விக்கட் இழப்புடன் நிறைவேற்றியும் வைத்தார். முடிவில் பாகிஸ்தான் 2:1 என்று வென்று தொடரை தன்வசமாக்கியது.


இப்போட்டியின் நாயகனாக முஸ்ராக் அகமட்டும் போட்டித் தொடரின் வீரனாக இம்சாம் உல்ஹக்கும் தெரிவுசெய்யப்பட்டனர். அண்மையில் சார்ஜா கிண்ணத்தை வென்ற பாகிஸ்தான் இப்போது மேற்கிந்திய மண்ணிலும் வெற்றிபெற்றுத் தனது ஒருநாள் போட்டிகளுக்கான பழைய நிலையை எட்டிக் கொண்டிருப்பதாகவே தெரிகின்றது.

# அவுஸ்திரேலிய அணித்தலைவரின் பொதுத்தொண்டு



ஒவ்வொரு விளையாட்டிலும் பணத்தை உழைப்பதைக் காட்டிலும் வேறு எந்த வழியில் செல்வத்தைக் கூட்டலாம் என்றெல்லாம் வீரர்கள் கங்கணம்கட்டி நிற்கும்போது விதிவிலக்காக செயல்படுகின்றார் அவுஸ்திரேலிய கிரிக்கட் அணித்தலைவர் ஸ்ரிவ் வோவ். கல்கத்தா அருகில் உள்ள பேரக்பூர் என்றதும் தொழுநோய் குழந்தைகள் காப்பகம் உதயன் அமைப்பு நினைவுக்கு வந்துவிடும். இந்த அமைப்புக்கு உதவுவதில் வோவ்வுக்கு அலாதி பிரியம். 1998 இல் அவுஸ்திரேலிய அணி இந்தியா வந்தபோது அணியின் வெற்றியூக்கத்தை வழியமைப்பதைக் காட்டிலும் தொழுநோய் குழந்தைகளை வெற்றி பெறப் பண்ணுவதிலே தனது முழுக்கவனத்தையும் செலுத்தினார் ஸ்ரிவ்வோவ். அப்போது குறிப்பாக பெண்களுக்கான நிவேதிதாபவனை உருவாக்க அடிக்கல் இட்டுவிட்டு அதனைத் திறந்துவைப்பதற்காக சென்றகிழமை இந்தியாவந்தார் அந்தப் பொதுத் தொண்டுக்காரன். இந்த வருகையை தொழுநோய்க் குழந்தைகள் மேம்பாட்டுக்கான நிதி திரட்டலிலும் இணைத்துக் கொண்டார் ஸ்ரிவ்வோவ். குழந்தைகளுடன் படம்பிடிப்பில் இணைந்து ஒரு குழந்தைக்கு 200 இந்திய ரூபாவீதம் பெரும் பணத்தைச் சேர்த்தார். கையெழுத்துப்போடல், ரீசேட், தொப்பி போன்ற விற்பனை ஊடாகவும் 20.85 இலட்சம் இந்திய ரூபாய்களைப் பெற்றுத் தனது பொதுத்தொண்டை மற்றவர்களுக்கு முன்னோடியாகக் காட்டியும் உள்ளார். உள்ளூர் வீரர்கள் பணத்தைத் தேடி அலையும்போது எங்கிருந்தோ வந்த ஸ்ரிவ் வோவ் காட்டிய அன்பும் பரிவும் இனியாவது உள்ளூர் வீரர்களை மாற்றுமா?

# கிணறுவெட்ட பூதம் வந்தகதை




கிரிக்கட் விளையாட்டையே பீடிக்கப்பட்டுள்ள புதிய புற்றுநோய் சூதாட்ட சுற்றுமாத்து. ஏற்கனவே பூகம்பமாய் உருவெடுத்த தென்னாபிரிக்க முன்னாள் அணித்தலைவர் குரானே விடயத்தை சல்லடைபோட்டு துருவப்பட்டுக்கொண்டிருக்க புதிய பூதம் ஒன்று கிளம்பியுள்ளது. அதாவது உலகக்கோப்பை போட்டிகளில் சூதாட்டம் நடைபெற்றதற்கான சான்றுகளை அடுத்தமாதம் சர்வதேச கிரிக்கட் கவுன்சில் கூட்டத்தில் வெளியிடுவேன் என தென்னாபிரிக்க கிரிக்கட் கட்டுப்பாட்டுச்சபை தலைவர் அலி வச்சர் கூறிவருகிறார். குறிப்பாக இது பாகிஸ்தான் வங்காளதேசம் சம்பந்தப்பட்டதாகவும் சூசகமாக கூறியுள்ளார். இதனை அவ்விருநாடுகளும் அடியோடு மறுத்துவிட்டன. ஆனால் வச்சரின் இந்த அறிவிப்பு கிரிக்கட் உலகில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# போட்டியை உருவாக்கிவிட்ட மக்லேறன்



இவ்வருடத்தின் நான்காவது கார்ஓட்டப் பந்தயம் (Formula 1) 23.04.2000 அன்று பிரித்தானியாவின் சில்வர்ஸ்ரோன் நகரில் நடைபெற்றது. முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்ற பெறாறி ஓட்டுநர் சூமாக்கருக்கு இப்போட்டி ஏமாற்றத்தையே ஏற்படுத்தியிருக்கிறது. சென்ற வருடம் இங்கு நடந்த போட்டியில்தான் சூமாக்கர் விபத்துக்குள்ளாகி பல போட்டிகளையும் தவறவிட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தப்போட்டியில் மக்லேறன் ஓட்டுநர்கள் முதல் இரு இடங்களையும் பெற்று பெறாறிக்கெதிரான போட்டியை உருவாக்கி நிற்கிறார்கள். குல்தாட் முதலாம் இடத்தையும் தற்போதைய சம்பியன் ஹக்கினன் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொள்ள பெறாறி ஓட்டுநர் சூமாக்கருக்கு மூன்றாம் இடமே கிடைத்துள்ளது. முதல் முறையாக இவ்வருடத்தில் மாற்றத்தை ஏற்படுத்திய இம்முடிவால் இனிவரும் போட்டிகளில் பெறாறி, மக்லேறன் இரண்டுமே கடுமையாகப் போராடவேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது. இப்போட்டியின் பின் ஓட்டுநர்கள், கார்களின் புள்ளிநிலை வருமாறு:

| ஓட்டுநர்கள் | புள்ளிகள் |
|---|---|
| 1. சூமாக்கர் | 34 |
| 2. குல்தாட் | 14 |
| 3. ஹக்கினன் | 12 |
| 4. பார்ச்சிலோ | 9 |
| 4. றோல்வ் சூமாக்கர் | 9 |

| கார்கள் | புள்ளிகள் |
|---|---|
| 1. பெறாறி | 43 |
| 2. மக்லேறன் | 26 |
| 3. வில்லியம்ஸ் | 12 |
| 4. பெனற்றன் | 8 |

தொகுப்பு: பொன். தாமோதரம்

# செஞ்சோலைக் கிண்ணத்தை ஈழவர் கழகம் கைப்பற்றியது

ஈழத் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் - பிரான்ஸ் ஆதரவில் செஞ்சோலைப் பராமரிப்புச் சிறுவர் நிதிக்காக தமிழ்ப் பெண்கள் அமைப்பு பிரான்ஸ் நடாத்திய 5 பேர்கொண்ட உள்ளரங்க உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி 02.04.2000 அன்று Porte de Lachapele-ல் உள்ள உள்ளரங்கு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளில் பங்குபற்றிய கழகங்கள் பின்வருமாறு: பாடும்மீன் சிவப்பு அணி; மஞ்சள் அணி; ஈழவர் மஞ்சள் அணி; சிவப்பு அணி; யாழ்ரன் வெள்ளை அணி; நீல அணி; தமிழர் விளையாட்டுக் கழகம் 93; பாரிஸ் தமிழர் கல்வி விளையாட்டுக் கழகம் காந்திஜி விளையாட்டுக் கழகம், சண்டோஸ் விளையாட்டுக் கழகம், மன்னார் விளையாட்டுக் கழகம், செந்தமிழ் விளையாட்டுக் கழகம்.

இறுதி ஆட்டத்தில் ஈழவர் விளையாட்டுக் கழக சிவப்பு அணி எதிர் பாடும் மீன் விளையாட்டுக் கழக சிவப்பு அணி என்பன மோதிக்கொண்டன. முடிவில் ஈழவர் விளையாட்டுக் கழகம் சிவப்பு அணி 3-1 கோல்களால் வெற்றிபெற்று வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

சிறந்த வீரர்களாக செல்வன் ரமணன் (ஈழவர் வி.க.) செல்வன் ரஞ்சன் (பாடும் மீன் வி.க.) ஆகியோரும் இறுதியாட்ட சிறப்பு வீரராக செல்வன். ஆதவன் (ஈழவர் வி.க.) தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

- வீரன் -

# SIKARAM

# சிகரம்

**10 வருடங்களாக எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த எமது வாடிக்கையாளர்களிற்கு சிகரம் ஸ்தாபனத்தார் புதுவருடவாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்**

எமது பணமாற்றுச் சேவையில் 1 மணித்தியாலத்தில் கொடுப்பதற்கான புதிய சேவை ஒன்றும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பட்டுப்புடவைகள்,
ஆண், பெண்களிற்கான சகல புடவை வகைகள் சிறுவர் சிறுமியர்களுக்கான ஆடைகள், எவர்சில்வர் பாத்திரங்கள், மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், பதப்படுத்திய மீன் வகைகள் அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள



## சிகரம்

**Schoenegg Str-15**
**8004.Z.H**

மேலும் விபரங்களிற்கு:

**T.P: 01 2912862**
**01 2913951**
**Rest: 01 2422718**
**H.P: 079-3008759**
**079-6225077**
**Fax: 01 2913534**

**Singapore Conduct N°:**
**0065 - 96171175**
**Tel&Fax: 0065 7430644**

உரிமையாளர்- சேகர்

# குடிநீரின்றி இறந்த படையதிகாரி

(24.04.00)

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இயக்கச்சியில் கொல்லப்பட்ட 51-1 படையதிகாரியான கேணல் வாதியா ஜெயதிலக குடிநீரின்றி உடல்வரட்சி காரணமாக பலியானதாக பிரேத பரிசோதனையின் மூலம் தெரியவந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் சிறீலங்காவின் முன்னாள் படைத்தளபதியான லெப்.ஜெனரெல் கமில்டன் வனசிங்காவின் மருமகனாவார்.

இதேவேளை, இயக்கச்சிப் படைமுகாமில் இருந்த பலர் குடிநீர் இல்லாத நிலையில் நாவரண்டு இறந்ததாகவும், சிலர் முகாம் தாக்குதலுக்கு உள்ளாகும் முன்னரே முகாமைவிட்டு தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனையிறவு படையினருக்கான குடிநீர் பரந்தனிலும், இயக்கச்சிக்குக் கிழக்காக உள்ள பகுதிகளிலும் இருந்து பெறப்பட்டன. பரந்தன் நிலைகளை விடுதலைப் புலிகள் கைப்பறியதை அடுத்து இயக்கச்சிக்கு கிழக்குப் பகுதியில் இருந்து மட்டுமே இராணுவத்தினர் குடிநீரைப் பெற்றுவந்தனர். இந்நிலையில் இயக்கச்சிப் பகுதியில் இருந்த குடிநீர் நிலைகளையும் புலிகள் தாக்கியழித்ததையடுத்து படையினர் குடிநீரின்றி பெரும் இழப்புக்களை சந்தித்தாக இப்போது தெரியவருகிறது.

# புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவராக முன்னாள் இராணுவத்தளபதி

(23.04.00)

சிறீலங்கா அரசினால் வடமாகாண மீள்குடியமர்வுப் புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவராகவும், அத்தியாவசிய சேவைகள் பதில் ஆணையாளராகவும் மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ். குடாநாட்டில் சிறீலங்கா படைகளின் கட்டளை அதிகாரியாகவும், இராணுவப் பேச்சாளராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த டிசெம்பரில் இவற்றில் இருந்து ஓய்வுபெற்றிருந்தார். இந்நிலையில் இவருக்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதிகார சபையின் தலைவராக என்.கே. ஒபடகே இதுவரை காலமும் இருந்து வந்தார்.

# தேவையானால் படையினர் ஆனையிறவை கைப்பற்றுவார்கள்

ஆனையிறவுத்தளத்தில் இருந்து படையினர் தந்திரோபாயரீதியாக பின்வாங்கியதாகவும், நவீன ஆயுதமும் ஆட்பலமும் இருந்தால் விடுதலைப் புலிகளின் தாக்குதலை முறியடிக்க முடியும் எனவும் சிறீலங்காவின் முப்படைத் தளபதி மேஜர் ஜெனெரல் சிறீலால் வீரசூரிய கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் நேற்று நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். ஆனையிறவு இழக்கப்பட்டது தொடர்பாக பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, இராணுவத் தளபதி பலகல்ல பதிலளிக்கையில், ஆனையிறவு தேவையானால் இராணுவத்தினர் மீண்டும் அதனைக் கைப்பற்றுவார்கள் எனத் தெரிவித்தார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## இராணுவம்....

நாள் அதிகரித்து வருகையில் அங்குள்ள நிலைமைகளுக்கு முகம் கொடுக்கும் விதத்தில் அதற்காக நாம் தயாராக வேண்டும் என்ற மனோநிலை எமக்கு உருவாக வேண்டும். அதேவேளை, நாம் எமது இளைஞர்களை ஏற்கனவே இதற்காக பயிற்றுவித்து வருகிறோம் என அவர் மேலும் கூறினார்.

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

## சந்திரிகா......

கொழும்பு நிலைப்பாடுகளைப் பொறுத்தவரை, மிகப் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தப்போகின்றது என்பதில் எந்த வித ஐயப்பாடும் இல்லை. ஏற்கனவே பல கடும் தடுமாற்றங்களை படைத்தலைமை மட்டத்தில் உருவாகிவிட்டது. சந்திரிகாவிற்கும் படையதிகாரிகளுக்கும் இடையில் பெரும் முரண்பாடுகளையும் தோற்றுவித்துள்ளது. படைத்தளபதிகளை மாற்றுவதால் வெல்லக்கூடிய போரென்ற ஒரு மாயையில் சந்திரிகா அரசு இருக்கின்றது. பலகீனம் வேறு எங்கோ இருக்கின்றது. அதை அவர்கள் படைத்தலைமையில் தேடுகின்றார்கள். பலவீனம் அங்கில்லை. பலவீனம் அடிப்படையிலேயே உருவாகிவிட்டது. 90ம் ஆண்டிலே இந்தியப் படையினரால் உருவாக்கப்பட்ட ஒட்டுப்படைகள் (தமிழ்க் குழுக்கள்) எவ்வாறு சிதைந்த ஓடின என்பது ஞாபகம் இருக்கும். அவர்களிடம் பெரும் ஆயுதங்கள், பல வளங்களும் இருந்தன. ஆனால் கஞ்சிகுடிச்சாறு பகுதியில் இருந்து புறப்பட்ட புலிகள் அவர்களை யாழ்ப்பாணம் வரை விரட்டி, அங்கிருந்து இந்தியா வரை ஓடவைத்தார்கள்.

ஆனபடியால், புலிகளுக்கு வெற்றி நிச்சயம் என்கின்ற மனோநிலை படையினருக்கு ஏற்பட்டுவிட்டால், பிறகு அவர்கள் ஓடுவதை நிறுத்த முடியாது.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழகத்தில்......

வித்துக்கொள்கிறேன்.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் அத்தனை அமைப்புக்களும் கூட்டாக இந்த வெற்றியை உரிய முறையில் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறேன். மே 7ம் திகதி சிதம்பரத்தில் நடைபெற இருக்கும் தமிழீழ ஆதரவு எழுச்சி மாநாடு ஆனையிறவு வெற்றி மாநாடாக நடாத்தப்படும் என அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழர் மனித......

திரு. பொன்னம்பலம் அவரின் கிறிமினல் சட்டவாதத்தினால் புகழ்மிக்கவர் என மழுப்பலாகப் பேசியுள்ளார்!

தமிழர் மனித உரிமை மையத்தின் செயல்பாடுகள், ஐநா. பாதுகாப்பு அதிகாரிகளின் எச்சரிக்கையையும் ஏளனம் செய்துவிட்டு துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகளை ஐ.நா. மண்டபத்தினுள் போடுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். அவர் மேலும் கூறியதாவது அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்படியாகச் செயற்படும் பிரதிநிதிகளுக்கு ஐ.நாவில் சமூகம் அளிப்பதற்கு அனுமதிவழங்கப்படாது என வேண்டிக்கொண்டார்.

தமிழர் மனிதர் உரிமை மையம் ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தொடருக்கு இலங்கையின் வட-கிழக்கில் நடைபெறும் மனிதர் உரிமை மீறல்களைத் தொகுத்து அறிக்கை சமர்ப்பிப்பது வழக்கம். இம்முறை திரு. குமார் பொன்னம்பலத்தின் படுகொலை பற்றிய அறிக்கை சிறீலங்கா அரசை சர்வதேச அரங்கில் தலைகுனிய வைத்துள்ளது. இதன் பிரதிபலிப்பே சிறீலங்கா அரச பிரதிநிதியின் சீற்றம்.


சுஜி சலூன்
Sugi Coiffure

ஆனையிறவுச் சமரில் வீர காவியம் படைத்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கு எமது ஸ்தாபனத்தின் வீர வணக்கங்கள்.

பாரிசில் 10 வருட அனுபவம் பெற்ற தொழில் வல்லுநர்களின் சேவையில், புதிய ஸ்தாபனம்

முடிவெட்ட 40 Frs மட்டுமே

4, Rue Ordener
75018 Paris.

Tél: 01 42 09 75 80
M°: Marx Dormoy
Bus: 60 / 65


தொடர்புகட்கு: நயினை பாலன்

Pub.


# மரண அறிவித்தல்

பிறப்பு: 11.05.1959

இறப்பு: 23.04.2000



## திரு. வேலையா சுப்பையா

கொழும்பைப் பிறப்பிடமாகவும் பிரான்சைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு. வேலையா சுப்பையா அவர்கள் 23.04.2000 அன்று இயற்கை மரணம் எய்திவிட்டார்.

இவர் திரு. திருமதி வேலையா அவர்களின் அன்பு மகனும், பிரான்சைத் தற்காலிக வதிவிடமாகவும் தமிழீழம் வட்டுக்கோட்டை கலைநகர் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும்கொண்ட திருமதி பரமேஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும், செல்வி சுயங்கியின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அன்னாரது பூதவுடல்,
CENTRE HOSPITALIER VICTOR DUPOUY
69, Rue du Lieutenant Colonel Prudhon
95107 Argnteuil என்ற இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு: *S.N.C.F Argenteuil* இல் இருந்து *Bus N°: 8* இல் தரிப்பிடம் *Prudhon* இல் இறங்கவும் இறுதிக் கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு: T.P: 0140861739
முகவரி: 5, Rue Mortinat,
92600 Asnieres Sur/ Seine

Pub.


ஜுவல்லர்ஸ்

திங்கள் தவிர்ந்த வாரத்தில் ஒவ்வொரு நாட்களும் காலை 10.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரை திறந்திருக்கும்

மங்கையர்க்கொரு மாளிகை தங்க மாளிகை

Thanga Maligai Jewellers
Amalia House

276, Lewisham High Street,
London,
SE13 6JZ.

Tel: 020 8690 3686
Fax: 020 8690 4157

Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# பலாலியைப் பாதுகாக்க குவிக்கப்படும் படையினர்

(24.04.00)

சிறீலங்காவின் இராணுவ இயந்திரத்தின் மனோ நிலையை ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சி சிதறடித்துள்ளதால், இராணுவத் தலைமையகத்தில் பெரும் குழப்பகரமான நிலைமை உருவாகியுள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கில் தற்பொழுது இருக்கும் ஒரேயொரு பெரிய தளமான பலாலித் தளத்தையாவது எப்படியும் புலிகளிடம் இருந்து காக்கவேண்டும் என்ற மனோ நிலை இராணுவத்தரப்பில் ஒரு சாராருக்கும், இனிமேல் வடக்கில் விடுதலைப் புலிகளிடம் இருந்து தப்பிப்பது இயலாது என மற்றொரு சாராருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன.

இராணுவத் தலைமையகத்தின் நிலை இவ்வாறிருக்க, தற்பொழுது பலாலித்தளத்தை காப்பதற்கான அவசர ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பலாலிப் படைத்தளத்தின் சகல சிப்பாய்களின் விடுமுறைகளும் மறு அறிவித்தல்வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களது கடமை நேரமும் உயர்த்தப்பட்டுள்ளது. குறிப்பாக தளத்தின் விமான ஓடுபாதையைச் சுற்றி கடுமையான இராணுவச்சங்கிலியொன்று அமைத்துள்ளது. ஆனையிறவுத் தளச்சமரில் காயமடைந்த படையினர் தொடர்ந்தும் கொண்டுவரப்பட்டுக் கொண்டிருப்பதால் அவர்களைக் கொழும்பிற்கு அனுப்பிவைக்க இருக்கும் ஒரேயொரு மார்க்கமான வான்மார்கப் போக்குவரத்தை காத்துக் கொள்வதற்காகவே இந்த நடவடிக்கைகள் எனக் கூறப்படுகிறது.

## தமிழர் மனித உரிமை மையம் மீது ஐ.நாவில் சிறீலங்கா பிரதிநிதி சீற்றம்

ஜெனிவாவில் தொடர்ந்து நடைபெறும் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் 56வது கூட்டத்தொடரில் உரையாற்றிய சிறீலங்காவின் பிரதிநிதி திருபள்ளியகாரா தமிழர் மனித உரிமை மையம் -(TCHR) பிரான்ஸ், தமிழர் தகவல் நிலையம் (TIC -லண்டன்) ஆகிய அமைப்புக்களை காரசாரமாகக் கண்டித்துள்ளார்.

அவர் கூறியதாவது, 'தமிழர் தகவல் நிலையம் - லண்டன் திரு. நீலன் திருச்செல்வத்தின் கொலையை நியாயப்படுத்தியுள்ளதாகவும், தமிழர் மனித உரிமை மையம் (TCHR) ஐ.நா. மண்டலத்தினுள் ஐ.நா. கோட்பாடுகளை மீறி வேலைசெய்வதாகவும், இவையாவும் இந்த மனித உரிமை ஆணைக்குழுவினால் கண்டிக்கப்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இவர் தனது உரையில் திரு. நீலன் திருச்செல்வத்தின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தியதுடன், திரு.குமார் பொன்னம்பலத்தின் மறைவு ஜனநாயக நீரோட்டத்திற்குக் கிடைத்த இன்னுமொரு இழப்பு எனக் கூறியுள்ளார். திரு.குமார் பொன்னம்பலத்தை ஓர் பிரபல வழக்கறிஞர் என்று கூறிய சிறீலங்காப் பிரதிநிதி,

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## தமிழகத்தில் ஆனையிறவு வெற்றி மாநாடு

(24.04.00)

தமிழகம் சிதம்பரத்தில் ஆனையிறவு வெற்றி மாநாடு நடத்தப்படவுள்ளதாக தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒழுங்கிணைப்புக் குழு தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில், சிங்கள இராணுவத்தின் மிகப்பெரியதும், வெற்றிகொள்ள முடியாது என்று கருதப்பட்டதுமான ஆனையிறவு முகாமை அடியோடு அழித்து, விடுதலைப் புலிகள் வெற்றிக்கொடி நாட்டிய செய்தி தமிழர்களின் காதுகளில் தேனாகப் பாய்ந்துள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற நிகழ்ச்சிகளில் ஒன்றாக இது பதியப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை மீண்டும் புலிகள் கைப்பற்றும் நாள் வெகு தூரத்தில் இல்லை. தமிழீழ விடிவு கண்ணுக்குத் தெரியத் தொடங்கிவிட்டது. தன்னிகரற்ற இராணுவ வல்லுநராக பிரபாகரன் உயர்ந்து, தமிழினத்திற்கு என்றும் அழியாத பெருமையை தேடித்தந்துள்ளார். அவருக்கும் அவரது தலைமையில் போராடி வரும் விடுதலைப் புலிகளுக்கும் தமிழர்கள் சார்பில் நெஞ்சம் நிறைந்த பாராட்டுதலை தெரி

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## இராணுவம் தோற்றால் நாம் வடக்கிற்கு செல்வோம்

(24.04.00)

வடக்கில் யுத்தத்தில் பாதுகாப்பு படையினர் தோல்வியை தழுவுகிறார்கள் எனத் தெரியும் பட்சத்தில் நாம், அங்கு சென்று அவர்களுக்கு உதவி புரிவதற்காக சிங்கள உருமைய கட்சியின் இராணுவப்பிரிவின் இளைஞர்கள் தயாராக இருப்பதாகவும், வடக்கே சென்று புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்ய ஆயுத்தமாக இருப்பதாகவும் பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய அமைப்பெனும் சிங்கள இனவாத அமைப்பின் செயலாளர் கமான் தேசப்ரிய தெரிவித்தார்.

வடக்கில் யுத்தம் நாளுக்கு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## சிதறிக்கிடக்கும் சிப்பாய்களின் சடலங்கள்

(24.04.00)

ஆனையிறவுத் தளத்தின் வீழ்ச்சிக்கு பின்னர் கண்டிவீதியின் மேற்குப் பகுதிப் பிரதேசங்களிலும், குறிஞ்சாத்தீவுப் பகுதியிலும், இயக்கச்சியின் வடபகுதியிலும் ஏராளமான சிறீலங்காச் சிப்பாய்களின் சடலங்கள் இன்னமும் சிதறிக்கிடப்பதாகவும், அழுகிய நிலையில் இச்சடலங்கள் காணப்படுவதாகவும், விடுதலைப் புலிகள் இவற்றைத் தொடர்ந்தும் மீட்டு வருவதாகவும்" செய்திகள் தெரிவிக்கின்றன.

இது ஒருபுறமிருக்க, விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் தீப்பிடித்துக்கொண்ட 54வது படையணியின் ஆயுதக்களஞ்சியம் இன்னமும் எரிந்துகொண்டிருப்பதாகவும், வெடிப்பொருட்கள் இடையிடையே வெடிப்பதால் இத் தீயை அணைப்பதற்கான முயற்சிகள் எதனையும் மேற்கொள்ள இயலவில்லை எனவும் தெரியவருகிறது.

தீப்பிடிக்காத நிலையில் இருந்த மற்றையை ஆயுதங்களஞ்சியங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

K.R.S. ENTERPRISES
கே.ஆர்.எஸ். என்ரபிறைசெஸ்
537 High Road,
Wembley
Middlesey, HA0 2DJ,
Tel: 0181- 9024590
நிர்வாகி: G.சதீஸ்
Pub



★Leela அரிசிமா - 89P ல் இருந்து
★Kingfish- 2.59 ல் இருந்து
★நீலக்கால் [துப்பரவு செய்த] நண்டு £3.89 ல் இருந்து
★20 Kg Broken Basmath £7.99 இலிருந்து
★CD 2.99 இல் இருந்து - ★Audio 99 இல் இருந்து
★நல்லெண்ணை £3.49; 1/2 போத்தல் £1.79
★அனைத்துத் தொலைபேசி அட்டைகளும்
10% விலைக் கழிவில்
£20 இற்கு மேல் கொள்வனவு செய்தால்
1 Kg லீலா அரிசிமா இலவசம்!
லீலாவின் அனைத்துத் தயாரிப்புக்களும்
மலிவு விலையில்!!